பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

புதுமை : 01 | 08 ஒக்டோபர் 2016 | விதி : 17



## அம்மா நலமா...?
ஜெ: இன்னும் விலகா மர்மம்

## "பெண் போராளியாகவே வாழ்ந்தேன்...!"
- இந்திய நடிகை



# ஒரு தொழிற்சாலையும் மீளுயிர்ப்புக் கனவுகளும்

ஆர்.ஜெயந்தன்

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையும் ஒன்று. ஆனாலும் இன்னும் சில வருடங்களில் அப்படி ஒரு தொழிற்சாலை இருந்த சுவடே தெரியாமல் உருக்குலைந்து போகும் நிலை உருவாகியுள்ளது. போர் முடிவுற்று இன்றைக்கு 08 வருடங்கள் கடந்தும் காங்கேசன்துறை தொழிற்சாலைக்கு எந்த வித விமோசனமும் ஏற்படவேயில்லை.

1950 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தான் யாழ்.மாவட்டத்தில் அமையப் பெற்ற மிகப் பெரிய தொழிற்சாலையாக விளங்கியது.

சுமார் 687 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட இத் தொழிற்சாலையானது 1300 வரையான தொழிலாளர்களைக் கொண்டு இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர இதர பணிகளுக்காக தற்காலிகத் தொழிலாளர்களும் பணி புரிந்து வந்தனர். இங்கு வருடமொன்றுக்கு 760,000 மெற்றிக்தொன் சீமெந்து உற்பத்தி இடம் பெற்று வந்தது.

1990 களில் இடம்பெற்ற போர்ச் சூழ்நிலை காரணமாக சீமெந்து தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் யாவும் முற்றாக நிறுத்தப்பட்டன. தொழில் நடவடிக்கைகள் முடக்கப்பட்டதால், தொழிலாளர்கள் நிர்க்கதியாக்கப்பட்டனர். போராட்ட சூழலைச் சாதகமாக்கிக் கொண்டு சீமெந்து தொழிற்சாலையையும் அதனுடனான பாரியளவிலான நிலப்பரப்பையும் இலங்கை இராணுவத்தினர் கையகப்படுத்திக் கொண்டு, குறித்த நிலப் பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாகவும் அடையாளப்படுத்திக் கொண்டனர்.

இப்போது காங்கேசன்துறைப் பிரதேசத்தின் ஒரு பகுதி நிலம் விடுவிக்கப்பட்டு, அங்கு மக்கள் மீளக் குடியேறி வருகின்றனர். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் ஒரு பகுதி எல்லை வரை மக்களின் காலடித்தடம் பதிவதற்கான சந்தர்ப்பம் இன்று கைகூடியுள்ள போதும், சீமெந்து தொழிற்சாலை இன்னமும் உருக்குலைந்த எலும்புக் கூடாகவே நின்று கொண்டிருக்கிறது.

## பழைய குருடியும் கதவு திறத்தலும்

தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பலமுறை வெவ்வேறான அறிவிப்புகள் வந்த வண்ணமே இருந்தன. 2008 இல் இந்திய நிறுவனம் ஒன்று காங்கேசன் தொழிற்சாலையை பொறுபெடுத்து நடத்தப் போவதாகக் கூறப்பட்டது. அதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டிருந்தன. தொழிற்சாலையை மீள மைக்கும் பணிகளும் இடம் பெற்றன. ஆனால் என்ன நடந்ததென்று தெரியவில்லை. அந்தப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டன. 2014 ஆம் ஆண்டளவில் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனமும் அதன் அரச பங்காளர்களும் இணைந்து 1.5 பில்லியன் ரூபா முதலீட்டில் தொழிற்சாலையை பகுதியளவில் கட்டியெழுப்ப முன் வந்திருந்தனர். ஆயினும் இச் செயற்பாடுகளும் பேச்சளவிலேயே முற்றுப் பெற்றுவிட்டது.

இதேவேளை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீட்டு அடிப்படையில் முன் வந்திருந்தனர். சீமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு 4 ஆயிரம் கோடி ரூபா நிதி தேவைப்படுகின்ற போதும் குறித்த நிதியை முதலீடு செய்வதற்கு கொரியா, இந்தியா, சீனா, சவுதிஅரேபியா போன்ற நாடுகள் முன் வந்த போதும் அவை தொடர்பான பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே காணப்பட்டன. அதன் பின்னரும் "இதோ, அதோ" என காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையின் மீளுயிர்ப்புக் கதைகள் உலவவே செய்தன. எல்லாமே கானல் நீர்தான்.

கடைசியாக கடந்த 25.04.2016 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், சீமெந்துக் கூட்டுத்தாபன தலைவர் ஹிசைன் பைலா, சீமெந்துக் கூட்டுத்தாபன பணிப்பாளர் ரியாஸ் சாலி போன்றோர் தமிழ் தலைமைகளுடனும் வடக்கு மாகாணசபை பிரதிநிதிகளுடனும் யாழ் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். இதில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது என்ற முடிவும் எடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தொழிற்சாலையை அமைச்சர்கள், அதிகாரிகள் போன்றோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். ஆனால் இற்றைக்கு பலமாதங்கள் கடந்தும் அது தொடர்பான எந்தவொரு காய் நகர்த்தலும் முன்னெடுக்கவில்லை. இதுவும் பழைய குருடி கதவைத் திறந்த கதைதான் போல.

## சூறையாடப்படும் வளங்கள்

"பொதுமக்களால் உள்நுழைய முடியாத உயர் பாதுகாப்பு வலயத்தின் உள்ளே அகப்பட்டிருந்த கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலையின் இயந்திரப் பாகங்கள், இரும்புக் கேடர்கள், ஏனைய உபகரணத் தொகுதிகள், இரும்பு உலைகள் போன்றவை மிக அண்மைக் காலங்களில் துண்டாடப்பட்டு பழைய இரும்பு விற்பனைக்காக அவை அகற்றப்பட்டிருந்தன. அதன் மூலம் கிடைத்த 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்களில் கொள்ளுப்பிட்டியில் 25 மாடிகள் கொண்ட அலுவலகம் அமைக்கப்படுகின்றது" என 15-12-2015 அன்று பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பி பாரளுமன்ற உறுப்பினர் சுனில் ஹத்துன் நெத்தி தகவல் வெளியிட்டிருந்தார்.

இராணுவத்தினரின் ஒத்தாசையுடன் பழைய இரும்பு விலையில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையின் உயிர்நாடிகளான இயந்திரத் தொகுதிகளும், இரும்பாலான ஏனைய கட்டடப் பொருட்களும் இப்படி அடிமாட்டு விலைக்கு வாங்கப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதை பலரும் அறிந்தே இருந்தனர். ஆனாலும் அன்றைய ஆட்சியில் இதுபற்றி வாய் திறந்தால் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை இருந்ததால் எல்லோரும் ஊமையாகி நின்றனர். இரவு பகலாக வெட்டி கப்பல் கப்பலாகபோன இரும்பால் அப்போதைய ஆட்சியாளர்களின் குடும்பத்தவர்களுக்கு பேரீச்சம் பழங்களுக்கு பதிலாக மில்லியன் கணக்கில் பணம் கிடைத்தன. இனி ஒரு போதுமே அந்தத் தொழிற்சாலை இயங்கக் கூடாது என்ற முனைப்பும், மண்தின்னும் இரும்பை நான் தின்றால் என்ன என்ற "நல்லெண்ணமுமே" இப்படி ஒரு தொழிற்சாலையை ஒரு அரசாங்கமே குற்றுயிராக்கும் நிலையை உண்டுபண்ணியது.

## மீள ஆரம்பிப்பதால் ஏற்படும் நன்மைகள்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீளவும் புத்துயிர் பெறுமாக இருந்தால், வடக்கில் பல நூற்றுக் கணக்கானோர் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக் கூடிய சாதகமான சூழல் உருவாகும். சுமார் 1200 தொடக்கம் 1300 வரையான தொழிலாளர்களை நேரடியாக உள் வாங்கிக் கொள்ளும் இத் தொழிற்சாலை மூலமாக பல நூற்றுக் கணக்கானோர் மறை முகமாகவும் தொழில் வாய்ப்பினை பெற முடியும்.

இன்று சந்தையில் 50 கிலோ கிராம் சீமெந்துப் பை ஒன்றின் விலை 950 தொடக்கம் 1000 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கு சீமெந்தைக் கொண்டு வருவதில் உள்ள போக்குவரத்துச் செலவீனங்கள் உள்ளடங்கலாகவே சீமெந்துப் பையின் விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. குறித்த விலையானது மாவட்டத்துக்கு மாவட்டம் தளம்பல் நிலையிலையே உள்ளது. எனவே யாழ்ப்பாணத்தில் சீமெந்து தொழிற்சாலை ஆரம்பிக் கப்படுமாக இருந்தால் விலையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வடக்குப் பகுதியில் ஏனைய இடங்களை விடவும் மலிவான விலையில் சீமெந்தை பெறமுடியும்.

உள் நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரிக்கப்படுவதனால் சீமெந்து இறக்குமதியைக் கணிசமான அளவு குறைப் பதற்கான சந்தர்ப்பமும் ஏற்படும். அத்துடன் விலை நிர்ணயத்தில் சாதகமான நிலையையும் ஏற்படுத்தவும் முடியும்.

## சவால்களும் காத்திருக்கின்றன

எப்போதும் எந்த விடயத்துக்கும் இரு பக்கங்கள் உள்ளன. காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் எவ்வளவு நன்மைகள் உள்ளனவோ அதேயளவுக்கு எதிர்மறையான விடயங்களும் ஏற்படும் சாத்தியம் அதிகம். இதில் முக்கிய சவாலாக அமைவது சுண்ணாம்புக்கல் அகழ்வு தான். சீமெந்து உற்பத்தியின் பிரதான மூலப் பொருளாக சுண்ணாம்புக்கல் காணப்படுகின்றது. காங்கேசன் தொழிற்சாலைக்கு தேவையான சுண்ணாம்புக்கற்கள், அதனை அண்மித்த பிரதேசங்களிலேயே அகழ்ந்தெடுத்து உற்பத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதர சேர்க்கைப் பொருட்களான கிளே மண், மன்னார் முருங்கன் பிரதேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதுடன், கிளிங்கர் என்ற மூலப் பொருள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.





சீமெந்து உற்பத்திக்காக, சுண்ணாம்புக்கல் அகழ்ந்து எடுக்கப்பட்டால், கடல் நீருடன் நன்னீர் கலக்கும் அபாயம் இருப்பதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், வட மாகாணசபையில் பிரேரணை ஒன்றையும் சமர்ப்பித்து தொழிற்சாலை மீளஆரம்பிக்கும் செயற்பாட்டை கைவிடுமாறும் கூறியிருந்தார். அத்துடன் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட்டால், அதிலிருந்து வெளியேறும் மாசுக்களால் மக்கள் உடல் நலக் கேடுகளையும், விவசாயப் பாதிப்புக்களையும் எதிர்கொள்வார்கள் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

சீமெந்து தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பாக, அங்கு பணியாற்றிய ஆ.அருளானந்தன் என்பவர் கூறுகையில், தொழிற்சாலை இயங்கி வந்த காலத்தில் தொழில் நிலையில் அனைவரும் திருப்தி கொண்டிருந்ததாகவும், இன்று தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினையும் தமது பிரதேச தலைமைத்துவங்களின் பொறுப்பற்ற தன்மைகளையும் அவர் சாடினார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# பண்ணைக் கொலைகள்



சிம்மலிங்கம் றெஜினோல்ட்

பதினாறு பதினேழு வயதில் தனியாக ஊர் சுற்றுவது ஒரு அலாதியான விசயம். அதிலும் ஓ.எல் சோதினை என்கிற க.பொ.சா.தரப் பரீட்சையை எழுதிய பிறகு, ஒரு பெரிய மனிசத் தோரணை வருமே, அந்த நேரத்தில் சிறகுகள் தானாக முளைத்து விடும். அப்பொழுது வானமே சிறுத்துத் தெரியும். அந்தப் பருவத்தில் கண்டபாட்டுக்கு ஊர் ஊராக அலைந்தேன். அலைந்தேன் என்றால், ஊர்பார்ப்பதற்காக இல்லை. எல்லாம் பிழைப்புத்தேடித்தான். பஞ்சத்தில் படுத்த குடும்பத்தில் பிறந்தவன் பொழுதைப் போக்குவதற்காக ஊர் சுற்ற முடியுமா? பிழைப்புத் தேடிப் பலரும் நகரங்களுக்குப் போவார்கள். நான் கிராமங்களுக்குப் போனேன். என்னவோ தெரியவில்லை. அந்த வயதிலேயே கிராமங்கள் தான் பிடித்திருந்தன. அதிலும் வன்னிக் கிராமங்கள். வன்னிக் கிராமங்கள் என்றால் பெரும்பாலானவை, விவசாயக் கிராமங்களே. விவசாயம் செய்ய விரும்பியவனுக்கு இதைவிட வேறு தெரிவென்ன இருக்கு?

## புதிய கிராமங்கள்

வன்னியில் புதிய கிராமங்களும் இருந்தன. புராதன கிராமங்களுமிருந்தன. புதிய கிராமங்கள், குளங்களை அண்டி உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களால் உருவான கிராமங்கள். இதெல்லாம் 1950 க்குப் பிந்தியவை. இவற்றிலே வெங்காயம், மிளகாய், மரவெள்ளி, உழுந்து, பயறு, நிலக்கடலை, இராசவள்ளி, கத்தரி, வெண்டி, தக்காளி என்று மரக்கறிப்பயிர் அல்லது சிறுதானியச் செய்கை பண்ணுவார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வந்து குடியேறியவர்களே பெரும்பாலும் இந்தக் கிராமங்களில் இருந்தார்கள். இவர்களுக்கு உதவியாகக் கூலிகளாக இருந்தவர்கள் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள். தென்பகுதியில் நடந்த வன்முறை வன்னியில் குடியேறிய யாழ்ப்பாணத்தாருக்கு தாராளமாகக் கூலிகளைக் கொடுத்தது.

புராதன கிராமங்களுக்குக் காலம் நீண்டது. கரிப்பட்டமுறிப்பு, மணவாளன் பட்டமுறிப்பு எல்லாமே தொல்லூர்கள். அங்கே பெரும்பாலும் நெல்தான் பயிரிட முடியும். நான் நெல் விதைத்தேன்.



வன்னியென்றால் மாடில்லாமல் யாருமே வாழ்வதில்லை. அதனால் மாடுகளையும் வளர்த்தேன். தச்சடம்பனில் மாமா குடும்பம் இருந்தது. மூத்தமகன் மகாலிங்கத்தோடு கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, நெடுங்கேணி வரை போய் மாடுகள் வாங்கி வந்தோம். கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, திரியாய்ப் பகுதி மாடுகள் நீளக்கொம்பன் வெள்ளைகள். எல்லாமே பழுப்பு வெள்ளைதான். பட்டி நல்லாய்ப்பெருகும்.

## ஒன்றுக்கும் குறைவில்லை

நெடுங்கேணியில் லிங்கம் ஸ்ரோர்ஸ் என்றொரு பெரிய கடையும் பெரிய மில்லுமிருந்தது. அதைவிட இன்னும் ஒரு பத்துப் பன்னிரண்டு கடைகள். நெடுங்கேணி அந்தப் பகுதியில் கொஞ்சம் பெரிய, சனப்புழக்கமுள்ள இடம். தனியாகக் கூட்டுறவுச் சங்கமும் ஆஸ்பத்திரியும் பெரிய பள்ளிக்கூடமும் இருந்தன. ஆனால், அப்பொழுது பிரதேச செயலகம் இருக்கவில்லை. கறுப்புக் களிமண். கத்தரியும் மிளகாயும் புகையிலையும் வெங்காயமும் மரவள்ளியும் கரணைக் கிழங்கும் நன்றாக விளையும். வவுனியாவிலிருந்து வந்தும் சிங்களப் பகுதிகளிலிருந்து வந்தும் மரக்கறிகளைக் கட்டிப் போவார்கள். சீசனில் உழுந்தும் நிலக் கடலையும் கொழிக்கும். தை மாசி மாதங்களில் உழுந்தையும் கச்சானையும் கட்டுவதற்காக லொறிகள் வந்து காத்து நிற்பதுண்டு. பாலுக்கும் தயிருக்கும் குறைவில்லை. அதைவிட யாழ்ப்பாணத்திலிருந்து எரு ஏற்றும் லொறிகள் வேறு வரும். ஒவ்வொரு வளவிலும் ஒரு லொறி ஏற்றக்கூடிய எரு மாதத்துக்கு ஒரு தடவை இருக்கும். அந்தளவுக்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகப் பட்டிகள் இருந்தன. ஒவ்வொரு பட்டியிலும் குறைந்தது நாற்பது ஐம்பது மாடுகளாவது இருக்கும். பெரிய பட்டிகளில் 150, 200 என்றிருக்கும். அதுக்கு மேல் வைத்திருப்பவர்களுமுண்டு.

நெடுங்கேணி, கருங்கல்புமி. தண்ணீரில் கல்சியம் கொஞ்சம் கூடுதலாக உண்டு. எல்லாருக்கும் அந்தத் தண்ணீர் ஒத்துக்கொள்வதில்லை. பிறத்தியாட்கள் அங்கே வந்து தண்ணீர் குடித்தால், சலக்கடுப்பில் அவதிப்படுவார்கள். இதனால் வெளியாட்கள் பெரும்பாலும் கொதித்து ஆறிய நீரைத்தான் குடிப்பதுண்டு.

## முதல் பதற்றம்

நாங்கள் கொக்கிளாயிலிருந்து மாடுகளைச் சாய்த்துக்கொண்டு தண்டுவான் வழியாக நெடுங்கேணிக்கு வந்து கொண்டிருந்தோம். பொழுது சாய்கிற வேளை. நடைக்களைப்பைக் கொஞ்சம் ஆற்றிக் கொண்டு, தேநீரைக் குடிப்போம் என்று அருகிலிருந்த கடைக்குள் புகுந்தார் மகாலிங்கம். நானும் எங்களோடு உதவிக்கு வந்து கொண்டிருந்த மற்ற இரண்டு பேரும் கடைக்கு வெளியே போடப்பட்டிருந்த மரக்குற்றிகளில் குந்தினோம்.

அந்த நேரம் சந்தியடியில் கொஞ்சம் பரபரப்பாக இருந்தது. என்ன, ஏது என்று அறிய ஆளுக்காள் முனைந்தார்கள். சைக்கிளில் வந்த ஒருத்தர் சொன்னார், கென்பாமில பிரச்சினையாம். ஆரையோ சுட்டுப் போட்டாங்களாம். சனங்களெல்லாம் பதறியடிச்சுக் கொண்டு வருதுகளாம் என்று.

அப்பொழுது நெடுங்கேணிக்குத் தெற்கே, பெரியகுளம், ஒதியமலை கடந்து போக, எல்லைப்பகுதியில் டொலர்பாம், கென்பாம், எஸ்.ஆர் பாம், காக்கோ போட், சிலோன் தியேட்டர் என்று பல பண்ணைகள் இருந்தன. 25 வருசக் குத்தகையில் 1000 ஏக்கர், 500 ஏக்கர் காணிகளை அரசாங்கம் வருமான வரி செலுத்தும் முதலாளிகளுக்குக் குடுத்திருந்தது. சிலோன் தியேட்டர் கே.ஜி என்கிற பெரிய சினிமா வினியோகஸ்தர் குணரத்தினத்தினுடையது. காக்கோ போட் அல்பிரட் தம்பையாவின்ரை. மாவிட்டபுரம் வாளிக் கொம்பனி சம்மந்தன் வைத்திருந்ததுதான் டொலர் பாம். புன்னாலைக்கட்டுவன் ராசரத்தினத்தினுடயது எஸ்.ஆர் பாம். நாவலர் பாம். இதெல்லாம் ஆயிரம் ஏக்கர் திட்டம்.

இதைவிட, ஆர்.வி.ஜி. பீடிக்கொம்பனி, ஜெகசோதி பற்பொடிக்கொம்பனி, யானை பீடிக்கொம்பனி, புரானி (Burany ) என்கிற கொழும்பு பாய் முதலாளி ஆட்களுக்கு தலா ஐநூறு ஏக்கர் நிலம். எல்லாவற்றிலும் உழுந்து, பயறு, நிலக்கடலை, நெல் எனப் பயிரிட்டிருந்தார்கள். ஆடு, மாடு, பன்றிகள் எனக் கால்நடைகளும் வளர்க்கப்பட்டன. பண்ணைகளில் இன்னொரு பகுதியில் மா, தென்னைகள் என வான் பயிர்களை வேறு நாட்டியிருந்தனர்.

## முதலாளிகளின் தந்திரம்

பண்ணை வேலைகளை இன வன்முறையினால் பாதிக்கப்பட்டு மலையகப் பகுதிகளிலிருந்து வந்திருந்தவர்களும் கலவாய், ஹெப்பிற்றிக்கொலாவ பகுதிகளிலிருந்து வருகிற சிங்களவர்களும் செய்தனர். பெரிய பண்ணைகள் செழித்துப் பேரோடிருந்த காலம் அது. முதலாளிமார் காரில் குடும்பத்தோடு வந்து பங்களா வீட்டில் தங்கி, பண்ணையைச் சுற்றிப் பார்ப்பார்கள். அப்படியே கணக்கு வழக்குகளையும் பார்ப்பர். பிடிகாசை வைத்துக் கொண்டே கூலியாட்களுக்குச் சம்பளத்தைக் கொடுப்பார்கள். அப்படியென்றால்தான், கூலிகள் அடுத்த பண்ணைக்கு மாறிப் போகமாட்டார்கள். முழுச் சம்பளத்தையும் கொடுத்து விட்டால், தங்களுக்குத் தண்ணி காட்டிவிட்டு, இன்னொரு பண்ணையில் வேலைக்குச் சேர்ந்து விடுவார்கள். அல்லது தனியாக எங்காவது போய் காடு வெட்டிப் பிலவில் பயிர் செய்யத் தொடங்கி விடுவார்களல்லவா! எனவேதான் இந்த நுட்பம்.

## வானம் பார்த்த வாழ்வு

பெரும்பாலும் மலையகத்திலிருந்து வந்திருந்தவர்களே இந்தப்பண்ணைகளில் இருந்தனர். டொலர், கென் பாம்களில் 120, 150, குடும்பங்கள் இருந்தன. மற்றப் பண்ணைகளிலும் இப்படித்தான். எல்லாக் குடும்பங்களுக்கும் குடிசைகளிலேயே வாழ்க்கை. மலையகத்தில் லயம் என்றால், இங்கே குடிசை. கூலிகளுக்கு வாழ்க்கை இப்படித்தான், இந்த வானத்தின் கீழும் இந்தப் புமியின் மீதும் விதிக்கப்பட்டதா? பள்ளிக்கூடத்துக்குப் போகும் பிள்ளைகள் குறைவு. வேட்டையும் பண்ணைத் தொழிலும் தான் வாழ்க்கை. இந்த இடத்தில் தான் சிங்கள ஆட்களுக்கும் தமிழாக்களுக்குமிடையில் ஏதோ சண்டையாம் என்று நெடுங்கேணியில் சொன்னார்கள். யாரோ ஒரு சிங்களவரைத் தமிழாக்கள் சுட்டு விட்டார்கள் என்றும் அதனால் சிங்கள ஆட்கள் பாமுக்குள் வந்து அடிதடியில் இறங்கப்போகிறார்களாம் என்றும் தகவல். சிங்களவரைச் சுட்டிருந்தால், நிச்சயமாகப் பொலிஸ் அங்கே போய் பெரிய அட்டகாசம் பண்ணும் என்றும் சொன்னார்கள். அதைவிடக் கலவாய், ஹெப்பிற்றிக்கொலாவப் பக்கத்திலிருந்து சிங்கள ஆட்கள் வந்து கலவரம் செய்யவும் கூடும். நெடுங்கேணிப்பக்கத்திலிருந்து பண்ணைப் பக்கம் போவதற்கு யாரும் தயாரில்லைப்போலிருந்தது. பண்ணைகளிலிருந்துதான் நெடுங்கேணிப்பக்கமாக சனங்கள் வந்து கொண்டிருந்தனர்.

## இயல்பைக் குலைத்த கலவரம்

இந்தப் பண்ணைகள் எல்லாம் வவுனியா திருகோணமலை வீதிக்கும் நெடுங்கேணிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்தவை. உண்மையில் நெடுங்கேணியை விடவும் கலவாய், ஹெப்பிற்றிக்கொலாவ பகுதிகள்தான் கிட்டத்திலிருந்தன. ஆனால், பண்ணைகளில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மலையத் தமிழ்க் குடும்பங்கள் என்பதால், அவர்கள் நெடுங்கேணிக்கே சந்திக்கும் கடைக்கும் ஆஸ்பத்திரிக்கும் என வந்து போனார்கள். பண்ணைகளில் வேலை செய்த சிங்களவர் மட்டும் ஹெப்பிற்றிக்கொலாவ, கலவாய்ப் பகுதிளுக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். கலவரம் என்று வந்தால், இதெல்லாம் குலைந்து விடும்.

நாங்கள் கடையில் தேநீர் குடித்துக் கொண்டிருக்கும் போது முல்லைத் தீவிலிருந்து பொலிஸ் ஜீப் ஒன்று பாம் பக்கமாகச் சீறிக் கொண்டு போனது. பொலிஸ் ஜீப்பைக் கண்டதுதான் தாமதம், சந்தி வெறிச்சது. சைக்கிளைத் தூக்கிகொண்டு, ஒழுங்கைகளுக்குள் அவரவர் இறங்கி விட்டனர். கடைகள் மூடப்பட்டன. யாரும் சொல்லாமலே இப்பிடியொரு ஒழுங்கு.

நாங்கள் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு, தச்சடம்பன் நோக்கி ஒட்டுசுட்டான் வழியாக நடந்தோம். ஏனோ தெரியவில்லை. இரவு நீண்ட நேரம் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலையில் முத்துக்கிருஸ்ணன் வந்து சொன்னார், டொலர்பாமில ஏதோ பிரச்சினையாம். ஆரையோ சுட்டுப்போட்டாங்களாம். அதோட அங்க இருந்த சனங்களின்ரை கொட்டில்களைக் கொழுத்தி, ஐந்தாறு பேரைக் கொண்டிட்டாங்களாம் என்று.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

அரவான்



# அம்மா நலமா?

## பேய் நகரான சென்னை

சென்னையில் இப்படி ஒரு நிசப்தம் நிலவி நான் பார்த்ததே இல்லை. பல வருசம் கழிச்சு, “நைட் ரவுண்ட்ஸ்” போனா ஏதோ பேய் நகருக்குள் சுத்தி வந்த மாதிரி ‘பீலிங்ஸ்’. பரபரன்னு இருக்கற தி. நகர்ல மத்தியானத்துக்கு மேலயே ஆள் நடமாட்டம் குறைஞ்சுடுச்சு. ஆசியாவோட பெரிய பஸ்டாண்ட் கோயம்பேட்டுல, அங்கயும், இங்கயுமா கொஞ்சூண்டு மக்கள். ரோட்டுல ரெண்டொரு வாகனங்களுக்கு மேல காணோம். மிட்நைட் 12 மணிக்கே, இந்த நிலைமை. ரெண்டொரு ‘டிபின்ஸ்டால்’களும், இளைஞர்களை ஈர்க்க சில மூன்றாம் பாலினத்தவர்களும் மட்டுமே சாலையோரங்களில் நிற்கின்றனர்.

ஒருவழியா முக்கியமான இடங்கள் எல்லாத்தையும் பார்த்துட்டு 2 மணிக்கு நம்ம ‘பேவரிட் பிளேஸ்’ அண்ணா மேம்பாலத்துக்கு (ஜெமினி) கீழ வந்தாச்சு. ஒரே ஒரு ஐஸ் கிரீம் தள்ளுவண்டிக் கடைக்கார தம்பி மட்டும் இருந்தார். பிளாட்பார்ம்ல உட்கார்ந்து ரெண்டு ஐஸ் கிரீமை சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் போதே “அண்ணே நானும் கிளம்பறண்ணே. 12 மணிக்கெல்லாம் எல்லா ஐசும் வித்துடும். இன்னைக்கு இவ்வளவு நேரமாகியும் கால்வாசிதான் வித்திருக்கு” என்று சொல்லிக் கொண்டே கிளம்பினார். வீட்டுக்கு வரும்போது 3 மணி. ரெண்டே ரெண்டு இடங்கள்ள மட்டும் போலிஸ்காரங்க “டிரங்க் அன் டிரைவிங்” செக் செஞ்சுட்டு இருந்தாங்க.

இப்படிப்பட்ட நிசப்தமான ஒரு வேறுபட்ட சென்னையை நான் முதன் முதலாகப் பார்க்கிறேன்.

உலா வரும் வேறுபட்ட தகவல்கள் மக்களை உறைய வைக்கிறது என்பது மட்டும் புரிகிறது. இயல்பாகவும், உற்சாகமாகவும், பாதுகாப்பாகவும் மக்களை இயங்க வைக்க வேண்டியது அரசு இயந்திரத்தின் கடமை.

- விஷ்வா விஸ்வநாத் (ஊடாகவியலாளர் தமிழகம்)

அதிகாரத்தில் இருப்பவர்கள் எப்போதும் தமக்கும், மக்களுக்கும் இடையே கண்ணுக்குத் தெரிகின்ற இடைவெளியை மிகக் கவனமாகப் பேணுவார்கள். எப்போதும் இரு புள்ளிகளுக்கிடையே தூரம் அவற்றுக்கிடையே விலகலும் அதிகரிக்கும். ஆனால், இங்கோ இடைவெளிகளின் தூரம் அதிகரிக்க அதிகரிக்க, மக்களுக்கும் அதிகாரத்தில் இருப்பவருக்குமான கவர்தலின் விசை இன்னும் அதிகரிக்கும் விநோத சமன்பாடு நிகழும். சொந்த நாட்டில் இருப்பவர்களை விடவும், புலம்பெயர்ந்துள்ளோருக்குத் தான் தாய்நாட்டின் மீதான காதல் அதிகம். அது போலத்தான் இதுவும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, அரசியல்வாதிகளும், சினிமா நட்சத்திரங்களும் தங்கள் மீதான ‘இமேஜை’ அதிகரிக்க அல்லது தொடர்ச்சியாகப் பேண இப்படிப்பட்ட விலகல் உறவு முறையை மக்களோடு கைக்கொள்வது வழமை. அதிலும் சிலர் இந்த இடைவெளிப்போக்கை அதிதீவிரமாகக் கடைப் பிடிக்கிறார்கள். அவர்களில் இந்தியாவின் இரும்புப் பெண் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் உள்ளடக்கம்.

### அம்மா என்றாலே மறைப்புத்தான்

ஆட்சியில் இருக்கும் போதும் சரி, இல்லாத போதும் சரி ‘அம்மா’ என்று சொல்லப்படுகின்ற ஜெயலலிதாவின் நடவடிக்கைகளை யாரும் மோப்பம் பிடிப்பதென்பது சிரமமான ஒன்றுதான். அந்தளவுக்கு அவரது எல்லா நகர்வுகளும், மிகப்பலமான திரை கொண்டு, மிக அவதானமாக மறைக்கப்பட்டே வந்தன. தேர்தல் கால அரசியல் மேடைகளில், அல்லது சட்டசபையில் மட்டுமே அம்மாவை பெரும்பாலும் நேரில் காண முடியும். அத்தி பூத்தாற் போல, ஏதும் முக்கிய நபர்கள் வீட்டு விசேஷங்கள், பிரசித்தி பெற்ற ஆலய தரிசனங்கள் என்பவற்றின் போது ஜெயலலிதாவைக் காண முடியும். இப்போது அதுவும் இல்லை. வெளிநாட்டு பிரதிநிதிகள் சந்திப்பு, கட்சிப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு, ஏனைய பிரமுகர்களுடனான உரையாடல்கள் எல்லாமே இறுகத் தாழிடப்பட்ட அவரது வாசஸ்தலத்திலேயே நடைபெறும். முதலமைச்சர் தலைமையில் இப்போதெல்லாம் அரச நிகழ்வுகள் தமிழகத்தில் நடப்பது குறைவு. அப்படி நடந்தாலும் கூட ஜெயலலிதா நேரில் வருவதில்லை. “ஸ்கைப்” தொழினுட்பத்தின் மூலம் வீடியோ உரையினை நிகழ்த்தி, வீடியோவில் காட்சி தந்தபடியே தொலைதூர இயக்கியால் (ரிமோட் கொன்றோல்) திறக்க வேண்டிய கட்டடங்களை திறந்து வைப்பார். “கடவுளைக் கூட கண்டுவிடலாம். ஆனால் அம்மாவைக் காண்பது கஷ்டம் தான்” என்று அ.தி.மு.க கட்சிக்காரர்களே சொல்லுமளவுக்கு, ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் யாரும் அறியா வண்ணம் வைக்கப்பட்டிருந்தன.

### எங்கே இருக்கிறார்?

வரலாறு காணாத சென்னை வெள்ள அழிவுகளைக் கூட அம்மா நேரில் சென்று பார்த்து, மக்களுக்கு ஆறுதல் கூறவில்லை என்ற குற்றச்சாட்டு இன்னமும் நீடிக்கிறது.

ஜெயலலிதா, தனியே சென்னையில் மட்டும் வசிப்பதில்லை. அவர் சென்னையில் இருப்பதை விடவும், கொடநாடு எஸ்டேட்டில் உள்ள பங்களாவில் தான் அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.ஆனால் எப்போது சென்னையில் இருக்கிறார், எப்போது கொடநாட்டில் இருக்கிறார் என்பதெல்லாம் ஜெயலலிதாவுக்கு மட்டுமே வெளிச்சம்.

கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் கூட அம்மாவை நினைத்த நேரத்தில் பார்த்துவிட முடியாது. அம்மா மனது வைத்தால் மட்டுமே அவரைப் பார்க்க முடியும். கடைசியாக அம்மாவைப்பார்த்த கட்சியின் முக்கியஸ்தர் அமைச்சர் தம்பித்துரை தான். அ.தி.மு.க சார்பில் எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட சசிகலா, விமான நிலையத்தில் வைத்து திருச்சி சிவா எம்.பியை (தி.மு.க) கன்னத்தில் அறைந்தமைக்காக, அவகை் கூப்பிட்டுக், கண்டித்த ஜெயலலிதா ஒரு கட்டத்தில் சசிகலாவை அடித்தார் என்று சசிகலாவே நாடாளுமன்றத்தில் சொல்லி அழுதிருந்தார். அப்போது சசிகலாவை அம்மாவிடம் அழைத்துச் சென்று, மீண்டும் அவரை டெல்லி வரை கொண்டு சென்றவர் தம்பித்துரை.

அதன் பின்னர் கட்சியின் முக்கிய தலைவர்கள் ஜெயலலிதாவை நேரில் பார்க்கவில்லை. ஆனால் ஜெயலிதாவின் நிழல் என்று சொல்லப்படும் அவரது தோழி சசிகலா மட்டுமே அம்மாவின் நடவடிக்கைகள் அத்தனையையும் அறிந்தவர். (சசிகலா எம்.பி, தோழி சசிகலா இருவரும் வேறு வேறு நபர்கள்) சிலகாலம் தோழி சசிகலாவையும் தூக்கி எறிந்த ஜெயலலிதா பின்னர் அவருடன் சமாதானமாகி, மீண்டும் தன்னருகே வைத்துக் கொண்டார்.

### தொண்டர்களின் கனவு

‘இப்படியெல்லாம் தனக்கும் மக்களுக்கும் இடையே இரும்புப் போர்வையை இழுத்து விட்டு கொண்டதால் தான், தொண்டர்கள் மத்தியில் ஜெயலலிதா பற்றிய விம்பம் பெரிதானது. நேரிலே காணக்கிடைக்காத அம்மா, தேர்தலுக்காக வரும்போதெல்லாம் அவரைப் பார்க்க வென்றே கூட்டம் அலைமோதியது. இந்த “இடைவெளி உறவால்” தான். அம்மாவைக் காண்பதென்பது அ.தி.மு.க தொண்டர்களின் கனவாக இருந்தது. அதனால் அம்மா ஒருமுறை நேரில் அழைத்து கதைத்தாலே தங்கள் உயிரைக் கூட கொடுக்குமளவுக்கு தொண்டர்கள் செயற்பட்டார்கள். எல்லாவற்றுக்கும் ‘இடைவெளி பேணல்’அல்லது ‘திரைமூடல்’ என்ற உத்தியே காரணம்.

### இறக்கை கட்டிய வதந்திகள்

இப்போது அதே உத்திதான், ஜெயலலிதா பற்றிய பல வதந்திகளுக்கும் காரணமாகி விட்டது. எவராலும் அணுகப்பட முடியாதவராக இருந்த ஜெயலலிதா, இப்போது உடல்நலம் குன்றி, அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், அதே திரை மூடலுக்குள் மறைக்கப்பட்டார். நலமாக இருக்கிறாரா? இல்லையா? என்பதை எவராலும் அறிய முடியாத நிலை. இதனால் வதந்திகள் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கத் தொடங்கின. “ஜெயலலிதா இறந்து விட்டார். அவர் மூளைச் சாவு அடைந்த நிலையில் உயிரோடு இருப்பது போல மருத்துவமனை வட்டாரங்கள் நாடகமாடுகின்றன. நிலைமை கட்டுக்குள் வந்ததும் உண்மையை தெரியப்படுத்துவார்கள்” என எழுந்த வதந்தி தமிழகத்தையே நிலைகுலையச் செய்துவிட்டது.

### அது இரும்புப் பெண்ணின் குரல் அல்ல

முதலில் சாதாரண காய்ச்சல் என்ற மருத்துவமனை, பின்னர் அவசர அவசரமாக பிரிட்டனில் இருந்து மருத்துவர் ரிச்சர்ட் ஜான் பீலேயை ( தீவிரமான கிருமித்தொற்று, நுரையீரல் பாதிப்பு, ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்புகளின் செயலிழப்பு, தீவிர சிகிச்சைக்குப் பேர் போனவர்) அழைத்து வந்தமை சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

இதனால் அம்மாவைச் சுற்றிக் கட்டப்பட்ட மர்மங்களின் முடிச்சு, இன்னும் இறுகியது. கடைசியாக கடந்த 4 ஆம் திகதி குரல்பதிவுச் செய்தி ஒன்று “வட்ஸ் அப்” மூலம் வெளியானது.அதில் “நான் நலம். வீண் வதந்திகளை நம்பாதீர்” என்ற சாரப்பட ஜெயலலிதாவின் குரல் மக்களைக் கோரியது. ஆனால் அந்தக் குரல் வழக்கமான இரும்பு பெண்ணாக இருந்த ஜெயலலிதாவின் குரலாக அன்றி, வயோதிகத்தால் உண்டான நோயால் பாதிப்புற்ற ஜெயலலிதாவின் தீனக் குரலாகவே இருந்தது. அந்தச் செய்திக்கு பின்னர் தமிழகம் ஓரளவு வழமைக்கு திரும்புவதாகச் சொல்லப்படுகின்றது. என்றாலும் அம்மா நேரில் வந்தால் தான், மண் சோறு உண்ணல், அலகு குத்தி காவடி எடுத்தல் என்பன போன்ற கட்சித் தொண்டர்களின் கூத்து முடிவுக்கு வரும்.

அளவுக்கு மிஞ்சிய திரையிடலும் ஆபத்தே. அம்மா மிக நல்ல உதாரணம்.

# புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777


## வெட்டுப்புள்ளியும் வெட்டுக்கிளி மனதும்;

இந்த வருட ஐந்தாம் தர “குதிரைப் பந்தய முடிவுகள்” கடந்த வாரம் வெளிவந்துவிட்டன. விலை வாசியைப் போல ஒவ்வொரு வருடமும் புலமைப் பரிசில் வெட்டுப் புள்ளிகள் ஏறிக்கொண்டே போகின்றன. முன்னைய காலங்களில் இரு வினாத்தாள்களிலும் சராசரியாக 75 புள்ளிகளைப் பெற்றாலே பரீட்சையில் சித்தி பெற்றுவிட முடியும். ஆனால் இரு வினாத்தாள்களிலும் இப்போது 75 புள்ளிகளுக்கும் அதிகமாக எடுக்கும் மாணவர்களே புலமைப்பரிசில் பந்தயத்தில் இலக்கை எட்ட முடிகிறது. எனவே புலமைப்பரிசிலில் சித்தி பெறாத மாணவர்கள்கற்பதற்குத் தகுதியில்லாதவர்களா? என்ற கேள்வி எழவே செய்கிறது. புலமைப்பரிசில் பந்தயத்தில் தோற்றுப் போனதாக மற்றையவர்களால் சொல்லப்பட்ட மாணவர்கள் பலர் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், அறிவியலாளர்களாகவும் இன்னும் பல துறைகளில் ஆளுமைகளாகவும் மிளிர்வதை கண்கூடாகக் காணலாம்.

அப்படி இருந்தும் கூட புலமைப் பரிசில் பரீட்சையில் வெல்வதுதான் கற்றலின் ஒரே நோக்கம் என்பதாகப் பெற்றோர் ஆலாய்ப் பறக்கின்றனர். பிள்ளைகளை இயந்திரங்களாக நினைத்து எல்லாவற்றையும் அந்தப் பிஞ்சுகளின் சிறிய மூளைக்குள் திணித்துவிட முயல்கின்றனர். பெற்றோரின் இத்தகைய கற்றல் வன்முறையால் வேறு வழியின்றி பிள்ளைகளும் தங்களுடைய சிறுபராயக் கனவுகளைத் தொலைத்துவிட்டு கரைத்துக்குடிக்கும் இயந்திரங்களாக மாறுகிறார்கள். பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுகிறார்கள். தாம் பூமிக்கு வந்த “வரலாற்றுக் கடமையை” நிறைவேற்றிவிட்ட பூரிப்பில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் புலமைப்பரிசில் வெற்றியை பத்திரிகை வாழ்த்துச் செய்திகளாக பறைசாற்றி ஓய்கிறார்கள். இதனால் ஆண்டுதோறும் வெட்டுப்புள்ளி ஏறிக்கொண்டே போகிறது. ஆனால் பிள்ளைகளோ வெட்டுக்கிளியால் அரிக்கப்பட்ட குழந்தைக் கனவுகளை நினைத்து மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள். இனி அவர்கள் சாதாரணதரம் என்ற அடுத்த பந்தயத்துக்கு ஆயத்தமாக வேண்டும். குதிரைகள் தயார். பெற்றோரும் கடிவாளத்தோடு அடுத்த பந்தயக் களத்துக்கு விரைகிறார்கள். பாவம் குழந்தைகள்தான், தொலைந்து போன கனவை நினைத்து ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

●●●

‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’


**ஊடகத் துறையில்**
**பணிபுரிய ஆர்வமா?**

சமூக, கலை, இலக்கிய, அரசியல் விடயங்களில் ஈடுபாடும், தேடலும், எழுத முடியும் என்ற தன்னம்பிக்கையும் உடைய இளையோருக்கு புதுவிதியில் பணியாற்ற வாய்ப்பு.
ஆர்வமுள்ளோர் எமது மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கவும்.

puthuvithi@gmail.com


## வெகுஜனப் போராட்டங்கள் சிதறடிக்கப்படும் புள்ளி எது ?



○ வே.தினகரன்

மலையக வரலாற்றில் முன்னொரு போதுமில்லாத அளவுக்கு, தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரும் போராட்டத்தை தாமாக முனைப்பாக கையில் எடுத்துள்ளனர். பல்வேறு கால கட்டங்களிலும் சம்பளவுயர்வுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் இன்றைய சூழல், கடந்த காலங்களை விட வலிமையானதாக உயர்ந்து நிற்கிறது. இந்த போராட்டங்கள் மலையக மெங்கும் எதிரொலிப்பதையும், பரவலாகத் தொழிலாளர்கள் இதனை பிரதான பிரச்சினையாகவும் முன்னெடுத்திருக்கின்றனர். அத்தோடு இதைத் தோட்ட ரீதியாகவும், அருகாமைத் தோட்டங்களை ஒன்றிணைத்து, இணைந்த போராட்டமாகவும் முன்னெடுக் கப்படுகின்றன.

இதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்து, சமுக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு எனும் சிவில் அமைப்பு 1000.00 ரூபா சம்பளவுயர்வை வலியுறுத்தியும் 20 ‘பேர்ச்’ காணியுரிமையை வலியுறுத்தியும் மலையகத்தில் பல்வேறு இடங்களிலும் வெகுஜனப் போராட்டங்களை செய்திருந்தது. அந்த போராட்டத்தின் அடுத்த வடிவத்தை மக்கள் தாமாக எடுத்துள்ளார்கள் இன்று. சமுக வலைதளங்களின் வருகை, வீட்டுக்குள்ளும் வெளியிலும் அவர்களுக்கான தொடர்பையும், உற்சாகத்தையும் அளிக்கின்றமையானது, தொழிலாளர் தம் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் தெளிவாக அறியாத நிலையில் போராட்ட காலத்தில் முன்னணியில் நின்று கருத்து கூற விழைகின்றனர்.

இத்தகைய வெகுஜன போராட்டங்களினூடாக மக்கள் தமது சம்பளவுயர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புவது முக்கியமான நிலைமையாகும். இந்த வகையான மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் வலிமை, மிகுந்தன. உலகம் முழுவதும் இடம்பெற்ற வரலாற்று மாற்றங்களுக்கு, ஆதாரமாய் இருந்தவை இத்தகைய வெகுஜன எழுச்சிப் போராட்டங்களே. எனினும் தன்னெழுச்சிப் போராட்டங்களின் வலிமை அதன் எதிர் மறையான விளைவுகளுக்கும் துணையாய்ப் போய்விடும் ஆபத்தும் உள்ளது. வெகுஜன போராட்ட முறைக்கு பழக்கமில்லாத மக்கள் திடீரென ஒன்று கூடி போராட வரும் போது தோன்றும் உற்சாகமும், மித மிஞ்சிய நம்பிக்கையும், உத்வேகமும் அதன் விளைவாக எடுக்கப்படும் திடீர் முடிவுகளும் போராட்டத்தின் நோக்கத்திற்கு பொருந்தாதவையாக அமைந்துவிடுவதுண்டு. இவ்வாறான வேளையில் நாட்டின் தேசிய சட்டங்கள் ஒழுங்குகள் என்பவற்றை மீறி நடப்பது சாதாரணமாகி, முன்னணியில் நின்று வழிப்படுத்தியவர்கள், ஏற்பாட்டார்கள் கைது செய்யப்படுவதும், போராட்டக்காரர்கள் வெவ்வேறு குற்றச் சாக்களின் அடிப்படையில் தனித்தனியே கைது செய்யப்டுவதுவும் நடக்கக் கூடும். இந்நிலையில் இத்தகைய போராட்டங்களால் பயனேதுமில்லை என்ற கசப்பான முடிவை வெகுஜனங்களிடையே கொண்டு சேர்க்கும். பிந்துனுவெவ தொடக்கம் கிறீஸ் மனிதன் வரையிலான பிரச்சினைகளுக்கு எதிராக கிராமிய மக்களின் எழுச்சி இலகுவாக நசுக்கப்பட்டமை நாமறிந்த அண்மைய வரலாறு.

எனவே மக்களிடையே எழுந்திருக்கும் இப்போராட்ட உணர்வை முறையாக ஒருங்கிணைத்து வழிப்படுத்தி உரிய பயனைப் பெற்றுத்தர அரசியல்கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் நேர்மையாக முன் வருவதும், குறைந்த பட்ச ஐக்கியத்தோடேனும் செயற்படுதலும் வேண்டும். இப்போராட்டங்களில் ஊடகங்கள் கீழ்த்தரமான உள்ளக அரசியலையும், தொழிற்சங்கங்களின் 2 ஆம் கட்ட, 3 ஆம் கட்ட தலைவர்களின் பிற்போக்குத் தனமான வழி காட்டல்களும் மலையக தொழிலாளர்களை நாகரியமடையா மக்கள் கூட்டம் போன்று உலகுக்கு காட்டி வருவதும் வருந்தத் தக்கது.

உண்மையில் இம்மக்கள் போராட்டத்தை ஒருங்கிணைக்கும் சக்திகள் தமது அரசியல் செல்வாக்கை பெருக்கவோ, எதிர் தரப்பை சாடவோ, தற்பெருமை பாடவோ இந்த போராட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு யாரேனும் செய்வாரெனின் அது மாபெரும் மக்கள் விரோத, மக்கள் துரோக செயற்பாடாகும்.

**செய்ய வேண்டியவை**

1. அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் அளித்த வாக்குறுதிகளை நினைவிற் கொண்டு, ஆயிரம் ரூபாவினை இறுதிவரை வலியுறுத்துவதும், உறுதியான பேரம் பேசலும், நல்லாட்சி அரசாங்கம் அளித்த வாக்குறுதியின் (கடந்த காலப் பகுதி) இப்பேச்சில் உள்ளடங்க வேண்டும்.



2. காலகாலமாக மாயப்பெட்டி போன்று திறக்கப்படும் கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு, இலங்கையில் நடைமுறையில் உள்ள தொழிற் சட்டங்களுக்கேற்பத் தோட்டத் தொழிலாளர்களை தனியார் துறையினராக கணக்கிலெடுக்கப்பட்டு வரவு செலவு திட்டத்தினூடாகச் சம்பள உயர்வு பெற வழி வகை செய்யப்பட வேண்டும்

3. 200 ஆண்டுகளாக உழைப்பைக் கொடுத்து, தேசத்திற்கு உயிர் கொடுத்த இம் மக்களின் பக்கம் அரசாங்கமும், தொழில் அமைச்சும் நின்று, இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தர முன்வர வேண்டும். கடந்த காலங்களில் கம்பனிகளின் பக்கமும், துரைமார் சம்மேளனம் சார்பாகவுமே அரசாங்கங்கள் துணை நின்றுள்ளன.

அத்தோடு கடந்த 10,15 ஆண்டுகளாகத் தோட்டதுறை மீது தொழிலாளர்களுக்கிருக்கும் நம்பிக்கையீனமும், அக்கறையின்மையும் களையப்பட்டு தோட்டத்துறை மீதும் தமது மண்மீதும் நம்பிக்கையை வரவழைக்க வேண்டும்

இத்தகைய நிலையில் எழும் மக்கள் போராட்டங்களுக்குத்தான் பேரம் பேசும் சக்தி வலுவானதாக இருக்கும். பெருந்தோட்டத்துறை பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது தான் அவற்றினுள்ளே பல்வேறு கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் முன்னேற்ற கரமான நகர்வுகள் இடம் பெற்று மக்களின் வாழ்க்கைத் தரம் மேலுயரும்.



## தொடர்கதை 17

# ஆறாவடு

○ சயந்தன்

சுபத்திரையும் மகளும் கொடிகாமத்தில் ஒரு கோயிலுக்குள் முடங்கியிருந்தார்கள். கோயில் என்றால் தேரும் தேர்முட்டியுமான பெரிய கோயில் இல்லை. ஓலைகளால் வேயப்பட்ட கொட்டிலொன்றை ஒத்ததாக அது இருந்தது. யாரேனும் தனி ஒருவரின் சொத்தாக அது இருக்கலாம். இப்படியான, பரம்பரை பரம்பரையாய்த் தனிக் குடும்பங்களுக்குச் சொந்தமான சிறிய வைரவர், மாயவர், நாகதம்பிரான் முதலான கோயில்கள் இந்தப் பகுதிகளில் நிறைய இருந்தன. அவற்றில் சிலவற்றுக்கு ஐயரும் வருவதில்லை. குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் ஒருவர் தான் மணியடித்துப் பூசை செய்கிறார். சுபத்திரையின் தாத்தா அப்படியொரு பிள்ளையார் கோயிலைச் சொந்தமாக வைத்திருந்தார் என்றும் ஒரு போத்தல் கள்ளுக்காக அதனை பரியாரி ஒருவருக்கு விற்றார் என்றும் அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

இவர்கள் காளி கோயிலொன்றில் தங்கியிருந்தார்கள். பத்துக் கைகளிலும் ஆயுதங்களோடும், நாக்கை வெளித்தள்ளியும் காளி, சுவர்களிலும், திரைச் சீலைகளிலும் வரையப்பட்டிருந்தாள். கோயில் மேற்கூரையை ஒன்பது மரத்தூண்கள் தாங்கியிருந்தன. நான்கு தூண்களை சேலையால் சுற்றி சுபத்திரை மறைப்பொன்றை உருவாக்கியிருந்தாள். எஞ்சிய தூண்களுக்கிடையில் இரண்டு மறைப்புகளும் இரண்டு குடும்பங்களும் அங்கே தங்கியிருந்தன. அவர்களில் இளந்தாரிப் பெடியன் ஒருவனும் இருந்தான்.

சுபத்திரையின் மகளுக்கு பதினான்கு வயது நடக்கிறது. எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். தகப்பனைப் போலவே நல்ல வளர்த்தியாய் அவள் இப்பவோ அப்பவோ என்றிருந்தது சுபத்திரைக்கு நெருப்பை வயிற்றில் சுமந்து கொண்டிருப்பது போலானது.

சனங்களை இரவோடிரவாக எழும்பிப் போகச் சொன்ன போது அவளுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. அவள் கட்டாயம் போயே தீரவேண்டுமென்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அவ்ளது மகள். அங்கே "ஆமி அப்பிடியாம் நேவி இப்படியாம்" என்று வருகிற கதைகளை கேட்கும் போது மகளை இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் வைத்து வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு கொஞ்சமும் இருக்கவில்லை. இரண்டாவது காரணம் அவளது மகன் அமுதன். அவன் ஒரு போராளியாக இருந்தான்.

அன்றைக்கு இரவு சுபத்திரை தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறினாள். எண்பத்து ஐந்தில் குடியில் ஈரல் கருகி அவளது கணவர் செத்துப் போன போது முதல்முறையாக அவள் தலையிலும் வயிற்றிலும் அடித்து இப்படிக் குளறினாள்.

கோயிலில் குளிப்பு முழுப்புகளுக்குப் பெரும் சிரமமாக இருந்தது. விடிவதற்கு முன்னரேயே மகள் மரங்களின் மறைப்புக்களைத் தேடி அலைவதைப் பார்க்க நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. அங்கிருந்த அபிஷேகக் கிணற்றில் பத்து வாளி அள்ளிய பிறகு, வற்றி போகிற அளவில் சேற்றுக் கலரில் தண்ணீர் இருந்தது. குடிக்கவும் சமைக்கவும் தண்ணீரெடுக்கவும் தூர இடத்திற்கு போய் வர வேண்டும். மூன்றாவது நாளில் இருந்து அங்கிருந்த மற்றவர்களோடு மகளும் தண்ணீர் எடுத்து வந்தாள். நீர் நிரம்பிய இரண்டு பிளாஸ்டிக் வாளிகளை அவள் தூக்க முடியாமல் தூக்கினாள். வாளியின் கைப்பிடிக் கம்பிகள் விரல்களில் அழுத்தி அழுத்தி சிவத்தக் கோடாக பதிந்திருந்தது. இப்படியான தருணங்களில் சுபத்திரைக்கு மகனில் கோபம் பொங்கிக் கொண்டு வரும். "நீ ஒரு நல்ல அண்ணனாய் இருந்திருந்தா இப்பிடிச் செய்திருக்க மாட்டாய். நாங்களும் இப்பிடிக் கஸ்ரப்பட்டிருக்க மாட்டம்" என்று மனசுக்குள் பொருமுவாள்.

சுபத்திரையின் கணவரது இரண்டு தம்பிகள் பிரான்சில் இருந்தார்கள். அவர்களில் இளையவன் இவளின் மகனின் வயதில் இருந்தான். இரண்டு பேரும் ஒன்றாகப் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள். ஊரியான் பாதை ஓடிக் கொண்டிருந்த போது மூத்தவன் பிரான்சுக்குப் புறப்பட்டான், பிரான்சில் அவனுக்குக் கேஸ் நடந்து கொண்டிருந்த போது, தம்பியையும் அழைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பாஸ் எடுக்க சுபத்திரை தான் பிணை நின்றாள். இளவயது ஆட்களுக்கு இயக்கம் பாஸ் கொடுப்பதில்லை. கொழும்பில் பரீட்சை அல்லது பயிற்சி இப்படியேதாவது சொல்லித்தான் விண்ணப்பிக்க வேண்டும். அவனுக்கும் அப்படித்தான் கேட்டார்கள். யாரையாவது பிணை வைக்கும்படி இயக்கம் சொன்னது. சுபத்திரை தனது பெயரைக் கொடுத்திருந்தாள். ஒரு மாதப் பாஸ் கொடுத்தார்கள். அவன் போன போது கிளாலி ரூட் தொடங்கி கொஞ்ச நாட்களே ஆகியிருந்தது.

ஒரு மாதம் முடிந்து ஒரு நாள் தாண்டிய ஒரு நாளில் கோண்டாவில் பாஸ் ஒபிஸிலிருந்து இரண்டு பேர் சுபத்திரையின் வீட்டிற்கு வந்தார்கள். ஒபிஸில் அவளுக்கு விசாரணை இருக்கிறது என்று சொன்னார்கள். சுபத்திரை அன்றைக்கே போனாள்.

அவளை விசாரித்தவன் மிகத் தன்மையாகக் கேட்டான். "அம்மா, நீங்கள் பிணை நின்ற ஆள் அவருடைய காலம் முடிஞ்சும் திரும்பி வரல்லை. அவர் வருவாரா இல்லையா என்றாவது தெரியுமா ?"

"அவர் வெளிநாட்டுக்குப் போகப் போறார். இனி வர மாட்டார்."

பிணை முறித்தண்டமாக ஐம்பதாயிரம் ரூபாய்களை அவர்களுக்குக் கட்ட வேண்டியிருந்தது. நாலு பேரிடம் மாறி வாங்கி அவள் செலுத்தினாள். போராளிக் குடும்பத்திடம் இயக்கம் அப்படிக் காசு வாங்குவதில்லை என்று ஊரில் பேச்சிருந்தது. உண்மையில் அவளும் அதைக் குறித்து இயக்கத்திடம் எதுவும் விசாரித்திருக்கவில்லை. அவர்களுக்குத் தெரியாத ஒன்றில்லை என்று அவள் நினைத்தாள்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு பிரான்சில் இருந்து சித்தப்பன்கள் அவ்வப்போது காசு அனுப்பத் தொடங்கினார்கள். எழுதுகிற எல்லாக் கடிதங்களிலும் இரண்டு வரிகளைச் சேர்க்க மறக்காதிருந்தார்கள். மகனை இயக்கத்திலிருந்து விலத்துற வேலையை மட்டும் இவளைப் பார்க்கச் சொல்லியும் அவனை பிரான்சுக்குக் கூப்பிடுற வேலையைத் தாங்கள் பார்ப்பதாகவும் அவை இருந்தன.

கோயிற் தூண்களில் கும்பம் சரித்து இருக்கிற சமயங்களில் தெருவில் இயக்க வாகனங்கள் அறம்புறமாக ஓடித்திரிந்தன. அவைகளில் தன் மகன் தென்படுவானா என்று சுபத்திரை எதிர்பார்த்திருந்தாள். யாழ்ப்பாணத்தில் சண்டை நடந்து கொண்டிருந்ததால், நெஞ்சுக்குள் அந்தரமாயிருந்தது. அவனை ஒருக்கால் கண்ணால் கண்டுவிட்டால் நிம்மதியாக இருக்கும்.

இன்று பின்னேரம் இரண்டு இயக்கப் பெடியங்கள் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் சைக்கிளை வெளியே வேலியில் சாய்த்து விட்டு இறங்கி நடந்து வந்தார்கள். போராளிகள் யாராவது வீட்டிற்கு வந்தால் அவர்கள் காவி வருகிற செய்திகளைக் குறித்து உடம்பு நடுங்கத் தொடங்கி விடுகிறது. இன்றைக்கும் அப்படித் தான். "அம்மாளாச்சி ! அப்பிடியெதுவும் நடந்திருக்காது..."

அவர்கள் வேறொரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வந்திருந்தார்கள். அடுத்த சேலை மறைப்புக் கூட்டுக்குள் தங்கியிருந்த இளைஞன் அவர்களை அழைத்து வந்திருந்தான். இன்றைக்கு காலை அபிஷேகக் கிணற்றில் அவன் குளித்துக் கொண்டிருந்த போது கோயிற் சொந்தக்காரர் அங்கு வந்திருந்தார். அவருக்கு இந்தக் கோயிலில் சனங்கள் தங்கியிருப்பது ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை என்பதை சுபத்திரை அறிந்திருந்தாள்.

"இந்த இடத்தில வலு திறமான அகதி முகாம் ஒன்று இருக்கு. நீங்கள் அங்கை போகலாம், நிவாரணம் நிறையக் கொடுக்கிறாங்கள்" என்ற மாதிரியான செய்திகளே அவர் எப்போதும் பேசுகிற வார்த்தைகளாக இருந்தன. சாடை மாடையாக "அம்பாள் குற்றம் பொறுக்க மாட்டாள், பாத்து கவனமாக நடந்து கொள்ளுங்கோ" என்று அடிக்கடி அவர் சொன்னார். அன்றைக்கு அவன் அபிஷேகக் கிணற்றில் குளித்தது அவருக்கு உச்சி மண்டையில் கோபத்தைக் கிளறியிருக்க வேண்டும்.

"இது அம்பாளின்ரை அபிஷேகக் கிணறு, இதில நீ குளிக்கக் கூடாது" என்று வாளியையும் கயிற்றையும் பிடுங்கினார் அவர். இளைஞன் அப்பொழுது தான் இரண்டொரு வாளிகள் ஊற்றியிருந்தான். அவனுக்கு கோபம் வந்திருக்க வேண்டும்.

"மனிசருக்குத் தான் கடவுளே தவிர கடவுளுக்கு மனிசர் இல்லை" என்று அவன் சொன்னான். அவரிடமிருந்து வாளியை வாங்க எத்தனித்தான்.

"என்னடா எதிர்த்துக் கதைக்கிறாய்" என்று கோயிற்காரர் அவனுக்கு அடிக்கக் கை ஓங்கினார். இளைஞன் அவ்ரது கையைப் பிடித்து தள்ளிவிட சமநிலை குலைந்து தண்ணீர் ஓடுகிற வாய்க்காலின் சேற்றுக்குள் கோயிற்காரர் விழுந்தார். உடுத்தியிருந்த வேட்டியும் சேட்டும் சேறாகின. முகத்திலும் சகதி தெறித்திருந்தது. எல்லோரும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவருக்கு பெரிய அவமானமாகியிருக்க வேண்டும். விரல்களால் முகத்துச் சேற்றை வழித்தவாறு எழும்பினார்.

(வலிகள் இன்னும்...)

## இரண்டாவது சூரிய உதயம்



அன்றைக்கு காற்றே இல்லை;
அலைகளும் எழாது செத்துப்
போயிற்று
கடல்.

மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.

இம்முறை தெற்கிலே -

என்ன நிகழ்ந்தது ?
எனது நகரம் எரிக்கப்பட்டது;
எனது மக்கள் முகங்களை
இழந்தனர்,
எனது நிலம், எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப் பதிவு.

கைகளைப் பின்புறம் இறுகக்
கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள் ?
முகில்களின் மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று !
இனியும் யார் காத்துள்ளனர் ?

சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக.

○ [illegible]

# இரகசியமாய் கொல்லும் இருள்



சிறுகதை

இராஜேஸ்கண்ணன்

அறையின் மூலை முடுக்குகளிலெல்லாம் இருள் அப்பிக் கிடக்கிறது. இரவை நிறைத்திருந்த இருள் திண்மத் திணிவுகளாய் மனதில் மாத்திரமன்றி விலா எலும்புச் சுவர்களையும் சுமையேற்றி அழுத்திக் கொண்டிருக்கிறது. மூக்கின் வழி, இருள் குழம்பு இறங்கி நாசித் துளைகளை நிறைத்துக் கொண்டிருந்தது. இருளின் சுமை, இதய அறைகளை உதைத்துக் கொண்டிருந்தது. தூக்கத்தைத் தொலைத்திருந்த விழிகளின் ஓரம், உடைப்பெடுத்திருந்தது.

எத்தனை இரவுகள் வலியோடும் சுமைகளின் அழுத்தத்துடனும் வெறுமையாய் மடிந்துபோயின. இது போன்ற இரவுகள், இதற்கு முன்னரும் மூளை நரம்பு அணுக்களை குடைந்த தருணங்களும் இருந்தன. அவளருகில் இருந்த காலத்து இரவுகளுக்குள், கனிந்து, கவிந்திருந்த அர்த்தங்கள் யாவும் இன்றைய இரவுகளில் செத்து ஒழிகின்றன. அன்று இருளுக்குக் கண்கள் ஒளி தந்தன. இன்றோ கண்களுக்குள் இருள் கவிந்து நிறைந்துவிட்டது.

இருளில் மிதக்கும் பஞ்சுப் பொதிகளாய், அவனது இரண்டு பிஞ்சுகளும் அருகில் உறங்கிக் கிடந்தன. ஐந்து வயது நிறைந்த மூத்தவள் வலது புறமும், இரண்டு வயதே நிறைந்த சின்னவன் இடது புறமுமாக. அந்த இருளின் அழுத்தத்தில் அவை இரண்டும் தான் அவனுக்கு சிறிய ஒளிப் பொட்டுக்களாக..



எங்கடை ரண்டு பிள்ளைகளையும் வளர்த்து படிப்பிச்சு... நல்ல உத்தி யோகங்களிலை இருத்த வேணும். காதலிச்சு கட்டினதாலை எங்களை கைகழுவிவிட்ட உங்கடை ஆக்களுக்கும் எங்கடை ஆக்களுக்கும் வாழ்ந்து காட்ட வேணும்... இனி எங்களுக்கு பிள்ளையள் வேண்டாம் என்ன?... சரியே?... ஒருவேளை நான் இல்லாட்டிலும் இந்த வெறி உங்களிட்டை இருக்கவேணும்...

இரவின் அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு பாளம், பாளமாகத் தணல் கட்டிகள் வந்து வீழ்ந்த அன்றைய இரவுகள் அவனது உள்ளத்தை உலுப்பி எடுத்துக்கொண்டிருந்தன.

அறையின் சுவர்கள் நான்கும் அவனுக்கு மேல் இடிந்து வீழ்ந்து கற்குவியல்களாய், மூடிப்போயிருப்பதாக ஒரு வித உணர்வு. அந்த கற்குவியல்களுக்குள், தனது பிஞ்சுகள் மாண்டுவிடக் கூடாது என்ற ஏக்கம் நிறைந்த கரிசனையுடன் அவர்களைக் கட்டியணைத்துக் கொண்டான்.

கரும் பூதமான இருள், தன் பிள்ளைகளை மென்று தின்றுவிட கதவின் இடுக்கின் வழியே அறையினுள் நுழைய முற்படுவதாக உணர்ந்தான். பழைய சாக்கு ஒன்றை எடுத்து கதவுக்கும் நிலத்துக்கும் இடையிலான மெல்லிய இடைவெளியை மறைத்துக்கொண்டான்.

"அப்பா... மறக்காமல் படுக்கேக்கை கதவு நீக்கலை சாக்காலை மறைச்சு விடுங்கோ...! யன்னலை பூட்டி விடுங்கோ..! குளிர்காத்து உள்ளுக்கை வரும், நித்திரையாப் போகாதையுங்கோ..! கவனம்...!"

சில சமயங்களில் இரவில் நீண்ட நேரம் விழித்திருந்து, ஏதாவது படிக்கும் போது, அவள் அவனுக்குத் தவறாமல் கூறி வைத்துக் கொண்டு பிள்ளைகளுடன் உறங்கிப் போவாள்.

உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கண்கள் இருளைத் துளைத்துக் கொண்டு அறையில் மூலை முடுக்குகளையெல்லாம் 'ஸ்கான்' செய்து கொண்டிருந்தது. இருளின் சில திவலைகள் சேர்ந்து திரண்டு, ஒரு தேளாக மாறி மூலை ஓரம் ஊர்ந்து செல்வதாக ஒரு வித பிரமை. வளர்ந்து செல்லும் அந்த இருட் தேள் வளர்ந்து வளர்ந்து விஸ்வரூபம் எடுத்து தன் பிஞ்சுகளிடம் வருகிறதா? என்ற ஏக்கம்!.

"நுளம்பு வலையை, நாலு பக்கமும் பாயுக்கு கீழை மடிச்சு விடுங்கோப்பா... அப்பிடியெண்டால் தான் பூரான்... மட்டைத்தேள் கூட உள்ளுக்கை நுழையாது... பொடியளுக்கு நித்திரையிலை கடிச்சுக் கிடிச்சுப்போடும். தலை மாட்டிலை அந்த பொல்லை வைச்சிருங்கோ ஏதுமெண்டால் உடனை எடுத்து அடிக்கலாம்"

இரவு அதிக நேரம் தன் அலுவலக வேலை ஆயத்தங்களை முடித்துக் கொண்டு பாயில் அவளருகில் படுக்கும் போது, அரைகுறைத் தூக்கத்திலும் அவள் நிதானமாகச் சொல்லும் வார்த்தைகள்.

தலைமாட்டில் இருந்த பொல்லினை எடுத்துக் கொண்டு, மெதுவாக அறையின் மூலைகள் நான்கையும் நோட்டமிட்டுக் கொண்டான். இருள் பாம்பாக நெழிந்து அறையின் மூலை ஒன்றில் கிடந்த பெட்டியினுள் ஒழிந்து கொள்கின்றது.

"அப்பா... பெட்டியள், பழைய சாமான்களை எடுத்து வெளியிலை போட வேணும். சின்னனுகள் விளையாடுற இடம். பாம்பைக் கூட கையாலை பிடிச்சு விளையாடுற பருவம்... உதுகளைத் திறந்து பார்த்து தேவையில்லாததை கழிச்சு விடுவம் என்ன?..."

பொல்லினை நீட்டி அந்தப் பெட்டியின் மூடிகளை மெதுவாக அரவமின்றித் திறந்தான். பெட்டியில் இருந்து குதித்தோடியது உண்மையில் இருள் பாம்பா? அல்லது எலிதானா?

"இங்கையப்பா... சின்னவன்ரை பால் போச்சி கவனம். மேசையிலை வைச்சு அந்தக் கூடையாலை மூடி விடுங்கோ. எலி, வாய் வைச்சுப் போடும். பொடிக்கு வருத்தம் வந்திடும்... விசுக்கோத்துப் பெட்டி கூட கவனம்..."

மேசையில் மூடி வைத்திருந்த பிஞ்சுகளுக்கு பயன்படுத்தும் மருந்துகள், பால்மா, பிஸ்கட் எல்லாவற்றையும் கூடையைத் திறந்து சரி பார்த்துக் கொண்டான்.

உறக்கமின்றி தவிக்க வைத்த இருள் நீண்டு சென்று கொண்டிருந்தது. பிஞ்சுகள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களின் போர்வையை சீர் செய்து விட்டுக்கொண்டு அருகில் படுத்துக் கொண்டான்.

கண்கள் இரவின் கருமையினைத்தான் ஊடறுத்துக் கொண்டிருந்தன. இதே போன்ற ஓரிரவில் மார்பை வருடியவாறு அவள் காதோரம் பேசிய வார்த்தைகள் இருளில் கரைந்து வருவதாக உணர்ந்தான்.

"எங்கடை ரண்டு பிள்ளைகளையும் வளர்த்து படிப்பிச்சு... நல்ல உத்தி யோகங்களிலை இருத்த வேணும். காதலிச்சு கட்டினதாலை எங்களை கை கழுவி விட்ட உங்கடை ஆக்களுக்கும் எங்கடை ஆக்களுக்கும் வாழ்ந்து காட்ட வேணும்... இனி எங்களுக்கு பிள்ளையள் வேண்டாம் என்ன?... சரியே?... ஒருவேளை நான் இல்லாட்டிலும் இந்த வெறி உங்களிட்டை இருக்க வேணும்..."

கண்கள் மூட மறுக்கின்றன. இறுக மூடித் தூங்கிவிடலாமென்றால்... இருள் இன்னும் அவளின் நினைவுகளின் திணிவுகளாய்...

அதிகாலை மூன்று மணியைத் தாண்டியும், அறையை அப்பிக்கிடந்தது இருள். கிழக்குப் புற அறைச் சுவரில் சிரித்தபடி இருக்கும் அவளின் படம்கூட கரும்புகையாக...! அவளின் கைகள் அசைகின்றதா...! என்ன சொல்கிறாள்...?

"ஐயோ!... நான் என்ன செய்யிறது. அவளை அப்படியே விட்டிட்டனே... ஒரு பிரியன் எண்டு...! என்ரை பிள்ளையள் தவிச்சுப் போக...! நான் செய்தது சரியா...? வேறை என்னத்தை செய்ய...! எல்லாம் போச்சுது... அவள் திரும்பி வரமாட்டாளா?"

இருளைத்தான் கேட்கிறான். இப்படி ஒரு இருள் நிறைந்த நாளில் தான் தீப்பாளங்கள், இரவைக் கிழித்து வந்து அவளின் மார்பைத் துளைத்தன. எங்கிருந்து வந்த தீப்பாளங்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது. தீப்பாளங்கள் துரத்த, பயந்து ஓடிக் கொண்டே இருந்தான்.

பிள்ளைகள் இருவரையும் தோளில் சுமந்த வண்ணம். மனைவி பின்னே... அன்றும், இருளின் கருமைப் புதர்களில் பதுங்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அவனுக்கும் அவளுக்குமான தூர இடைவெளியை தீப்பாளங்கள் சர்வ சாதாரணமாய் நிறைத்திருந்தன. மார்பைத் துளைத்த தீப்பாளத்துக்கு இப்படி ஒரு இருள்தான் துணை போனது.

இறுதிக் கணங்களில், நீண்ட தூரத்துக்கு அப்பால், புகைமூட்டமாக அவள் கையசைத்துப் பிள்ளைகளைக் காக்குமாறு சொல்லியிருக்க வேண்டும். அவள் முகக் குறிப்பைக் கூட விளங்கிக் கொள்ள முடியாததை எண்ணும் போது...

அவளை தன்னிடமிருந்து பறித்தது தீப்பாளங்களா?... அல்லது இரகசியமாய் ஒழிந்திருந்த இருளா?... அவனிடம் முடிவில்லை.

இன்றும் கூட இருளில் இவன் விழித்துக் கொண்டிருந்தான். இருளைச் சந்தேகித்த படி தன் பிள்ளைகளை அணைத்துக் கொண்டான்.

# அலம்பல் ஆச்சி

என்னடாப்பா இது. மனிசருக்கு நிக்க இருக்க நேரமில்லாமை ஒரே விழாக்காளாய்க் கிடக்கிது.யாழ்ப்பாணத்திலை தடுக்கி விழுந்தா ஏதாவது விழா அறிவிப்புச் சத்தத்திலைதான் எழும்புவம் போலைகிடக்கு. எங்களைப் போலை வேலை வெட்டி இல்லாததுகள் போய்க் குந்திக்கொண்டிருந்திட்டு வரலாம். ஆனா ஒரே நேரத்திலை ஐம்பத்தெட்டு நிகழ்ச்சி நிரல்களெண்டா எங்கைபோறதெண்டு முடிவெடுக்கிறேக்கிடையிலை விழா முடிஞ்சு கடையள் மூடுப்பட்டு வேறை கடை திறபடும். ஆனா எங்கடை பிரதிநிதிகள் மட்டும் சரியான விண்ணனுகள். ஆரோடை எங்கை போகோணும் எண்டதை திட்டம் போட்டு வடிவா செய்வாங்கள். அதை விளங்கிக் கொள்ளாமை, விசிறியள் அல்லோலகல்லோலப்படுவினை. ஆளையாள் கொளுவுப்பட்டு பரிசுகெடுத்தி, சீலம்பாயா கிழிஞ்சு கிடக்குங்கள்.. பாவத்தானுகள். ஆனா அவையின்ரை தலைவர்மார் வலுகுசாலா கைகுலுக்கிப் போட்டு சிரிச்சுக் கொண்டிருப்பினை. இதிலை ஆபத்தென்னெண்டா சாதாரண விழாக்களையும் பாராளுமன்றம் போலை சீச்சி.. கள்ளுக்கடையா மாத்தி கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறது தான். நடுக்கடல்லை போனாலும் நாய்க்கு நக்குத் தண்ணிதானாம். உதுகளை இன்னொரு தலைவர் வந்தாலும் திருத்தேலாது.

அதுக்குள்ளை சிலருக்கு தேசியத் தலைவர் ஆகோணும் எண்ட ஆசையும் வந்திட்டுது போலை. எங்கடை சனம் குண்டு மழைக்குள்ளை சிக்கி சின்னா பின்னமாகேக்கை வெறும் மழையின்ரை இடிச்சத்தத்துக்கு கூட வீட்டுக்குள்ளை இருந்து வெளியாலை வராத ஆக்களுக்கு தலைவராகிற எண்ணம் பகல் கனவிலை வாறது கூட பிழை. இதைச் சொல்லப் போனா.. ஆச்சியை துரோகி ஆக்கி விட்டுடுவாங்கள்.



○ செல்வி

எங்கடையள் என்னதான் தமிழ்க் கலாசார முறைப்படிதான் ஆராத்தி எடுக்கோணும் எண்டு சொல்லி, மாரித்தவக்கை போல வயிறு வாயெல்லாம் கிழிஞ்சுசாகிற அளவுக்கு கத்தினாலும், சிங்களத் திட்டை அடி வாங்கினாலும்.. தேசியவிழா நடக்கேக்கை எந்த மேளத்தை கிலுக்கினனியள்? தேசிய நடனம் தான்.. ஒரே நாடு.. ஒரே மக்கள். பிறகென்ன தமிழர் பிரதேசம் மண்ணாங்கட்டி எண்டு கூவுறியள். தேசிய விழாவிலை தேசிய நடனம் தான். இப்ப எங்கை போய் கொடி பிடிப்பியள்? தனிச் சிங்கள சட்டம் வந்ததாலை சிங்களம் படிக்கிறதையே விட்டவையாம். சனத்தை பேயர் மடையர் ஆக்கலாம். ஆனா மடச்சாம்பிராணியள் எண்டு நினைச்சு கொண்டு கதைக்கிறது பிழை கண்டியளோ? ஆனா அந்த விழாவிலை எங்கடை பெடிச்சியள் சாதிச்சிருக்குதுகள். நாங்களும் இருக்கிறம் எண்டதை தென்னிலங்கைக்கு அறிவிக்கிறதுக்கு சாதனைகள் செய்யிறதுதான் ஒரே வழி. உங்கினேக்கை வழிதெருவிலை வாய்பார்த்துக் கொண்டு திரியாமை வீட்டுக்கும் நாட்டுக்கும் பிரியோசனமா ஏதெண்டாலும் செய்யுங்கோடாப்பா. வாயாலை வெட்டி விழுத்துறதை விட்டுப் போட்டு இறங்கிவேலை செய்தியளெண்டாதான் பலன் கிடைக்குமப்பு. போனுக்கையும் கொம்பியூட்டருக்கையும் தலையைக் குடுத்துக் கொண்டு ஏலாவாளிச் சமூகமா இருந்திடாதேங்கோ.

சனத்தோடை வேலை செய்தாத்தான் அவைக்கு தனிநாடு வேணுமா, சமஷ்டி வேணுமோ, சர்வதேச விசாரணை வேணுமோ இல்லாட்டி கலப்பு விசாரணையோ எண்டெல்லாம் விளங்கும். வெக்கை பிடிக்காமை வேலை செய்யவும் வேணும். சனத்தை பற்றி எழுதவும் வேணுமெண்டா கற்பனைக் கதையள் தான் எழுதலாம். சிந்திச்சு வேலை செய்தியளெண்டாதான் உருப்படலாம்.

என்ன ஆச்சி. ஒரே புறுபுறுக்கிறா எண்டு கோவிக்காதேங்கோடாப்பா. மேய்க்கிறதுக்கு ஆளில்லாட்டி உப்பிடித்தான். என்னைப் போலை தெருவாலை போறதுகளும் கூப்பிட்டு அறிவுரை சொல்லுங்கள். மெய்ப் பொருள் காண்பது அறிவு எண்டு படிச்சாமட்டும் காணாது. செயல்லை காட்டோணும். உங்களுக்கு ஆர் அறிவுரை சொல்லலாம் எண்டு நீங்கள் தீர்மானிக்கிற அளவுக்கு வளரோணும் அப்பனவை. அதுதான் என்ரை கனவு. எந்த விழாக்கள் கொண்டாட்டங்கள் நடந்தாலும் எல்லாத்துக்கும் அள்ளுப்பட்டுக் கொண்டு போகாமை, விழாக்களுக்கு பின்னாலை இருக்கிற மறைமுக நிகழ்ச்சி நிரல்களை ஆராய்ஞ்சு போகோணும். அவங்களுக்கு எண்ணுக் கணக்கு காட்டுற அளவுக்கு நீங்கள் இல்லையெண்டதை மண்டையிலை அடிச்ச போலை சொல்லுங்கோ.

நல்ல பாடம் படிப்பிச்சியளெண்டா கண்டவனும் விழா நடத்துறன் வாங்கோ எண்டு வரமாட்டான். அம்மாவாணை எனக்கு உந்த விழா அறிவிப்புக்களை கண்டாலே பத்திக் கொண்டு வருகிது. அறுவார் என்னத்துக்கு வந்து நிக்கிறாங்கள் எண்டு தேகம் பதறுது. இனிக் கதைச்சா மயங்கிகியங்கி விழுந்து போடுவன். வாறன் என்ன.

# அந்தக் காலத்துச் சேட்டைகள்

○ உமா சந்தோஷ்

(08)



## ‘மைனர் மயிலன்’

மினிஸ்றர் வீட்டை போட்டு வந்த நாள் தொட்டு, தான் நிண்ட கடைப்பேலியெல்லாம் ஏறி இறங்கி மினிஸ்ரற்றை விசிற்றிங் காட்டைக் காட்டுறதும் “புட்டுத் திண்டிட்டுப் போகச் சொன்ன கதையுமா” காலம் போட்டுது. மினிஸ்ரர் வீட்டுக்கும் தனக்கும் நல்ல “லிங்க்” இருக்கெண்டு சொல்லாமை சொல்லிக் கொண்டு திரிஞ்சான் மைனர். கடை முதலாளி சொல்லியும் மைனர் கீலா விடுகிறானெண்டு கனபேர் நம் பேல்லை. மைனற்றை கதையும் உடுப்பு நடப்பும் அப்பிடித்தானே?

மைனற்றை தேப்பன் அரியகுட்டியர் கனகாலம் கள்ளியங்காட்டுப் பரியாரியரிட்டை சலரோகத்துக்கு மருந்து திண்டவர். பிறகு வருத்தம் கொஞ்சங் கூட ஊர் டிஸ்பெஞ்சரிக்கு றூட்டை மாத்தித் திரிஞ்சவர். சீமான் ஊரிலை நடக்கிற சபை சந்தியொண்டும் விட்டு வைக்கிறேல்லை. அதுவும் கலியாண வீடெண்டால் குடுக்கிற என்வலப்புக்கு வஞ்சகஞ் செய்யப்பிடாதெண்டு வடிவா வெளுத்துக் கட்டுவர். பொன்னுருக்கல் தொடங்கி கலியாண வீடு, பிறகு பொம்பிளை மாப்பிளை பாக்கிற அலுவல் தொட்டு நாலாம் சடங்கு வரைக்கும் விடாமை பங்குபற்றி பாயாசமாக் குடிக்கிறதும், இனிப்பினிப்பாத் தின்னுறதுமா உவற்றை பொழுது போவிடும்.

நாக்கை அடக்கத்தெரியாத மனுசன் உவர். மருந்து எத்தினை நாளுக்குத்தான் உவற்றை சேட்டையைத் தாங்கும்.. “ஆளுக்கு சீனி வருத்தங் கூடி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலை விட்டுக் கிடக்கு, கூட நிக்க ஆளில்லை” எண்டு உடனைவரச் சொல்லி தங்கமணியிட்டையிருந்து தந்தி வந்திது.

கடைமுதலாளி வந்தாப் பிறகு தந்தியைக் காட்டி மைனர் லீவெடுத்துப் போட்டான். ஏதேன் நல்லது கெட்டது நடந்தா கையிலையும் கொஞ்சம் வேணுமெல்லே எண்டு முதலாளியிட்டை கொஞ்சம் “அட்வான்ஸ்சும்” கேட்டுக்கொண்டு நிண்டவன். அவன்ரை கதைக்கு முதலாளி மசியேல்லை. ஏதோ கொஞ்சம் தாறனெண்டு ஒத்துக் கொண்டிட்டார். அப்ப அங்கை நிண்ட மைனரைத் திடீரெனக் காணேல்லை. கடைப்பேலியெல்லாம் போய் தந்தியைக் காட்டி “இந்த உலகத்திலை எனக்கெண்டு இருக்கிறது அப்பு ஒராள்தான். அவரும் போவிட்டால்” எண்டு விக்கி விக்கி அழுததைப்பார்த்த சிலர் இழகிப்போட்டினம்.

பின்னேரத்துக்குள்ளை ஒரு “எமவுண்ட்” றெடியாவிட்டுது. அரிய குட்டியருக்கு ஏதாவது வாங்க எண்டு பழக்கடைப் பக்கம் போ.

அங்க மெனிக்காவைக் கண்டிட்டான். கொழும்பிலை நிண்டாலும் கொழும்பானுக்குப் பயந்து மெனிக்காவை பாக்கிற ஐடியாவை கைவிட்டவன் மைனர்.

இண்டைக்கு நினையாப்பிரகாரமா சந்தித்ததிலை மைனருக்குச் சநதோஷம். “பப்ளிக்” எண்டும் பாக்காமை மெனிக்காவை கட்டிப்பிடிச்சு தன்ரை அன்பைத் தெரிவிச்சான் மைனர்.

மெனிக்கா “தாங்ஸ்” எண்டாள். ஏன் எண்டு மைனர் கேக்க, “உங்களாலை தானே மைனர் நான் நல்லா இருக்கிறன். கொழும்பான் துரை நல்லா வைச்சிருக்கிறார்” முன்னைய விட நல்லாத் தமிழ் பேசினாள் மெனிக்கா. கொழும்பான்ரை றெயினிங்கெல்லே?

மைனர் மெனிக்காவுக்கு அழாக்குறையா விசியத்தைச் சொன்னான்.

“அங்கிளுக்கு குடுங்கோ” எண்டு சொல்லி ஒரு பெரிய பழக்கடையை வாங்கிக் குடுத்தாள் மெனிக்கா. மெனிக்கா பேர்சைத் துறக்கேக்கை லேசா எட்டிப் பார்த்திட்டான் மைனர். மெனிக்காட்டை காசு நல்லாப் பிளங்கிறதை கண்டிட்டான் அவன். “போய்ட்டு வாறான் மைனர்” வெளிக்கிடப்போன மெனிக்காவை “பேமென்ற்” பக்கம் உள்ள கூல் பாருக்கு வரச் சொல்லி சைகை காட்டினான் மைனர். “என்ரை நிலைமையை எப்பிடிச் சொல்லுறது மெனிக்” விசும்பினான். இல்லை நடிச்சான்.

“என்ன? மைனர். எங்கிட்ட சொல்ல என்ன வெக்கங்” மெனிக் கெஞ்சினாண்.

“இல்லை, மெனிக். அப்புவும் ஆஸ்பத்திரியிலை எத்தினை நாளைக்கோ தெரியாது? துணைக்கும் ஒருதரும் இல்லை. நான் தான் எல்லாம். கையிலை ஒண்டும் கனக்க இல்லை” என இழுத்தான்.

மெனிக்கா ஒண்டும் பேசாமல் பேர்ஸை திரும்பவும் எடுத்து சில நோட்டுக்களை எண்ணி மைனற்றை கையுக்கை திணித்தாள்.

“வேண்...டாம் மெனிக்”, மைனற்றை நடிப்பை அவள் கணக்கெடுக்கேல்லை. பொக்கற்றுக்கை நோட்டைச் செருகிப் போட்டு, “போட்டு வாறங் மைனர்” மெனிக்கா புறப்பட்டாள் வேகமாக.

(சேட்டைகள் தொடரும்...)




மறுநிர்மாணம் பதிப்பகம், 2/10/16 அன்று லண்டனில் நடத்திய தமயந்தியின் “ஏழு கடல்கன்னிகள்” நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. எல்லாப் பாகங்களிலும் இருந்து பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## வாரச்சக்கரம்

## வாரப்பலன்

**மேடம்**
மேன்மை. பயிர் பலிதம். ஆலய தரிசனம். காரிய வெற்றி.

**ரிஷபம்**
, ஈகைச் சிறப்பு. பாராட்டு . தேடல். முயற்சி பலிதம். மன மாற்றம்.

**மிதுனம்**
கனவுலகச் சஞ்சாரம். பணமுடை. பிரயாணம். நன்மக்கள் உறவு

**கடகம்**
பிள்ளைகள் கல்வி மேன்மை. நடை கஷ்டம். பிரயாணம். இல்லச் சிறப்பு.

**சிம்மம்**
நாவறட்சி. பல்வகை வரவு. கனவு பலிதம். மக்கள் மாண்பு. கலையார்வம்.

**கன்னி**
உறக்கக் குறைவு. உண்மை நிலை. விசுவாசப்படல். தாயன்பு.

**துலாம்**
நல் ஒழுக்கம். மேன்மை. பணவரவு. தெய்வ பாக்கியம். புதுமை.

**விருச்சிகம்**
கலைத் தாகம். வாய்வுத் தொல்லை. புத்தாக்கம். பெருமை.

**தனுசு**
கலகம். உறக்கக் குறைவு. சகோதர மேன்மை. தெய்வ தரிசனம்.

**மகரம்**
தடை நீக்கம். சுகச் செலவு. குடும்ப மேன்மை. மக்கள் பெருமை.

**கும்பம்**
தன தானியச் சேர்க்கை. வைத்திய செலவு. உறவால் பெருமை.

**மீனம்**
கலகம். துக்கம். தனிமை. தெய்வ நம்பிக்கை. நட்பால் நன்மை.



### சம உரிமை இயக்கம் நடத்திய கலாசார விழா

தெற்கிலிருந்து இந்தக் கலாசார விழாவுக்காக லால் ஹாகொட, ரோஹன பொது லியத்த உள்பட சுமார் பத்துக் கவிஞர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். கவிஞர்கள் மட்டுமல்ல, அசோக ஹந்தகம, பிரசன்ன விதானகே, கிங்ரத்னம் போன்ற புகழ்பெற்ற சினிமா இயக்குநர்கள், இசைக்கலைஞர்கள், திரைப்படக் கலைஞர்கள் எனப் பல சமாதான விரும்பிகளும் வந்தனர்.

குழந்தைகள், பெண்கள், முதியோர் என ஏறக்கு றைய 300 பேருக்கும் மேல்.

உடல் நலமற்ற நிலையிலும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும், யாழ்ப்பாண மக்களுடன் உரையாட வேண்டும் என மூத்த கவிஞர் லால் ஹாகொட பயணித்து வந்தமை முக்கியமானது.

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும், நேசத்தையும் பரஸ்பரத் தொடர்பாடலையும் ஊக்குவிப்பதே இவர்களுடைய நோக்கம். இந்த நிகழ்ச்சியில் அவந்த ஆடிகலவின் கார்டூன்கள், நயனஹாரி அபேநாயக்க, லால் ஹாகொட ஆகியோரின் ஒளிப்படங்கள், சூரி, கோ.கைலாசநாதன் போன்றவர்களுடைய ஓவியங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இவற்றை விட சமாதானத்தின் மகத்துவத்தையும், அதனுடைய தேவையையும், மக்களுடைய உரிமைகளையும் உணர்த்தும் இன்னும் ஏராளமாக ஒளிப்படங்களும் காட்சியில் இணைக்கப்பட்டிருந்தன. தர்மசேன பத்திராஜாவின் பொன்மணி, அசோக ஹந்தகமகவின் “இனி அவன்”, ந. கேசவராஜனின் “அம்மா நலமா”, கிங்ரத்தினத்தின் “கந்துகரயே தோங்காராய” பிரசன்ன விதானகேயின் “உசாவ நிஹண்டய்” ஆகிய படங்களும் குறும்படங்கள் சிலவும் திரையிடப்பட்டன. அத்தனையும் போரின் வலியையும் சமாதானத்தின் அவசியத்தையும் அதனுடைய ருசியையும் உணர்த்துகின்றவை.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற நிகழ்ச்சியில் சந்திப்புகளும், உரையாடல்களுமே முக்கியமானவை. அவையே சமாதானத்துக்கான பாதையை விரிவாக்கம் செய்வதற்கு உதவும் என்பதால், உரையாடல்களைச் செய்வதற்கான முறையில் வடக்கில் பல்வேறு தரப்பினரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால், எதிர்பார்க்கப்பட்டதை விட யாழ்ப்பாணத்திலிருந்து கலைஞர்களும் படைப்பாளிகளும் கலந்து கொண்டது குறைவாகவே இருந்தது. இருந்தும் கலந்து கொண்டவர்கள் நம்பிக்கையளிக்கும் வகையில் உரையாடல்களை நடத்தியது சிறப்பு.



### ஆவணப்பட விழா - கிளிநொச்சி 2016

கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் அனுசரணை யோடு சிறந்த நான்கு ஆவணப்படங்களின் திரையிடலும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. ஆவணப்பட இயக்குநர் சோமிதரன் நிகழ்வில் பங்கேற்று தனது கருத்துக்களை வழங்கினார்.

02.10.2016 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு ஆவணப்படங்களின் திரையிடல் ஆரம்பமானது.

திருநகர் வடக்கு, கனகராசா வீதியிலிருக்கும் கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி மன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த வருடத்தின் யாழ்ப்பாண சர்வதேச சினிமா திருவிழாவில் சிறந்த பார்வையாளர் விருதை பெற்றுக் கொண்ட “முனை” ஆவணத் திரைப் படம். அதன் இயக்குநர் திவாகர் விருதினை வாங்கியபோது.



ந.பாக்கியநாதன் அவர்களின் “ஒரு பிடி சாம்பல் கவிதை” தொகுதி வெளியீட்டு விழா 02.10.2016 அன்று இமையாணன் அ .த .க. வித்தியாலயத்தில் வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக்கல்வி பணிப்பாளர் இ..தமிழ்மாறன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.






ஈழத்து நெடுந்திரைப் படம் -ராஜா திரையரங்கில் வெளியிடப்பட்டு வெற்றிகரமாக காட்சிப்படுத்தப்பட்டது. பெருமளவிலான ரசிகர்களும் வருகை தந்தனர். தவற விட்டவர்கள் வரும் பதினைந்தாம் திகதி ராஜாவில் பார்வையிடலாம்.

# இணுவில் மத்திய கல்லூரி




வளம் நிறைந்த செம்மண் கிராமமான இணுவிலில், கே.கே.எஸ். வீதியோரமாக இணுவில் மத்திய கல்லூரி அமைந்திருக்கிறது. 1898 இல் அமெரிக்கன் மிஷனரியினால், இணுவில் மைக்கிலியொட் ஆஸ்பத்திரியோடு இணைந்து, இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது. மிசனரிமாரின் மதமாற்ற எண்ணம் இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரை ஈடேறவில்லை என்பதால், அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை அ.மி.த.க.பாடசாலை அபிவிருத்தியடைய வாய்ப்பில்லாதுபோனது. பின்னர் ஊர் மக்களின் விருப்பத்திற்கும், கல்வி அமைச்சின் சட்ட திட்டங் களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அமைய அவ்வப்போது கடமையாற்றிய அதிபர்கள் பாடசாலையை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தினர்.

1930 ஆம் ஆண்டு, அமரர் அப்பாக் குட்டி வைத்தியர், சி.மையில்வாகனம் மற்றும் க.பொன்னையா ஆகியோரது விடா முயற்றியினால், சைவத்தையும், தமிழையும் முன்நிறுத்தி, வைத்தியர் அப்பாக்குட்டியின் மூன்று பரப்புக் காணியில், ஓலைக் கொட்டகையில் அமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையானது, முன்நாளில் அப்பாக்குட்டியர் பள்ளிக்கூடம் என்றும், பின் நாளில் யாழ். இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலை என்றும் அழைக்கப்பட்டது.

சைவ மகாஜனா வித்தியாசாலையானது, 1930 ஆம் ஆண்டு, கணித ஆசிரியர் ஆ.சின்னத்தம்பி தலைமையில், மூன்று ஆசிரியர்களுடனும் இருபத்தாறு மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டு, அதே ஆண்டில் மேலும் ஐந்து ஆசிரியர்களும், எழுபத்தைந்து மாணவர்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். மூன்று வருடங்களாக சிங்கப்பூர் சி.மயில்வாகனம் அவர்கள் நிதி சேகரித்து ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1933 இல் இப்பாடசாலையானது உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவுசெய்யப்பட்டது. 1937 இல் அப்போது வித்தியாபதியாக இருந்த றொபின்சன் அவர்கள் இப் பாடசாலையில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி அளித்தார். 1937 இல் கனிஷ்ட வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு மாணவர்கள், பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றலாயினர். 1960 இல் இப்பாடசாலையானது அரசுடமையாக்கப்பட்டது. அன்று தொட்டு இன்று வரை எமது நாட்டிலும், சர்வதேசங்களிலும் அமையப்பெற்ற பாடசாலை பழைய மாணவர் சங்கங்களினாலும், ஊர் மக்களாலும், பாடசாலை நலன் விரும்பிகளாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலும் பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கல், புதிய கட்டட நிர்மாணப்பணிகள், பழைய கட்டட புனர் நிர்மாணம் என்பன நடைபெற்று வருகின்றன. பாடசாலைக்கு அருகில் பொருத்தமான காணிகள் இல்லாததனால் சற்றுத்தொலைவில் காணிவாங்கிப் பாடசாலை மாணவர்களுக்கானாதொரு விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. அப்பாக்குட்டி வைத்தியரின் மகன் பொன்னம் பலமும், முகாமையாளர் கபொன்னையா, மார்க்கண்டு ஆசிரியர் மற்றும் அ.முருகையா ஆகியோர் தொடர்ந்தும் தமது காணிகளைப் பாடசாலை அபிவிருத்திக்கென வழங்கினர். 1979 இல் அரச உதவியுட னும் ஒரு துண்டுக் காணி வாங்கப்பட்டது.

இந்த இரு பாடசாலைகளும் 1992 இல் ஒன்றிணைக்கப்பட்டு யாழ். இணுவில் மத்திய கல்லூரி உருவானதாக வரலாறு உண்டு. இதில் முன்னாள் அ.மி.த.க பாடசாலையென அழைக்கப்பட்ட கட்டடத்தில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவும், சைவ மகாஜனா இயங்கிய கட்டடத்தில் மத்திய கல்லூரியின் மேற்பிரிவும் இயங்கி வருகின்றன.

அன்று தொடக்கம் இன்று வரை இந்தப் பாடசாலையினூடாகப் பலர், பேராசிரியர்களாக, வைத்தியத்துறைசார் நிபுணர்களாக, கணக்காளர்களாக, அதிபர்களாக மற்றும் ஆசிரியர்களாகவும் தோற்றம் பெற்றுள்ளனர். இன்றைய அதிபர் இ.துரைசிங்கம் அவர்களினதும் பிரதி அதிபர் எம். உதயகுமார் அவர்களினதும் செயற்பாடுகள் புதிய பல விற்பன்னர்களை உருவாக்குவதாக அமைந்திருக்கின்றது.

## சாதனைகள்



பசியற்ற உலகு என்ற சித்திரப் போட்டியில் செல்வன் கு. கதீசன் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் சாதனை. 1982 இல் ஆரம்பிக்கப்பட்ட சாரணியம், இன்று வரை 34 வருடங்களாகப் பல சாதனையாளர்களை உருவாக்கியிருக்கின்றன.

இந்திய படை நகர்வின்போது சிதைந்த பெரும்பகுதிக் கட்டடத்தின் புனர் நிர்மாணத்தின் முன்னெடுப்பு.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுப் பாடசாலையைவிட்டு வெளியேறாது, தொடர்ந்தும் அங்கேயே படிப்பைத் தொடர ஊக்குவிக்கும்வகையில் அவர்களுக்கென நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அண்மைக்காலமாக அதன் செயற்பாட்டு பயனை உணரக்கூடியதாக இருக்கிறது.

கலை, இலக்கியம், நடனம் மற்றும் சங்கீதம் என்ற எல்லாத்துறைகளிலும் பல்கலைக்கழகத்திற்கு மாணவர் தேர்வு. திணைக்களத்தினூடாக நடாத்தப்படும், சகல விளையாட்டுகளிலும் மாணவர்கள் படைத்துள்ள அபார சாதனைகளும் அவற்றினூடாகப் பெற்ற வினைத் திறன்களும்.

### க.பொ.த (சாதாரணம்) 2015

2 மாணவர்கள் 7ஏ 1பீ 1சீ ,
1 மாணவன் 7ஏ 2சீ,
08 மாணவர்கள் 09 பாடங்களில் சித்தி,
4 மாணவர்கள் 08 பாடங்களில் சித்தி

### க.பொ.த (உயர்தரம்) 2015

**சிறந்த பெறுபேறு**
**விதுஷிகா பால சுப்பிரமணியம் - பீ 2சீ**
**பகீரதி கணேசலிங்கம் - 1ஏ 1பீ 1சீ**
**நர்மதா சிவகரன் - 1ஏ 2சீ**
**தசானி ரஞ்சன் - 2பீ 1சீ**
**திலக்ஷனா மகேந்திரன் - 2பீ 1சீ**
**சோபிதா விக்கினேஷ்வரன்- 1 ஏ 1சீ 1எஸ்**
**சி.கஜப்பிரியா -1பீ 2சீ**
**கம்சா சிவானந்தம் - 1பீ 2சீ**
**அனுசாளினி அருந்தவச் செல்வம் -1பீ 2சீ**
**வசீகரகுலம் தனுசுயன் - 1பீ 2சீ**

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2015

தோற்றியவர்கள் தொகை 64 பேர். சித்தியெய்தியவர்கள் 04 பேர் (7 வீதம்) 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்தோர் - 48பேர் (76 வீதம்)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2016

தோற்றியவர்கள் தொகை 58 பேர். **ப.நிவேதிசன் - 165, உ.அபிஷேக் - 155, த. அஜந்தன் - 154 புள்ளிகள்.** 02 பேர் 151 புள்ளிகள், 34 பேர் 70 புள்ளிக்கு மேல்.

## சவால்கள்

மைதானம் பாடசாலைக்கருகில் இல்லாதது பெரிய பிரச்சனையான விடயமாக உள்ளது. மைதானத்தை நாளாந்த பாவனைக்கு உட்படுத்தமுடியாது மாணவர்கள் கஷ்டமுறுகின்றனர்.

வகுப்பறைகள் போதாமை. தற்போது நடைபெறும் புதிய கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையுமானால் இதை ஓரளவு சமாளிக்கலாம். மற்றும் ஆசிரிய பற்றாக்குறை. "நாடகமும் அரங்கியலும்"



சம்பந்தப்பட்ட துறையில் திறமைமிக்க மாணவர்களைக் கொண்டது இந்தப் பாடசாலை. ஆனாலும் தற்போது பல மாணவர்கள் இந்தத் துறையில் படிக்க முடியாமல் இருப்பதற்கு, அந்தத் துறை சார்ந்த ஆசிரியர்கள் இல்லாத குறை நிலவுகிறது. 2014 வரை இயங்கிவந்த இத்துறை, அக்காலத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியருக்குப் பதிலாக இதுவரை புதியவர் நியமிக்கப்படாதது இது இங்குள்ள பாரிய சவால்களில் ஒன்று.

பாடவிதானத்துடன், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முன்னெடுப்புகளின் அவசியம்.

தற்போதுள்ள இரு அறைகளுடன் 3500 நூல்களைக் கொண்ட நூலகத்தின் விரிவாக்கம் அவசியமாகிறது.

மிகப்பெரிய சவாலாக குறிப்பிட விரும்புவது, இத்தகைய பாடசாலைகளில் படித்துச் சித்தியெய்திய மாணவர்கள் வலயம் ஒன்றை நோக்கிப் போக முயல்வது. நாம் அதீத கவனம் செலுத்திப் பாடுபட்டு, அதற்குரிய வளம் அமைத்துக் கொடுத்த பின்னர் அவர்கள் எமது பாடசாலையை விட்டுச் செல்வதென்பது ஜீரணிக்க முடியாத பாரிய பிரச்சினையாக உள்ளது. தரம் ஐந்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தவர்கள் போவதைப் பார்த்து, அதற்கு அடுத்த தரத்திலுள்ள சித்தியெய்தாது, அதிக புள்ளி எடுத்தவர்களும் வலயம் ஒன்றை நோக்கிப் போவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததொரு விடயம். இதில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயங்களில் ஒன்று என்னவெனில், இந்த பாடசாலையில் சித்தியெய்தியவர்கள் இங்கிருந்து போக, வலயம் ஒன்றிலுள்ள பாடசாலையில் ஆரம்பப்பிரிவில், தரம் ஐந்தில் 100 புள்ளிகளுக்குக் குறைவாக எடுத்தவர்கள் தரம் ஆறுக்கு இந்த பாடசாலைக்கு விண்ணப்பிக்கின்றனர். திறமையானவர்களை அத்தகைய பாடசாலைக்குக் கொடுத்துவிட்டுத் திறமையற்றவர்களை உள்வாங்குபவர்களாக இணுவில் மத்திய கல்லூரி இருப்பதனால் க. பொ.த சாதாரணம் மற்றும் உயர் தரம் போன்ற பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெறமுடியாது இருக்கிறது. இருந்தும் க.பொ.த சாதாரண தரத்தில் 2014 இல் மாணவர்கள் பெற்ற பெறு பேறுகளைக் காட்டிலும் 2015 பெறுபேறுகள் ஓரளவு திருப்திகரமாக அமைந்திருக்கிறது. முன்னர் 33 சத வீதமாக இருந்த பெறுபேறுகள் 56 சத வீதமாக அமைந்திருக்கிறது. கணித. விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்களினது பெறுபேற்று வீதம் முன்னேற்றகரமாக உள்ளது. 2015 இல் பாடசாலையின் பெறுபேறுகள் சகல மட்டத்திலும் முன்னேற்றமாகவுள்ளது.

இருந்தும் பொதுவாகப் பெற்றோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இல்லாதிருப்பதும் ஒரு கவலைக்கிடமான விடயம். பிள்ளைகள் லீவு எடுப்பதற்கு அவர்கள் அனுமதிக்கிறார்கள். பிள்ளைகளின் படிப்பை குளப்புவதினின்றும் அவர்களை வெளிக்கொணர கல்வி பற்றிய சரியான விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவது பாரிய சவாலாகவுள்ளது.

'ஈழத்து திரைப்படம்' என்ற லேபிளோடு தென்னிந்தியாவில் மாத்திரமல்ல, ஈழத்திலும் உருவாகின்ற படங்கள் பலவும், எமக்கு பொருந்தாத அல்லது சம்பந்தமேயில்லாத கதைக்களங்களோடுதான் பயணிக்கின்றன. சில படங்கள் அதீத உணர்வேற்றலுடன், எமது போராட்டத்தை வியாபார முதலீடாகவும் பயன்படுத்துகின்றன. இந்த நிலையில் கடந்த வருடம் யாழ்.சர்வதேசத் திரைப்பட விழாவில் 'முற்றுப்புள்ளியா?' திரைப்படம் போரால் சிதைவுற்ற எங்களின் வாழ்வியலை பேசி நின்றது. சர்ச்சைக்குரிய சில கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், கலைத்துவ அம்சங்களின் போதாமை இருந்தாலும், திரைக்கதையில் தெளிவீனங்கள் இருப்பினும் அதையெல்லாம் தாண்டி, போருக்கு பின்னான தமிழ் மக்களின் வாழ்வைச் சொல்வதில் 'முற்றுப்புள்ளியா?' முக்கியமானதொரு திரைப்படம். இந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணி ஆதிரை என்கிற சுந்தரியாக நடித்த அன்னபூரணி. இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட நடனக் கலைஞரான அன்னபூரணி, இந்தப் படத்தில் மிகச் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார். நடித்தார் என்பதை விடவும் ஒரு பெண்போராளியாக, கணவனைத் தேடும் அபலைப் பெண்ணாக திரையில் வாழ்ந்திருந்தார். அவருடன் ஒரு நேர்காணல்.





நேர்காணல் : தமிழ்

# பெண் போராளியாக வாழ்ந்தேன்

## நடிகை அன்னபூரணியின் அனுபவங்கள்

**கேள்வி: 'முற்றுப்புள்ளியா' படத்தில் நடிக்கும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?**

**பதில் :** சிறு வயதில் இருந்தே எனக்கு கலை ஆர்வம் அதிகம். அதனால் பத்தாம் வகுப்பு படித்து முடித்ததும் 'கலாஷேத்ரா'வில் இணைந்து நடனம் பயிலத் தொடங்கினேன். பின்னர் உளவியல் மற்றும் யோகக்கலை துறையில் மேற்படிப்பை முடித்தேன். இப்போது ஒரு நடனப்பள்ளியை ஆரம்பித்து நடனமும், யோகாவும் கற்றுக் கொடுத்து வருகிறேன். இந்த நிலையில் எனது கலைத்துறை நண்பருடன் இணைந்து, சமூக விழிப்புணர்வுக்கான ஆற்றுகைகள் செய்து கொண்டிருந்தேன். அப்போதுதான் "முற்றுப்புள்ளியா?" படத்தில் நடிக்க வாய்ப்பு வந்திருப்பதாக என் நண்பர் கூறினார்.

"முற்றுப்புள்ளியா?" படத்தில் நடிக்க இயக்குநர் ஷெரின் என்னைத் தெரிவு செய்திருந்தார். இதற்காக ஒரு நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்தார். எனக்கு இந்தப் படத்தில் நடிக்க ஆசை இருந்தாலும், வீட்டில் உள்ளவர்களை சம்மதிக்க வைப்பதென் பதுதான் கஷ்டமாக இருந்தது. இன்றைக்கும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் சினிமாவில் நடிக்கச் செல்வதென்பது ஜீரணிக்க முடியாத விடயமாகவே பார்க்கப்படுகின்றது. ஆனாலும் படத்தின் திரைக்கதையைப் பார்க்கும் போது அது என் மனதைத் தொட்டிருந்தது. வழக்கமான தமிழ் சினிமாவில் காட்டப்படுவது போன்ற யதார்த்த விரோதக் கதை இதில் இருக்கவில்லை. மாறாக ஈழத்தில் என்னைப் போன்ற இன்னொரு பெண்ணுக்கு நிகழ்ந்தவையே பதிவு செய்யப்பட்டிருந்தன. அப்படியானால், நான் ஏன் பயப்பட வேண்டும்? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் தான் நான் நேர்முகத்தேர்வுக்குச் சென்றேன். அங்கு ஆதிரை அல்லது சுந்தரி பாத்திரத்துக்கு தெரிவு செய்யப்பட்டு முதல் நாள் படப்பிடிப்புக்குச் செல்லும்வரை வீட்டில் எதுவும் நான் சொல்லவில்லை. பின்னர் மெதுவாக விடயத்தைச் சொன்னேன். ஆரம்பத்தில் கொஞ்சம் பயந்தார்கள். எதற்கு இப்படித் தேவையற்ற வேலை என்றார்கள். ஆனாலும் நான் பொறுமையாக அவர்களுக்கு படத்தின் கதையை விளக்கிய பின்னர் எந்தத் தடையும் அவர்கள் போடவில்லை. நாயகிக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற நடைமுறை வாழ்வியலைப் பேசுகின்ற படங்களில் நடிக்கும் தன்னம்பிக்கை எனக்கு "முற்றுப்புள்ளியா?" படத்தின் மூலம் கிடைத்துள்ளது. அப்படியான படங்கள் கிடைத்தால் நிச்சயமாக நடிப்பேன். அதற்கு என் வீட்டில் உள்ளவர்களும் சம்மதிப்பார்கள் என நம்புகிறேன்.

**கேள்வி: ஈழப்போர் பற்றி , அதன் இறுதி நாட்கள் பற்றி ஏற்கனவே அறிந்திருந்தீர்களா, அல்லது படப்பிடிப்பின் போதுதான் போர் பற்றிய அனுபவங்கள் கிட்டியதா?**

**பதில் :** ஈழப்போரின் இறுதி நாட்கள் பற்றி முன்னர் நான் அறிந்து கொண்டதற்கும், இப்போது நான் உணர்வதற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. சுந்தரியாக நான் நடித்தேன் என்பதை விட வாழ்ந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். போர் நடந்த நாட்களை விடவும் அதற்குப் பின்னரான வாழ்வியல் துயரங்களையும், சவால்களையும் எப்படி எதிர்கொள்கின்றோம் என்பதைத்தான் முற்றுப்புள்ளியா திரைப்படம் அதிகம் பேசியது. பெண் போராளியான ஆதிரை பின்னர் இன்னொரு போராளியின் மனைவியாக சுந்தரி என்ற இயற்பெயரோடு புதிய வாழ்வுக்குள் நுழைவதும், போரின் விளைவால் கடைசியில் தன் கணவனைத் தேடி அலைகின்றதுமான உணர்ச்சி பூர்வமான பாத்திரம். இந்தப் பாத்திரம் மூலம் போரால் ஏற்பட்ட வலியை மிக அழுத்தமாகப் படம் சொல்கிறது.

உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுதான் அவசியமான செய்தி என நான் நினைக்கின்றேன். போர், சுனாமி போன்றா அழிவுகள் நிகழும் தருணங்களில் எல்லோரிடமும் அது பற்றிய பரபரப்பும், விழிப்புணர்வும் சடுதியாக உண்டாகும். ஆனால் நாளடைவில் அதை மறந்துவிடுவோம். பாதிக்கப்பட்டவர்களையும் மறந்துவிடுவோம். எனினும் உண்மையில் ஒரு அழிவொன்று நிகழ்ந்த பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் இயல்பு வாழ்வை மீண்டும் அடைவதற்கான எத்தனங்கள், போரை விடவும் கொடியவை. அதனைப் பதிவு செய்த படைப்பென்ற வகையில் "முற்றுப்புள்ளியா?" படத்தில் எனக்கும் ஒரு பங்கிருப்பதை நினைத்து ஆனந்தமடைகிறேன்.

**கேள்வி: சுந்தரியாக நடிக்க ஏதும் பிரத்தியேக முன்னேற்பாடுகள் செய்தீர்களா, ஈழப் பெண்ணொருத்தியின் வாழ்வியலை அந்தச் சூழமைவில் வசிக்காத நீங்கள் உணர்ந்து நடிப்பதென்பது சிரமமாக இருக்கவில்லையா?**

**பதில் :** சுந்தரி பாத்திரம் ஒரு கற்பனைப் பாத்திரமல்ல. முழுக்க முழுக்க இலங்கையில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண் போராளியின் நிழல்தான் சுந்தரி பாத்திரம். இந்தப் பாத்திரத்தை நான் முழுதுமாக உள்வாங்கச் சில முன்னாயத்தங்களைச் செய்ய வேண்டியிருந்தது. நான் ஈழத்துப் பெண்ணல்ல. ஈழ மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும் சற்று எட்ட நின்று கவனித்தவள். அப்படிப்பட்ட நான் ஒரு ஈழப்பெண்ணாக நடிக்க, இத்தகைய முன்னாயத்தங்கள் மூலமே சுந்தரியாக மாற முடியும். ஈழ மக்கள் பற்றி நான் ஏற்கனவே அறிந்தவற்றை விடவும், மேலதிகமாக சில விடயங்களை அறிந்து கொள்வதற்கு நெறியாளர் ஷெரினுடன் நீண்ட நேரம் உரையாடினேன். அவரின் திரைக்கதையை பலமுறை மனப் பாடம் செய்யாத குறையாக வரிக்கு வரி வாசித்தேன். இதைவிட உண்மையான சுந்தரி எழுதிய கவிதைகளை ஷெரின் என்னிடம் தந்தார். அந்தக் கவிதைகள் சுந்தரியின் மனவலிகளை கோடிட்டுக் காட்டியது. இவற்றையெல்லாம் உள்வாங்கி, சுந்தரி எப்படி இருப்பார், எப்படிக் கதைப்பார் என்று ஒரு பாத்திரத்தை உருவாக்கினேன். படப்பிடிப்பு தொடங்குவதற்கு பத்து, பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் தனியாக ஒருமுறை சுந்தரியாக என்னை நான் உருவகித்துப் பார்ப்பேன். அந்த உருவகிப்பு நான் படப்பிடிப்பில் சுந்தரியாகவே வாழ்வதற்கு உதவியது. படப்பிடிப்பின் போது என்னை நான் ஒரு பெண் போராளியாகவே உணர்ந்தேன்.

**கேள்வி: படத்தைப் பார்த்தவர்கள் பலரும் நீங்கள் ஒரு ஈழத்துப் பெண்ணாகவே வாழ்ந்திருப்பதாக சிலாகிக்கிறார்கள். இது பற்றி..?**

**பதில் :** படத்தில் நடித்தேன் என்பதை விடவும், உண்மையான சுந்தரியின் மன உணர்வுகளை, ஏக்கங்களை, போராட்டங்களை வெளிப்படுத்தும் ஒரு சாதனமாகவே என்னைப் படப்பிடிப்புத் தளங்களில் உணர்ந்தேன்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



★ பாபி சிம்ஹா தற்போது தன் படத்தைத் தானே தயாரிக்கும் அளவுக்கு வளர்ந்தது நல்ல விஷயம்தான். ஆனால், தயாரித்துக்கொண்டிருக்கும் "வல்லவனுக்கு வல்லவன்" படத்தின் இயக்குனர் விஜய் தேசிங்கை படாதபாடு படுத்திவிட்டாராம். படத்தைத் தன் நண்பர்கள் நலன் குமாரசாமி மற்றும் கார்த்திக் சுப்புராஜுக்குப் போட்டுக் காட்டியவர், அவர்களின் ஆலோசனையால் படத்தின் இயக்குநருக்கே தெரியாமல் கிளைமாக்ஸை மாற்றி ஷூட் செய்து இணைத்திருக்கிறாராம்.

★ சமீபத்தில் இயக்குநர் தரணியைச் சந்தித்தாராம் விஜய். அப்போது 'கில்லி பார்ட்-2' க்கு கதை ரெடியாக இருப்பதைச் சொல்லியிருக்கிறார் தரணி.

கதையின் அவுட்லைனைக் கேட்ட விஜய்க்கு கதை பிடித்துப்போக, 'விரைவில் நாம் இணையலாம்' என தரணிக்கு நம்பிக்கை கொடுத்திருக்கிறாராம்.

★ ரத்தின சிவா இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்திருக்கும் 'றெக்க' படத்துக்கு தணிக்கையில் 'யு' சான்றிதழ் கிடைத்திருக்கிறது.

விஜய் சேதுபதி, லட்சுமி மேனன், சதீஷ், ஹரிஷ் உத்தமன் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'றெக்க'. இமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ரத்தின சிவா இயக்கி இருக்கிறார். கணேஷ் தயாரித்திருக்கும் இப்படத்தை சிவபாலன் பிக்சர்ஸ் வெளியிடுகிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்து இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வந்தது. அதனிடையே படத்தின் ட்ரெய்லர் மற்றும் பாடல்கள் வெளியிடப்பட்டன. இது விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகி இருக்கும் முதல் கமர்ஷியல் படமாகும்.

★ "பாலியல் தொல்லை தரும் ஆண்களை பார்த்து பெண்கள் பயப் படக்கூடாது மாறாக அவர்களுக்கு தகுந்த பதிலடி தர வேண்டும்.

தவறு செய்யும் ஆண்கள் பெண் களை எதிரெடுத்து பார்க்க பயப்படும் வகையில் அந்த பதிலடி இருக்க வேண்டும். பாலியல் குற்றத்தில் ஈடுபடும் ஆண்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் அப்போதுதான் நாட்டில் பாலியல் குற்றங்கள் குறையும்.

பெற்றோர், வெளியில் அதிகம் சுற்றக் கூடாது என மகள்களை மட்டும் கண்டிக்க கூடாது. தங்கள் மகன்களையும் கண்டிக்க வேண்டும்" என கூறுகிறார் டாப்ஸி.



★ ராம்பாலா இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கவிருக்கும் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வடிவேலுவும் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்.

ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் 'ப்ரூஸ்லீ' மற்றும் 'கடவுள் இருக்கான் குமாரு' ஆகிய படங்களின் இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனைத் தொடர்ந்து ராஜீவ் மேனன் இயக்கும் படம், சசி இயக்கும் படம், 'அடங்காதே' உள்ளிட்ட படங்களில் நடிக்கவிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ்.

இப்படங்களைத் தொடர்ந்து ராம்பாலா இயக்கும் படத்தில் நாயகனாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். இப்படத்தின் படப்பிடிப்பு டிசம்பரில் தொடங்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது. இப்படத்தை ஸ்டீபன் தயாரிக்க விருக்கிறார்.

இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வடிவேலு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார். தற்போது நாயகனாக மட்டுமன்றி பல்வேறு படங்களில் காமெடியனாகவும் நடிக்கத் தொடங்கியிருக்கிறார் வடிவேலு.

முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் இப்படத்தில் ஜி.வி.பிரகாஷ் மற்றும் வடிவேலும் ஆகியோருடன் நடிக்கும் நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது.

★ "அவதூறுகளுக்கு கவலைப்பட்டால் அழுது கொண்டேதான் இருக்க வேண்டும். சினிமாவில் கிசுகிசுக் கள் என்பது சாதாரணம். சொந்த வாழ்க்கையில் அவை தாக்கத்தை ஏற்படுத்துவதும் சகஜம்தான். எனக்கும் அவை வலியை கொடுத்து இருக்கின்றன. ஆனால் அது கொஞ்ச நேரம் தான் இருக்கும். அதன் பிறகு சாதாரணமாகி விடுவேன்.

கவலைப்பட்டுக் கொண்டு இருந்தால் தூக்கம் வராது. நம் மீது எந்த தவறும் இல்லாதபோது ஏன் வருத்தப்பட வேண்டும்? இந்த உணர்வு எனக்குள் வந்த பிறகுதான் நன்றாக தூக்கம் வருகிறது. தமிழ், தெலுங்கு படங்களில் தீவிரமாக நடித்துக்கொண்டு இருக்கிறேன். எனக்கு நல்ல கதையம்சம் உள்ள படங்கள் அமைகின்றன. கதாபாத்திரங்களும் நடிப்புத் திறமையை வெளிப்படுத்துவதாகவே இருக்கிறது. எல்லா படங்களும் ரசிகர்களின் வரவேற்பை பெற்றுள்ளன." என்கிறார் அனுஷ்கா



★ தெலுங்கில் சின்ன பட்ஜெட்டில் தயாராகி பல கோடி வசூல் செய்த 'க்ஷணம்', 'பெள்ளி சூப்புலு' போன்ற சில படங்களைத் தமிழில் ரீமேக் செய்ய போட்டா போட்டி நடக்கிறது. 'க்ஷணம்' படத்தின் ரீமேக் உரிமையை வாங்கிய சிபிராஜ் தானே அதில் ஹீரோவாக நடிக்கிறார். ஒரிஜினலில் நடித்த அடா ஷர்மாவையே தமிழில் நடிக்க வைக்க முடிவு செய்துள்ளார். இன்னும் சில படங்கள் ரீமேக் போட்டியில் இருக்கின்றன.

★ சமீபத்தில் உலகின் பணக்கார நாடா புரூனேயின் இளவரசி ஒ விருந்தில் 'ஆலுமா டோலு பாடலைக் கேட்டுவிட்டு, அஜி பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறா படத்தின் சில காட்சிகளைப் பா இவ்வளவு அழகாக இருக்கி அவரைப் பார்க்க வேண்டும் விருப்பப்பட்டிருக்கிறாராம். பிர விருந்தும் அஜித்துக்காகத் தய இருக்கிறதாம்.

★ 'வாலு' மாதிரி நீண்டாலும் பரவாயில்லை, அடுத்த படமும் சிம்புவோடுதான் எனப் பிடிவாதமாக ஒரு வருடத் துக்கும் மேல் காத்திருந்தார் இயக்குநர் விஜய் சந்தர். தெலுங்கு 'டெம்பர்' படத்தை ரீமேக் செய்யலாம், உடனே பூஜை போடலாம் என நினைத்திருந்த நேரத்தில் விஷால் வந்து கட்டையைப் போட, அந்தத் திட்டத்தைக் கைவிட் டார்கள். பின் சிம்புவும் மற்ற படங்களில் நடிக்கவும், ஓய்வெடுக்கவும் சென்றுவிட்டார். இந்த இடைவெளியில் ஒரு கதையைத் தயார் செய்து விட்டாராம் விஜய் சந்தர். சிம்பு சம்மதம் சொன்னதும் படப்பிடிப்பு ஆரம்பமாம்.






★

'சினிமாவில் இருந்து அரசியலுக்கு போகும்' நடிகைகள் வரிசையில் மலையாள நடிகை மஞ்சு வாரியரும் விரைவில் இணைவார் என்கிறார்கள். அதற்கு அச்சாரம் போடும் விதமாக பி.ஜே.பி மாநாட்டில் பிரதமர் மோடி, அமித்ஷா முன்னிலையில் நாட்டிய நாடகம் நடத்துகிறார் மஞ்சு. கட்சியில் இணைந்தபின் முக்கியப் பதவியும் வழங்கப்படும் என்கிறார்கள்.

★ 'பொல்லாதவன்', 'வேட்டையாடு விளையாடு' உட்பட பல படங்களில் வில்லன் நடிப்பில் ரசிகர்களின் மனங்களை கவர்ந்த நடிகர் டானியல் பாலாஜி தற்போது இளையதளபதி விஜய் நடித்து வரும் 'பைரவா' படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் பிரதான வில்லனான ஜெகபதிபாபுவுக்கு அடியாளாக நடித்து வரும் டானியல், அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் விஜயுடன் பணிபுரிந்த அனுபவம் குறித்து கூறியுள்ளார்.

'பைரவா' படத்தின் படப்பிடிப்பின் போது விஜய், படக்குழுவினர் அனைவரையும் தனித்தனியாக உற்சாகப்படுத்தியது பெரும் வியப்பை தந்தது. எப்படி இவரால் மட்டும் இது சாத்தியமாகிறது என்று ஆச்சரியப்பட்டேன். சக நடிகர்களிடம் விஜய் காட்டும் அக்கறை ஒவ்வொரு நடிகரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. நான் இந்த படத்தில் தாடியுடன் தோன்றுகிறேன் என டானியல் பாலாஜி தனது நிலை குறித்து கூறியுள்ளார்.



★ 'ஜோக்கர்' படத்தில் ரம்யா பாண்டியன் நடிப்பைத் திரையுலகில் பாராட்டாதவர்களே இல்லை. பாராட்டுகளோடு நிறைய பட வாய்ப்புகளும் வருகின்றன. அதில் ஒன்றுதான் 'ஆண் தேவதை'. இதில் சமுத்திரகனி ஜோடியாக நடிக்கிறார் ரம்யா. 'ரெட்டச்சுழி' மூலம் பாலசந்தர், பாரதிராஜா இருபெரும் ஆளுமைகளை ஒரே படத்தில் நடிக்க வைத்த தாமிரா இந்தப் படத்தை இயக்குகிறார்.




★

வருண்தவான் நடிக்க டேவிட்தவான் இயக்கத்தில் உருவாக இருக்கிறது 'ஜூட்வா 2'. சல்மான் இரட்டை வேடங்களில் நடித்த சூப்பர் ஹிட் படமான 'ஜூட்வா'வின் இரண்டாம் பாகமாக உருவாகும் இந்தப் படத்தில் பரினிதி சோப்ராவும், ஜாக்குலின் ஃபெர்ணாண்டஸும் வருணுக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் ஆனார்கள். இடையில் என்ன நடந்ததோ, ஜாக்குலின் வாய்ப்பைத் தட்டிப் பறித்திருக்கிறார் இடையழகி இலியானா. முக்கிய புள்ளி ஒருவரின் சிபாரிசில் தான் அந்த வாய்ப்பு இலியானாவுக்குக் கிடைத்தது எனவும் பேசிக் கொள்கிறார்கள்.

★

நடித்தால், நல்ல படங்களில் மட்டுமே நடிக்க வேண்டும் என்ற மன நிலையில் இருக்கிறார் சமந்தா. அடுத்த ஆண்டு சிவகார்த்தி கேயன் படத்தில் நடிக்கவிருக்கும் சமந்தாவுக்கு, இப்போதும் பல வாய்ப்புகள் வருகின்றன. ஆனால், 'எந்தக் கதையும் எனக்குப் பிடிக்கவில்லை' எனக் காத்துக் கொண்டு இருக்கிறாராம்.




★ சினிமா உலகில் நடிகர், நடிகைகள் காதலிப்பதும், பின்னர் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிவதும் தற்போது சர்வ சாதாரணமாகி விட்டது. அந்த வரிசையில் தற்போது வரலட்சுமியின் காதலும் முறிந்து விட்டதாக வெளிவந்துள்ள செய்தி பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

விஷாலும், வரலட்சுமியும் காதலித்து வருவதாக கோலிவுட் வட்டாரத்தில் ஒரு பேச்சு அடிபட்டது. இந் நிலையில், வரலட்சுமி தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு டுவிட் ஒன்றை பதிவு செய்துள் ளார்.

அதில் காதல் முறிவுகள் இப்போது மிகவும் மோசமான நிலைக்கு போய்க் கொண்டிருக்கிறது. ஏழு வருடமாக இருந்த காதலை ஒருவர் தனது முகாமையாளர் மூலமாக முறிந்துவிட்டதாக சொல்லி அனுப்புகிறார். உலகம் எங்கே போகிறது? காதல் எங்கே இருக்கிறது? எனத் தெரிவித்துள்ள அவர் தனது காதலர் யார் என கூறவில்லை.

★ சூர்யா ஹரி இயக்கத்தில் 'எஸ்-3' படத்தில் பிசியாக நடித்து வருகிறார். இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந் நிலையில், தற்போது இப் படத்தில் 'பாகுபலி' படத்தின் ஹீரோ பிரபாஸ் முக்கிய தோற்றத்தில் நடிப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளது.

இப் படத்தில் சூர்யா நடித்த பொலிஸ் வேடத்திலேயே பிரபாஸும் நடித்திருப்பதாக சொல்லப்படுகிறது.

இந் நிலையில், பாகுபலி ஹீரோ பிரபாஸும் இப்படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடிக்கவிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

★ ஜெயம் ரவியின் 'போகன்' டிசம்பரில் வெளியாகும் என்று பிரபுதேவா அறிவித்துள்ளார். இவர்தான் இந்த படத்தின் தயாரிப்பாளர்.

'போகன்' படத்தை அண்மையில் தான் பார்த்ததாகவும், 'தனி ஒருவன்' படத்திற்கு பின்னர் ஜெயம் ரவிக்கு இந்த படம் பெரிய வெற்றியை கொடுக்கும் படமாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## உண்ணுவோம் காலை உணவையே...!

காலை உணவு உண்ணுவோம்
கவலையின்றி வாழுவோம்
காலை உணவை உண்டால்தான்
கல்வியில் சிறந்து திகழ்ந்திடலாம்.
பள்ளிக்குக் கிளம்பும் வேளையிலே
பசியும் எடுக்க வழியில்லையே
பசியும் எடுக்கும் வேளையிலே
பாடம் நடந்துகொண்டிருக்குமே.
பசியில் கவனம் சிதறிடுமே
படிப்பினில் நாட்டம் குறைந்திடுமே
புசித்துவிடுவோம் காலை உணவை
புரிந்துகொள்வோம் பாடங்களை.
மதிப்பெண் அதிகம் பெறுவதற்கும்
மயக்கம் போடாமல் இருப்பதற்கும்
புதிதாய்க் கற்றுக்கொள்வதற்கும்
புசிப்போம் காலை உணவையே.
ஆற்றல் மேலும் பெருகிடவும்
ஆரோக்கியம் சிறந்து விளங்கிடவும்
வேலை நன்றாய்ச் செய்திடவும்
காலை உணவைப் புசித்திடுவோம்.



## குட்டீஸ் பரிசுப் போதி – 13




குட்டீஸ் பரிசுப்போதி–13

★ தரம் 11 க்கு உட்பட்ட மாணவர்கள் பங்குபற்றலாம்.

### குட்டீஸ் பரிசுப் போதி – 12 முடிவுகள்

விடை / 11
செப்டெம்பர் 1921

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

★ கனிஸ்ரா – தரம்–6
யா/வடமராட்சி இந்துக் கல்லூரி
அல்வாய் வடமத்தி,
இன்பர் சிட்டி, பருத்தித்துறை

★ ஜெகதாஸ் கிருஷாந் – தரம்–9
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி
தேவரையாளி,
நெல்லியடி வடக்கு.

**முடிவுத்திகதி: 18.10.2016**

## புறாவும் விம்பமும்

ஒரு மனிதன் அழகான மண்டபம் ஒன்றைக் கட்டினான். அது எண்கோண வடிவில் இருந்தது. அதன் எட்டுப் பக்கச் சுவர்களிலும் நிலைக் கண்ணாடிகள் பதித்திருந்தான். எந்த உருவமும் எந்தத் திசையில் பார்த்தாலும் தெரியும்படி அமைக்கப்பட்டிருந்தது.

மண்டபத்தின் நடுவே அழகான ஒரு மலரைக் கொண்டு வந்து வைத்தான் அந்த மனிதன். அழகான மலர், எட்டுப் பக்கங்களிலும் எட்டு மலர்களாகத் தோற்றம் அளித்தது. அவன் கதவை மூடுமுன் அந்த மண்டபத்துக்குள் சிறு வெண்புறா ஒன்று நுழைந்து விட்டது. அது கண்ணாடியில் தனது பிம்பத்தைப் பார்த்தது.

கண்ணாடியில் தெரியும் பிம்பத்தையே உண்மை என்று எண்ணி அதை நோக்கிப் பாய்ந்து பறந்தது. எட்டு திசைகளிலும் அது மாறி மாறிப் பறந்தது. கண்ணாடியில் மோதிற்று. ஆனால் அந்தப் பறவையால் வெளியேற முடியவில்லை.

கடைசியில் புறா சோர்ந்து போய்த் தரையில் விழுந்தது. அதன் அருகே இருந்த அழகான மலரை அது அப்போது தான் பார்த்தது. அந்த இடத்தில் அதுவே உண்மை என்பதை உணர்ந்து கொண்டது.

வாழ்க்கையில் அந்தப் புறாவைப் போலவே, நாம் மாய நிழல்களைத் தேடி அலைகிறோம். நமக்குள்ளேயே இருக்கும் இறைவனை நாம் உணருவதில்லை. வாழ்க்கையில் தோல்விகளை அடைந்து, மனம் சலித்துப் போய் விழும் வேளையில் நிதர்சனமான உண்மை எது என்பதை உணருகிறோம்.




சிறுவர் தொடர்




"கெட்டிக்காரி" என்றது பூதம்

"எப்படி?" என்று மாலா கேட்டாள்.

"ஒரு முட்டை இரண்டாகியது. இரண்டு நான்காகியது. நான்கு எட்டாகியது.... அப்படியே பத்துத் தடவைகள் செய்தால் இறுதியில் அவ்வளவு முட்டைகள் வரும்."

வசந்தன் அவ்விடத்திற்கு வந்தான்.

"இருளாகி வருகிறது. கெதியாகப் புறப்படுங்கள். கோபுரந்தாங்கி உன்னால் தான் மினக்கேடு..." என்றான்.

"பத்துநாளுக்கு எனக்கு இனிப் பசியில்லை. வாருங்கள் புறப்படுவோம்..."

அவர்கள் அனைவரும் புறப்பட்டனர். அப்பொழுது கமக்காரன் ஓரிடத்தினைச் சுட்டிக் காட்டினான். அவ்விடத்தில் படகோட்டி சின்னப்பு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

"பாவம்... வயதாகிவிட்டது. களைப்பு..."

வசந்தன் கோபுரந்தாங்கியைப் பார்த்தான். அவன் பார்வையின் அர்த்தத்தை பூதம் புரிந்து கொண்டது. சின்னப்பு உறக்கம் கலைந்து கண் திறந்து பார்த்தார். தான் இருபதடி உயரத்தில் இருப்பது தெரிந்தது. கீழே பார்த்தார். தலையைச் சுற்றியது. கண்களை இறுக மூடிக்கொண்டார்.

வெகு வேகமாக நடந்தனர்.

"என்னப்பா, நான் பாரமாக இருக்கிறேனா?" என்று சின்னப்பு கோபுரந்தாங்கியிடம் கேட்டார்.

"அப்படி என்ன பாரம்? அது சரி, கிழவனாரே, நீர் எவ்வளவு நிறை?..." என்று பூதம் கேட்டது.

"என்னுடைய நிறையையும் என் பேரனின் நிறையையும் சேர்த்தால் 260 கிலோ கிராம் வரும். எனது நிறை பேரனின் நிறையை விட 200 கிலோ கிராம் அதிகம். அவ்வளவு தான் என் நிறை..." என்றார். சின்னப்பு பூதம் தலையைச் சொறிந்து கொண்டது. சும்மா இருக்காமல் கிழவனிடம் ஏன் வாயைக்கொடுத்தேன் என் எண்ணமிட்டது. பேச்சை மாற்றிவிடுவோம் என பூதம் எண்ணியது.

"பெரியவரே உமக்கு எத்தனை வயதாகிறது?"

"எனக்கா...?"

"பின்னே எனக்கா?" என்று பூதம் சிரித்தது.

"சரி கேள். எனது பேரனின் வயதைப் போல என் வயது நான்கு மடங்கு..." என்றார் சின்னப்பு.

"உமது பேரனின் வயதென்ன?"

"மூன்றாண்டுகளுக்கு முன்னால் இருக்கும் என் பேரனின் வயதை மூன்றால் பெருக்கி, மூன்றாண்டுகளுக்குப் பின்னால் இருக்கும் என் பேரனின் வயதை மூன்றால் பெருக்கி, கழித்தால் என் பேரனின் இன்றைய வயது வரும். அதைப் போல் நான்கு மடங்கு என் வயது..."

அவர்கள் சத்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். இன்னமும் முற்றாக இருள் சூழவில்லை. சத்திரத்தில் பலர் நிற்பது தெரிந்தது. எல்லோருக்கும் முன்னால் சத்திரக்காரன் அவர்களைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

"என்ன கோபுரந்தாங்கி... நான் கேட்ட வினாக்களுக்கு விடை தரவில்லை."

"பெரியவரே. அதோ நாங்கள் வரவேண்டிய சத்திரம் தெரிகிறது. தெரியவில்லையா?"


கிழவனார் சின்னப்பு பிடிவாதமாக இருந்தார்.

"அது இருக்கட்டும் என் நிறை என்ன? வயதென்ன?"

"உமது நிறை யாருக்கு வேணும்... உமது வயது எவ்வளவு என்றால் யாருக்குத் தேவை..." என்ற கோபுரந்தாங்கி தோளில் வசதியாக அமர்ந்திருந்த சின்னப்புவை அப்படியே பற்றிப் பொத்தென நிலத்தில் போட்டுவிட்டு, சத்திரத்தை நோக்கி நடக்கத் தொடங்கியது.

"முட்டாள்... மோடன்..." என சின்னப்பு திட்டினார். இடுப்பு வலித்தது.

(புதிர்கள் நீளும்)




# தெறிக்க விடலாமா? குப்பைகளை

வீட்டை விட்டு வெளியில் வீதியில் இறங்கினால், எதை எல்லாம் காணலாமோ இல்லையோ, ஆனால் கழிவுப்பொருட்களின் குவியல்களையும், வீசியெறியப்பட்டிருக்கும் குப்பைகளையும் மட்டும் நிச்சயம் காண முடியும். அதிலும் தெருவோரம் இருக்கும் வெறும் காணிகள் விசேடமானவை. குப்பைகளை கொட்டுவதற்கு என்றே ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அது ஒன்று தான்.

பயன்பாடுகள் முடிந்து தூக்கி வீசப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட அல்லது கழிக்கப்பட்ட எந்த பொருட்களும் கழிவுகள் தான். இயற்கையில் எந்தவொரு பொருளும் கழிவல்ல. இயற்கை உயிரினச் சுழற்சியில் எந்தப் பொருளுமே கழிவல்ல. ஆனால் இன்று மனிதர்கள் நாம் உருவாக்கும் எண்ணற்ற பொருட்களால், குப்பைகளும் கழிவுகளும் உருவாகின்றன. அடுத்தவன் வீட்டுச் சொத்தை அபகரிப்பதிலும், தனது குப்பைகளை அடுத்தவன் வீட்டில் கொட்டுவதிலும் எம்மை விடச் சிறந்தவர்கள் வேறு எவரும் இல்லை.

யாழ் நகரை அலங்கரிப்பது வர்ணக் கொடிகளோ, விளக்குகளோ, பூமரங்களோ இல்லை. அனைத்து வர்ணங்களிலும் காற்றில் பறந்து திரியும் பொலித்தீன் பைகளே. கடைகளில் ஒரு பொருள் வாங்கினால் கூட, அதற்கும் பொலித்தீன் பையைக் கேட்டு வாங்கத் தெரிந்த எம்மவர்க்கு, பொலித்தீன் பாவனை ஆபத்தானது என்று தெரியவில்லை. அதோடு அந்த பொலித்தீன் கழிவை உகந்த முறையில் அகற்றவும் தெரியவில்லை. எனது வீட்டினுள்ளும் வளவுக்குள்ளும் குப்பைகள் தங்காமல் இருந்தால் சரி என்ற மனநிலையில் தான் தங்களது குப்பை களையும் கழிவுகளையும் தெருக்களிலும் அடுத்தவர் நிலங்களிலும் கொட்டுகின்றனர்.

வீதியில் பயணிக்கும் போது இரு கரையிலும் அவதானியுங்கள். ஒரு தடவையேனும் குறைந்தது நூறு மீட்டர் தூரத்துக்கு ஒரு தடவையேனும் குப்பைகளைக் காணலாம். குவிக்கப்பட்டிருக்கலாம் இல்லை வீசியெறியப்பட்டிருக்கலாம். ஆனால் நிச்சயம் குப்பைகள், கழிவுகள் இருக்கும். வெற்றுக்காணிகளின் மதிலோரம், ஒழுங்கைத் திருப்பங்கள், இவை எதுவுமே இல்லையென்றால் மின்கம்பங்களை சுற்றி நிச்சயம் அவதானிக்க முடியும். கொஞ்சம் கூட கூச்சமிருக்காது, வெட்கப்படமாட்டார்கள், யோசிக்கமாட்டார்கள், பயப்படமாட்டார்கள், துளியளவும் குற்றவுணர்ச்சிகூட இருக்காது. மிகவும் சர்வ சாதாரணமாக வந்து வீதிகளில் குப்பைகளைக் கொட்டிவிட்டும், எறிந்துவிட்டும் செல்வார்கள்.

தெருக்களில் குப்பைகளை வீசியெறிபவர்கள் எல்லாரும் படிப்பறிவில்லாத பாமரர்களல்லர். படித்தவர்களும் பெரும் உயர் பதவிகளிலும் உள்ளவர்களே இந்த தவறை விடுகின்றனர். எல்லாவற்றுக்கும் காரணம் அசண்டையீனமும் சுயநலமுமே. நாம் மட்டும் நன்றாக இருந்தால் போதும் என்று நினைக்கும் அற்ப மனமே. அவர்கள் செய்யும் சிறு அசண்டையீன தவறுகளும் அவர்களையே ஏதோவொரு வழியில் திரும்பி சென்றடையும் பாதிக்கும் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.



## பொலித்தீன், பிளாஸ்டிக்

மண், நீர், காற்று என்று நம் சூழலின் எந்தவொரு அங்கத்தையும் நொடியில் மாசாக்காவிடினும், அதனுடன் சேர்ந்த அங்கமாக மாறிக் கொஞ்சம் கொஞ்சமாக மாசாக்கி, நச்சாக்கி, நாசமாக்கக் கூடியவையே இந்த பொலித்தீனும் பிளாஸ்டிக்கும். இவற்றில் நச்சுத்தன்மையை வெளிவிடக் கூடிய வைனைல் குளோரைடு, டைஒக் சின்ஸ், பென்சீன், போர்மல்டிகைட், பொலிகார்பனேற்று போன்ற சேர்க்கைகள் பலவுண்டு. இந்த சேர்க்கைகள் உக்கலடையாதவை. எத்தனை வருடங்களானாலும், மண்ணுடன் சேர்ந்தே இருந்து, மண்ணின் வளத்தைச் சிறிது சிறிதாக அழிக்கக்கூடியவை. உலகில் தயாரிக்கப்படும் பொலித்தீன் பிளாஸ்டிக்கில் ஏறத்தாழ பத்து வீதமே மீள் சுழற்சிக்கு உட்படுகின்றன. எஞ்சியவை எல்லாம் மண்ணோடு தான் சேருகின்றன.

நீரில் கலக்கும் பொலித்தீனும், பிளாஸ்டிக்கும், நீர்வாழ் உயிரினங்களுக்கும், மண்ணில் வீசியெறியப்படுபவை கால்நடை விலங்குகளுக்கும் எமனாக மாறுகின்றன. எரியூட்டினால் நச்சு வாயுக்கள் வெளியிடப்படும். மனிதன் தனது சுயநலத்தாலும் அசண்டையீனத்தாலும் சூழலிலுள்ள ஏனைய உயிர்களை ஏதோவொரு வகையில் அன்றாடம் பலியாக்குகின்றான். அது காலப்போக்கில் அவனது உயிரையே விலையாகக் கொள்ளும் என்பதை உணர மறுக்கின்றான்.

முற்றாக பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையை தடுக்கவும் முடியாது. ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகளைக் குறைக்க முடியும். பொலித்தீன் பிளாஸ்டிக்கு நச்சுத் தன்மை குறைந்த மாற்று பொருட்களான பொலித்திலீன், மெற்றலொகின் போலியோலிபைன், பொலியெஸ்டர் போன்ற சேர்க்கைகளை பாவிக்கலாம். அதைவிட சிறந்த வழி சுழற்சி முறைப் பாவனையே, அதற்கு தகுந்த முறையில் பாவித்த கழிவுப்பொருட்கள் அகற்றப்பட வேண்டும். இப்படி வீதியில் வீசியெறியும் ஈனப்பிறவிகள் இருக்குமிடத்தில் அதற்கு ஒருபோதும் வழியில்லை.

## இலத்திரனியல் கழிவுகள்

இன்னொரு ஆபத்தான கழிவுப் பொருள் இலத்திரனியல் கழிவுகள். தேவையற்ற அல்லது தமது பாவனைக் காலம் முடிந்த இலத்திரனியல் சாதனங்களே இலத்திரனியல் கழிவுகளாகப் பார்க்கப்படுகின்றன. புதிது புதிதாய் இலத்திரனியல் சாதனங்கள் அறிமுகப்படுத்தும் போது முந்திக்கொண்டு வாங்கத் தெரிந்த எமக்கு, வீட்டிலுள்ள பாவித்த இலத்திரனியல் பொருட்களை தகுந்த முறை யில் அகற்றத் தெரியவில்லை. இலத்திரனியல் தொழில்நுட்பத்தை மட்டும் ஆர்வத்துடன் அறிந்துகொள்ளும் நாம் சூழலுக்கும் எமக்கும் பாதிப்பில்லாத வகையில் இலத்திரனியல் கழிவுகளை அகற்றுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. போகின்ற போக்கில் தெருக்களில் எறிந்துவிட்டு செல்கின்றோம்.

ஆண்டுக்கு சராசரியாக இருபது வீதமான இலத்திரனியல் பொருட்கள் மீள் சுழற்சிக்கு உட்பட எஞ்சிய அறுபது மெட்ரிக் தொன் எடையுள்ள இலத்திரனியல் கழிவுகள் மண்ணுடன் சேர்க்கப்படுகின்றன. நாம் வீசியெறியும் ஒவ்வொரு இலத்திரனியல் சாதனத்திலும் நச்சுத் தன்மையுள்ள பெரிலியம், கட்மியம், ஈயம், பாதரசம், ஆர்சனிக், செலினியம், குரோமியம் இப்படி எதாவது ஒன்றோ அல்ல பலதுகளோ மூலப்பொருட்களாக இருக்கின்றன. மீள்சுழற்சிமுறை பொருத்தமான தீர்வாக இருந்தாலும் இலத்திரனியல் கழிவுகள் பற்றிய தகுந்த அறிவை பெறுவதன் மூலமே இதனை சரி செய்ய முடியும்.

## மக்களின் பிற்போ[illegible] அணுகுமுறை

எந்தவொரு பிரச்சினைக்கும் மூல காரணமாக மனிதனே திகழ்கின்றான். அதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று அவனது அணுகுமுறை. அணுகுமுறையில் மாற்றத்தை கொண்டுவருவதன் மூலம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். ஆனால் அந்த அணுகுமுறை மாற்றத்தை எம்மவர்கள் ஏற்படுத்த முயற்சிப்பதுமில்லை; விரும்புவதுமில்லை. “எனக்கேன் தேவையில்லாத வேலை, மற்றவனைப் போலவே நாமும் இருந்து விடுவோம்” என்று பலரும் நினைப்பதாலேயே எமது நாட்டில் எதற்கும் தீர்வு கிடைப்பதில்லை. நான் மட்டும் செய்தால் சரியாகிவிடுமா? என்று கேள்வி கேட்டுவிட்டு தொடர்ந்தும் தவறாக நடப்பதே எங்களின் வழக்கம். நான் ஒருவனாவது சரியாக நடப்போமே, என்று நினைத்து செயற்பட வேண்டும். நம்மை பார்த்தாவது மற்றவர்கள் திருந்துவார்கள்.

பக்கத்து வீட்டுக்காரன் குப்பையை தெருவில் கொட்டினால் தானும் அதற்கு மேலே கொட்டிவிட்டு செல்வானே தவிர அப்படி செய்ய வேண்டாம் என்று அவனிடம் சொல்லப்போவதுமில்லை; தானாவது செய்யாமலிருக்கப்போவதுமில்லை. இதுவே எம்மவரின் அணுகுமுறை. உணவு வண்டிகளில் சாப்பிட்டால் பிளாஸ்டிக் தட்டுக்களை அங்கேயே எறிவது, வாகனங்களில் பயணிக்கும் போது குளிர்பானங்களை அருந்திவிட்டு வீதியில் எறிந்துவிட்டுச்செல்வது, புதிதாக வாங்கும் பொருட்களின் பொதியுறைகளை ஆங்காங்கே வீசுவது, முக்கியமாக நடைபாதை, தெருவோர வியாபாரிகள் அன்றைய நாள் கழிவுகளை அந்தந்த இடங்களிலேயே எறிந்துவிட்டு செல்வது. இவைகளே எம்மவர்கள் மாற்ற முயற்சிக்காத அணுகுமுறைகள்.

## கழிவுப்பொருள் மேலாண்மை


கழிவுப்பொருள் மேலாண்மை என்பது கழிவுப்பொருட்களை சேகரித்தல், கொண்டு செல்லுதல், பாதிப்பில்லாத உருவுக்கு மாற்றல், மீள் சுழற்சிக்குள்ளாக்குதல் அல்லது நீக்குதல், மற்றும் கழிவுப் பொருட்களை கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதோடு கழிவுப் பொருட்களால் மனிதனின் உடல் நலம், சுற்றுச்சூழல் அல்லது அழகியல் தன்மை ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பை முடிந்த அளவு தடுக்கவோ குறைக்கவோ மேற்கொள்ளப்படுகிறது.

(22 ஆம் பக்கம் பார்க்க...)













எல்லாக் காலங்களிலும் "சிந்தியுங்கள் மனிதர்களே!" என்று சொன்னவர்களை, இந்த உலகம் கொன்றது. கொல்லும், ஆனாலும் சிந்திக்க வேண்டியது முக்கியம்.

கண்ணை மூடிக் கொண்டு வாருங்கள், எங்கள் கையில் விளக்கு உள்ளது. உங்களை வழி நடத்துகிறோம் என்று சொல்பவர்களையிட்டு அச்சமாயிருங்கள்.

உங்கள் கண்களைத் திறவுங்கள், உங்கள் கைப்பிடியளவு வெளிச்சத்தை தன்னும் பாதையில் ஒளிரவிட்டு நடவுங்கள். உங்களை அழைத்துச் செல்பவர்கள் யார்? அவர்களுக்கும், பாதைக்கும் என்ன தொடர்பு?

தேர்தல் அரசியலில் தோற்றவர்கள், பேரணி போவது பாஷனாகி விட்ட காலத்தில் வெகு கவனமாக நடத்த பட இருக்கின்ற அரசியல் பலம் குன்றிய அமைப்புக்கள், தனிமனிதர்களின் வெளிப்பாடாக இருக்கப் போகின்ற "எழுக தமிழ்", வழக்கம் போல மேலோட்டமான எழுச்சி பிம்பம் தான்.

கொலைகாரர்களும், தமிழ் ஆதிக்க முதலாளிகளின் பரம்பரைகளில் வந்த நபர்களும், அரசியல் ரீதியில் தனித்து விடப்படும் ஆபத்தைக் கொண்ட நபர்களும் இணைந்து, தமது எதிர்கால வாழ்விற்காக எந்த எழுச்சியையும் செய்வார்கள், ஆனால் பேரணிக்கு போய் கொடி பிடித்து விட்டு, வாக்களித்து விட்டு சும்மா நாங்கள் எங்கட பாட்டுக்கு இருப்பம் எல்லாம் இந்த அமைப்பாளர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் என்று இருக்கும் மக்களை என்ன செய்வது. இது தானே பொங்கு தமிழுக்கும் நடந்தது.

இரண்டு எதிரெதிர் தேசியவாதங்களையும் பலப்படுத்தி, சொகுசாக இன்னும் சில பத்து ஆண்டுகள் இந்த இனவாத, மதவாத, மொழிவாத வாத வாதங்கள் வாழ்ந்து, குறித்த நபர்களின் வாழ்வில் என்றும் மங்காமல் ஒளி பெருக்கும்.

நாட்டின் இனவாதக் குரங்குகளின் வாலில் மூட்டப் போகின்ற தீ, இந்த தடவை யாரை எரிக்குமோ?

Kiri Shanth






## மாத்தி யோசி

கண் தெரியாத சிறுவன் ஒருவன், ஒரு கோவில் அருகில் பிச்சை எடுத்து கொண்டிருந்தான். அவன் எதிரில், "எனக்கு இரண்டு கண்களும் தெரியாது. தயவு செய்து தருமம் பண்ணுங்கள்" என்று எழுதி இருந்தது.

அந்த வழியில் போவோர் வருவோர் எல்லாம் அதை பார்த்துக் கொண்டே சென்றார்கள், யாரும் தருமம் பண்ணுவது மாதிரித் தெரியவில்லை.

ஒரு நபர், தன்னுடைய "பர்சில்" இருந்து பணத்தை எடுத்து அவன் தட்டில் போட்டார்.பிறகு அங்கு வைத்து இருந்த போர்டின் பின் பகுதியில் ஒரு வாசகத்தை எழுதி எல்லாரும் பார்க்கும்படி வைத்து விட்டுச் சென்றுவிட்டார்.

சிறிது நேரத்தில், அதை படிக்கும் அனைவரும் அவன் தட்டில் சில்லறையைப்போட ஆரம்பித்தனர். மாலை ஆனதும் அந்த போர்ட் எழுதி வைத்தவர் வந்து பார்த்தார். அந்த சிறுவன் "ஐயா! அந்த போர்டில் என்ன எழுதி வைத்தீர்கள்" என்று கேட்டான். அவர் சொன்னார் "நீ என்ன எழுதி வைத்தாயோ, அதையே தான் நான் வேறு விதத்தில் எழுதி வைத்தேன்" என்றார்.

"இன்றைய பொழுது நன்றாக விடிந்துள்ளது ஆனால் என்னால் தான் அந்த அற்புதத்தைப் பார்க்க முடியவில்லை" என்று அந்த போர்டில் எழுதப்பட்டிருந்தது.

"இந்த வாசகத்தைப் படித்த அனைவரும், உனக்கு கண் தெரியாது என்பதைவிட நல்ல வேளை நமக்கு கண் இருக்கிறது, நம்மால் எல்லாவற்றையும் கண்டு ரசிக்க முடிகின்றது என்று உனக்கு தருமம் செய்து விட்டுச் செல்கிறார்கள்" என்று சொன்னார்.

## சுவரில் கொய்தவை

**Dillibaveena Anrasa**

சும்மா இருக்கும் மனம் சைத்தானின் உலைக்களம்.

**Sinthu Ri**

சரி உனது வெற்றிடத்தைத் தா
என்னையும் கொஞ்சம் நிரப்பிக்கொள்கிறேன்

**Rajathi Salma**

பெண் என்பவள் எங்கேயும் "பெண்ணாகத்தான் "
பார்க்கப்படுகிறாள் அமெரிக்காவாக இருந்தாலும் ...

**Briyanthy Arumaithurai**

அனைத்துமே சர்வ சாதாரணம். நாமே அனைத்தையும்
மிகைப்படுத்தி கற்பிதம் செய்கிறோம்.
இறுதியில்.....

**Raj Siva**


"அப்பா என்னும் அற்புத மனிதன் புரிந்து
கொள்ளப்படுவதற்கு முன்னரே மண்ணில் புதைந்து
போகிறான்"

**Ayshaa Kumaragurumoorthy**


உன் பேரு என்னம்மா?
சௌமியா
உங்க வீட்டுல உன்னை எப்பிடி கூப்பிடுவாங்க?
தூரமா இருந்தா சத்தமா கூப்பிடுவாங்க.. பக்கத்துல
இருந்தா மெதுவா கூப்பிடுவாங்க

**Ruban Phillip**

தமிழர்கள் : சிங்களவர்களை நமது பிரதேசத்தில்
குடியமர்த்த விடமாட்டோம்.
சிங்களவர் : தமிழனை தமிழ்நாட்டுக்கே அனுப்பி
வைப்போம்.
வேடர்கள் : நீ மட்டும் எங்கருந்து வந்த? அவைங்ககூட
நீயும் போயிடு. நாங்க நிம்மதியா வாழ்ந்துக்குறோம்.




## இந்தவார மீம்ஸ் (Meme)





**இணையவாசிகளுக்கு**

உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial

# இனிப்புக் கதைகள்

○ தருமராசா அஜந்தகுமார்



அ)

1989 எங்கன்ரை வீட்டுக்கு முன்னால தான் அந்தக் கடை இருந்தது. காலைமை எழும்பின உடன, அந்தக் கடைக்குப் போய் ரொபி வாங்கிறதுதான் என்ர முதல் வேலை. திடீரென நாயெல்லாம் பயங்கரமாக் குரைக்கத் தொடங்கியது. என்னெண்டே விளங்கேல்ல. கேற்றைத் திறந்து எட்டிப்பார்த்தேன், பயந்து போனன். பெரிய பெரிய சப்பாத்து களோட, தலைப்பாவோட, குடுமியோட, பெரிய இரும்புத் தொப்பியோட, ஆமிக்காரர். அவங்கள் நேரே போய்க் கொண்டிருந்தாங்கள். கடை திறந்திருந் தது. கடை வேலவனைக் காணல்ல. அவங்கள் தாண்டிப்போனதும் கடைக்கு ஓடிப்போனன். அவற்ற முகம் பயத்தில வேர்த்திருந்தது. நான் ஐஞ்சு ரூபாவை நீட்டி "ரொபி தாங்கோ" எண்டன். "உன்க்கு இப்ப ரொபியோ? போய்க் கொப்பரிட்ட வேண்டு" எண்டு பேசிப் போட்டார். எனக்குக் ஒரு மாதிரியாப் போச்சு. சாக்குக்க கிடந்த ஒரு சக்கரைக் கட்டியை எடுத்துக் கொண்டு வீட்ட ஓடிவந்திட்டன். அம்மா சரியான பேச்சு. திடீரெண்டு எங்கேயோ வெடிச்சத்தம் கேட்டிச்சு, ஆக்கள் றோட்டால குழறிக் கொண்டு ஓடுறது கேட்டிச்சு. நான் அம்மாக்குப் பின்னால நிண்டன் அப்பா தலையைத் தடவிக்கொடுத்தார். எனக்குப் பயத்தில அழுகை அழுகையா வந்தது. கனநேரத்திற்குப் பிறகு எல்லாம் அமைதி யாச்சு. தலையைச் சொறிவம் எண்டேக் கைதான் கையைப் பார்த்தேன். உள் ளங்கை எல்லாம் சர்க்கரை கரைஞ்சு போய், பார்க்க அருவருப்பாக இருந்தது. ஓடிப் போய்க் கையைக் கழுவிப் போட்டுத் தலையைச் சொறிஞ்சு கொண்டு நிண்டன். அப்பா, கிட்டக் கூப்பிட்டுத் தலையைத் தடவிவிட்டார். அவற்றை கையை நான் இறுக்கிப் பிடிச்சன். சர்க்கரை கரைஞ்ச மாதிரி என்ரை கண்ணில இருந்து தன்ரை பாட்டில கண்ணீர் வந்தது.

ஆ)

1994, பள்ளிக்கூடம் முடிஞ்சதும் அந்தக் கடைக்குப் போய்ப் பத்து ரூபாக்கு ரொபி வாங்கினன். பத்து "மைலேடி" ரொபி. வீட்ட நோக்கி நடக்கத் துவங்கி னன். ரொபி தின்னேக்கை எனக்கு தனிய நடக்கோணும் போல இருக்கும். ஆக்கள் நிக்கேக்கை எண்டா அவங்களுக்குத் தெரியாமல் பொக்கற்றுக்க கையை விட்டு அதுக்கை வைச்சுச் சத்தம் போடாம உரிச்சு வெற்றிகரமா அதைப் பொக்கற் றுக்கு வெளியால எடுத்து, தலையைச் சொறிஞ்சு பிறகு, வாயடியில சொறியிற மாதிரிச் சொறிஞ்சு, டக்கெண்டு கொட் டாவி விடுற மாதிரி வாயைத்திறந்து ரொபியை உள்ளுக்கை தள்ளி பேந்து அதை உமியேக்க ஆரும் கண்டா, ஒண்டு தான் இருந்தது எண்டு சொல்லி அமசடக் கமாச் சிரிக்கோணும். தனிய எண்டா உரிச்சு உரிச்சு தின்டு கொண்டே இருக்க லாம். ரொபித்தாளை வடிவா விரிச்சிட்டு அதை ஊதிவிட அது பறக்கிறதப் பார்த்துக் கொண்டே அடுத்த ரொபியை உரிக்கத் தொடங்கலாம். ஒன்பது ரொபியும் வீட்ட போறதுக்கிடையில் திண்டிட்டன். கடைசி ரொபியைப் பக்குவமா எடுத்தன். ஆறுதலா உரிச்சு வாயுக்கை போட்டு உமிழத் தொடங்கி னன். இவ்வளவு நேரமும் அவசரப்பட்டு கடிச்சுத் திண்ட எனக்கு இது அமிர்தம் போன்ற சுவை யைக் காட்டத் தொடங்கி யது. உமிழ உமிழ முடிகிறதே எண்டு கவலையும் வந்தது. அடிவரையான சுவை யும் முழுதா கப் புலப்படத் தொடங்கி யது. இனிமை, இனிமை, இனிமை.

இ).

1996, என்ரை இடக்கையை அவர் இறுக்கிப் பிடித்திருந்தார். எனக்குக் காற் சட்டை நனைஞ்சிடும் மாதிரிக் கிடந்தது. அவருடைய முகம் எனக்கு விகாரமாகத் தெரிந்சிது. அவர் பற்களை நெறுமிக் கொண்டார். அவருடைய வலக்கையில் ஒரு தடித்த குட்டிப் பிரம்பு இருந்தது. "உனக்கு களவெடுத்து இனிப்புத் தின்னக் கேக்குதோ?" எண்டு அடிக்கத் தொடங்கி னார். உள்ளங்கையில் இடிவிழுவதைப் போல இருந்தது. கண் கரையிற மாதிரிக் கிடக்கு. திடீரெண்டு பார்த்தன் ஜன்ன லுக்குள்ளால, பொன்னம்மா அக்கா எட்டிப் பார்த்துக் கொண்டு நிக்கிறது தெரிஞ்சது. எனக்கு பெரிய மானக்கேடு ஆகிற மாதிரிக் கிடக்கு. இப்ப கையை விட்டார். அவர் என்ரை மாமா. நான் நல்லாப் படிக்கோணும் எண்டுட்டு அவற்ற வீட்டை கொண்டு வந்து விட்ட வர். எனக்கு இங்க வந்தோண்ண, ரொபி சாப்பிட வழி இல்லாமல் போச்சு. அண்டைக்கு சாமியறைக்க கும்பிடேக்கை தான் பார்த்தன். ஒரு அம்பது ரூபா கனகா லமா அங்க கிடக்கு. அதைச் சுருட்டி எடுத்து விளையாட்டுக் காட்டிப் போட் டன். இந்தாள் பிடிச்சுப் போட்டுது. அன்ரி கொண்டந்து தேத்தண்ணி தந்தா, நல்லா சுட்டுது, குடிச்சன். இனிப்புக் காணாமல் இருந்தது. நான் ஒண்டும் சொல்லாமல் குடிக்கத் தொடங்கினன்.


ஈ)

இனிப்பு என்பது நாவில் மட்டுமல்ல உள்ளத்திலும் இனிப்பது. சில விடயங் கள் வெளியில் இனிக்கின்றன. சில விடயங்கள் உள்ளில் இனிக்கின்றன. நினைவுகள்,இலக்கியம் கூட இனிக்கவே செய்கின்றது. சில கனவுகளும் இனிக் கின்றன. எமது செயல்களும் இனிக்க வைக்கின்றன. உண்டு வரும் மகிழ்ச்சி யை விட, உள்ளத்தே நினைத்துவரும் மகிழ்ச்சி மேலானது. இதனை வள்ளுவர் காமத்துப் பாலில், "உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால், கள்ளினும் காமம் இனிது." (உள்ளுதல் - நினைத்தல்) என்கின்றார். இதனையே இன்று, நினைத்தாலே இனிக்கும் என்கிறோம். நாமே நமக்கு இனியராய் இருப்பதும், நம்மிலும் இனியன் என்று இறைவனை அடையாளம் கொள்வதும், ஆத்மிகத்தின் அலைவரிசையாகிறது. இதனை அப்பர் சுவாமிகள்,

"என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே." என்று பாடியுள்ளார்.

மொழி, கலாசாரம், வாழ்வு எல்லாமே நமது விருப்புகளால் இனிமையாகின்றன. "யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழி" போல் இனிதாவது எங்கும் காணோம் என்கிறான் பாரதி. பாரதிதாசனுக்கு எல்லா இனிமையை விடவும் தமிழே இனித்தது. வாழ்வே இனிமைதான். அதிலும் இன்பம் மட்டுமல்ல துன்பமும் ஒரு அனுபவ இனிமைதான். இனிமை நாவிலும் வாழ்விலும் கணந்தொறும் கணந்தொறும் கலந்து அனுபவிக்க வேண்டியது, கடலின் அலை போல காதலுடன் ஓடி வந்தபடியே இருக்கிறது. கால்களில் பரவும் ஈரம் தலையில் ஏறி வானத்தை எம் கையில் வீழ்த்திச் சிரிக்கிறது.

# தொலைந்து போகும் பெண்கள்



மாயாவின் டயரி

பயங்கரமான ஒரு புதைகுழிக்குள் விழுந்து கொண்டிருக்கும்போதே, சுற்றி வர விழுங்கவிருக்கும் முதலைகளை திமிங்கிலங்களைக் கண்டு அலறிப் புடைத்து மீண்டும் ஓட்டிற்குள் தலையை உள்ளிழுத்துக் கொள்ளும் ஆமையாய் "நான்" என்னும் சுயம் மீண்டும், மீண்டும் அச்சத்தின் கிணற்றுக்குள்ளேயே சுற்றியலைந்து கொண்டிருக்கின்றது. அதி பயங்கரக் கனவுகள் துரத்தி வருகின்ற போதெல்லாம், பெண் என்னும் விருட்சம், இயலாமையை உடுத்திக் கொண்டு, மாய வலைக்குள் சிக்கித் தவிக்கின்றது.

எதை எழுதுவது? எழுதாமல் போனவையே அதிகம்! எதை எடுத்துரைப்பது பேசாமல் போனவையே அதிகம். சமூக வெளியில் தங்களுடைய நிலையைக் குடும்பத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்கின்ற பெண்களினுடைய மனநிலை பற்றிய விவாதமொன்று எழுந்தது. யோசித்துப் பார்க்கின்றேன். பாடசாலைக் காலங்களில், தமிழ்த்தினப் போட்டிகளில், கவிதை, சிறுகதை, கட்டுரை, பேச்சுப் போட்டி, சொற்சிலம்பம், பட்டி மன்றம் மற்றும் அழகியல், அறிவியல், விளையாட்டுத் தொடர்புடைய அனைத்து போட்டிகளிலும் ஒப்பீட்டளவில் ஆண்களை விட, பெண் மாணவர்களே முனைப்பாக ஈடுபட்டுப் பரிசுகளையும் வெல்கின்றார்கள். சாதாரண தரம், உயர்தரம் முடிந்த பிறகு இவர்களில் பலரும் காணாமல் போகின்றனர்.

இதற்கு பெரும் காரணம், எமது சமூகக் கட்டமைப்பு. ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல், பெண் என்பவள் குடும்பம் என்ற அலகிற்கு மாத்திரமே உரியவள் அவளுடைய செயல்கள், குடும்பநலன் சார்ந்தவையாகவே இருக்க வேண்டும் என்கின்ற ஒரு கருத்தியல் கட்டமைப்பு மேலோங்கி நிற்கின்றது. ஆதலால் பெண் என்பவள், இனப்பெருக்க இயந்திரமாகப் பயன்படுத்தப்படும் சூழ்நிலையில் அவளை சாதனைப் பெண்ணாக மாற்றுவது எங்ஙனம்?

சமுதாய நிலை என்று தட்டிக் கழித்துவிட்டு மட்டும் போய் விட முடியாது. சமுதாய உணர்வற்ற ஒரு சமூகப் பிராணியாக வாழ்ந்து விட்டுப் போவதைப் பெண் தொடர்ந்தும் செய்வாள் ஆயின், அவள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலையிலேயே இருப்பாள். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. பெண்கள் சுதந்திரமாக இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுக்கு பிடித்ததை செய்கின்றார்கள் என்கின்ற ஒரு கருத்து நிலையும் உண்டு. உண்மைதான்! பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெண்களின் வகி பங்கு அதிகம். ஆனால் பெண்கள் கொடுக் கப்படுகின்ற சுதந்திரத்தை, எதற்குப் பயன்படுத்துகின்றார்கள் என்பதுதான் சிந்திக்க வேண்டிய விடயம்.

பரந்துபட்ட நோக்கில், இங்கு இரண்டு வகையான பெண்கள் இருப்பதாகத் தோன்றுகின்றது.

1.சுதந்திரம் இருந்தும் இலட்சியம், சமூகப் பிரக்ஞை கொள்ளாத பெண்கள்.

2.சுதந்திரமற்ற இலட்சியம் ,சமூகப் பிரக்ஞை கொண்ட பெண்கள்.

சமூக விடுதலை என்பது ஆண், பெண் இருபாலரின் முன்னேற்றம், அடைவு மட்டம் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. சமூகம் பற்றிய விழிப்புணர்வு, அக்கறை இல்லாத சுதந்திரம் என்பது ஓட்டைக் குடத்தில் இட்ட நீர் போன்றதே.

அண்மையில் எங்கள் மத்தியில் சாதாரணமான ஓர் குடும்பத்தில் பிறந்த "அனித்தா" என்னும், மகாஜனாக கல்லூரி மாணவி, தேசிய மட்டத்தில் கோலூன்றிப் பாய்தலில் முதலிடம் பெற்றார். இவ்வாறு திறமைகளோடு பதின்மப் பருவங்களில் வலம் வரும் பெண்கள், சிறிது காலத்திலேயே காணாமல் போய்விடும் நிலை எவ்வாறு? எதனால் உருவானது?காணாமல் போகின்றனரா திறனுள்ள பெண்கள்? தேக்கம் அடைகின்றனரா பெண் இலக்கிய கர்த்தாக்கள்? இதை எழுதிக் கொண்டிருக்கும் நான் கூட நாளை சமையலறையிலோ அல்லது படுக்கையறையிலோ தொலைந்து போகலாம். அதற்குள் நாங்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

சமூகம் மீதான தீராத அன்போடு வற்றாத படைப்புக்களை முன்வைப்பதற்கு என் சுடரெரியும் விரல் முனைகள் தயார். இருப்பினும் இந்தக் காற்றிலும் நான் அணைந்து விடக் கூடாது என்கின்ற அச்சம் இன்னும் தீவிரமாகின்றது.

"நான் போராடுவது எனக்கான விடுதலை மூலம் சமூகத்துக்கான விடுதலைக்காகவே!"

(02 ஆம் பக்க தொடர்ச்சி...)

## ஒரு தொழிற்சாலையும்...



சீமெந்து தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பாக அங்கு பணியாற்றிய ஆ.அருளானந்தன் என்பவர் கூறுகையில் தொழிற்சாலை இயங்கி வந்த காலத்தில் தொழில் நிலையில் அனைவரும் திருப்தி கொண்டிருந்ததாகவும் இன்று தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினையும் எமது பிரதேச தலைமைத்துவங்களின் பொறுப்பற்ற தன்மைகளையும் அவர் சாடினார்.

தொழிற்சாலையின் ஆரம்ப காலம் தொட்டு 1990 வரை தொழிற்சாலைச் செயற்பாடுகள் சுமூகமாகவே முன்னெடுக்கப்பட்டு வந்ததாகவும், தொழிற்சாலைக் கழிவகற்றல் மற்றும் தூசு அகற்றுவதற்கான பொறிமுறைகள் நிறுவப்பட்டிருந்ததாகவும், தொழிற்சாலை இயங்கிய காலப்பகுதியில் சுற்றுச் சூழலுக்கு பெருமளவில் பாதிப்புக்கள் இடம் பெற்றிருக்கவில்லை என்றும் அங்கு பணிபுரிந்த சிலரது அனுபவங்களினூடாக அறிந்து கொள்ள முடிந்தது.

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை தொடர்பான சில தகவல்களையும் நிலைப்பாடுகளையும் பற்றித் தெரிந்து கொள்வதற்காக தெல்லிப்பளை பிரதேச செயலாளரிடம் நேரில் சென்று கலந்துரையாடினோம். குறித்த தொழிற்சாலையும் அதனுடைய செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டங்களும் அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டதாகவும், அதனால் தகவல்களை வெளியிடு வதில் அரசியல் ரீதியான அழுத்தங்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதனையும் காரணம் காட்டி அவர் மேலதிக தகவல்களை தர மறுத்துவிட்டார்.

அண்மைக் காலத்தில் மின் உற்பத்தி நிலையம் ஒன்றின் கழிவு அகற்றல் நடவடிக்கையின் செம்மையின்மை காரணமாக சுன்னாகத்தில் குடிநீருடன், ஒயில் கலந்ததாகச் சொல்லப்பட்டது. அதைப்போன்று காங்கேசன் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட்டாலும் அந்தப்பகுதியில் உள்ள நன்னீர் வளம், மண்ணின் வளம் என்பன கேள்விக்குள்ளாவதுடன், மக்களின் ஆரோக்கியமும் பாதிக்கப்படும் அபாயமும் உண்டு. 'அஸ்பெஸ்டஸ்' கூரைத் தகடுகளின் தூசுக்களால் புற்றுநோய் ஏற்படுவதால், இன்னும் இரு வருடங்களுக்கு பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில் அவற்றின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை என்பவற்றுக்கு நல்லாட்சி அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில கூரைத்தகடுகள் பொருத்தப்பட்ட வீடுகளில், குறித்த கூரைத்தகடுகளில் இருந்து வரும் தூசுக்களாலாலேயே புற்றுநோய் ஏற்படுமென்றால், அதை விட பன் மடங்கு தூசுக்களை வெளித்தள்ளும் காங்கேசன் தொழிற்சாலையால் இது போன்ற கொடிய நோய்கள் ஏற்படுவதும் அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

ஆயினும் இவற்றுக்கான மாற்று வழிகளையும், மேற்குறித்த சூழலியல் மற்றும் சுகாதாரம்சார் பிரச்சினைகள் ஏற்படாத வழிகளையும் கண்டு பிடித்து, உரிய வகையில் மீளவும் காங்கேசன் தொழிற்சாலைக்கு உயிர்கொடுக்கலாம்.

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)

## பண்ணைக் கொலைகள்.....

### புலிக்காவல்


1970 களின் நடுப்பகுதியோடு டேவிற் ஐயா, சந்ததியார் போன்றவர்கள் இந்தப் பகுதிகளில் இருந்த மலையக மக்களுக்காக பல வேலைகளைச் செய்தனர். புளொட் இயக்கத்தின் தலைவர் உமா மகேஸ்வரன் நெடுங்கேணிக்கு அடிக்கடி வந்து சென்றார். மெல்ல மெல்லப் புளொட் இந்தப்பகுதியில் செல்வாக்கைப் பெற்றது. ஆனாலும் 1984 க்குப் பிறகு இங்கிருந்த மலையக மக்கள் இடம் பெயர்ந்து முத்தையன்கட்டு, மன்னாகண்டல் என்று போகத் தொடங்கினார்கள். 25 வருசக் குத்தகைக்காலம் முடிந்து விட்டது என்றது அரசாங்கம். டொலர்பாம், கென்பாம், சிலோன் தியேட்டர் எல்லாம் சிங்களக் குடியேற்றங்களாகின. அப்படியே அது பதவியா என்றாகியது. வெலிஓயாவுடன் நெடுங்கேணியை விட ஹெப்பிற்றிக் கொலாவ செல்வாக்குச் செலுத்தியது. பண்ணை முதலாளிகள் கொழும்பிலேயே தங்கி விட்டனர். அல்லது இந்தியாவில் செற்றிலானார்கள். பிறகு சிலர் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் சேர்ந்தனர். சிங்களக் குடியேற்றங்களாகிய சிலோன் தியேட்டர், டொலர் பாம், கென் பாம் போன்றவற்றில் இராணுவ முகாம்கள் வேறு வந்தன. குடியேறிய சனங்களுக்குப் புலிக்காவல் செய்வதற்குத்தான் படைகள் என்று சொல்லப்பட்டது. என்னதான் புலிக்காவலுக்குப் படைகள் இருந்தாலும் அதையெல்லாம் புலிகள் தாக்காமல் விட்டதில்லை. புலித்தாக்குதல் கூடக்கூட சிங்களச் சனங்கள் அங்கிருந்து பின்னகர்ந்தனர். என்றாலும் பதவியாவைப் பலப்படுத்தியது அரசாங்கம். அப்படியே வெலிஓயா தனியான பிரதேச செயலர் பிரிவையும் உருவாக்கியது.

### படையினரின் வியாபாரம்

யுத்தம் முடிந்த பிறகு, மீள்குடியேற்றம் நடந்ததல்லவா. இருந்தாலும் இந்தப்பகுதிகளில் யாருமே திரும்பவில்லை. ஒதியமலை, பழம்பாசி, பெரிய குளம் போன்ற இடங்களுக்குச் சனங்கள் வந்து விட்டனர். இருந்தாலும் காட்டுப் பூவரசம் குளம், நாவலர் பண்ணை, காஞ்சிரமோட்டை போன்ற இடங்களுக்கு யாரும் வரவில்லை. அங்கே இருந்த சனங்கள் எல்லாம் வவுனியாவிலும் முள்ளியவளையிலுமே இருக்கிறார்கள். இவர்களைக் கொண்டு வந்து மீள்குடியேற்றுவதற்கு யாரும் அக்கறைப்படவில்லை. நெடுங்கேணிப் பிரதேச செயலரின் முயற்சியில் இப்பொழுதுதான் (2016 இல்) இந்தப்பகுதிகளுக்கு மக்கள் கூட்டிவரப்பட்டிருக்கிறார்கள். அங்கே போய்ப்பார்த்தால், அங்கிருந்த வேலிக்கதிகால்களை வெட்டிப் படையினர் விற்பனை செய்கிறார்கள். கிளிசரியாக் கதிகால்களுக்குப் பெரிய கிராக்கி என்பதால் இந்த விற்பனை அமோகமாக நடக்கிறது. ஒரு லொறிலோட் கதிகால்களின் விலை என்ன தெரியுமா? ஐந்து லட்சம். பொலிஸ் மூலமாகப் படையினரைத் தடுத்துக் கைது செய்து விசாரித்தால், மேலிடத்துக்குத் தெரியாமல் உள்ளூர் படையினர் இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள். எச்சரிக்கை செய்து படையினரை விடுவிக்கப்பட்ட பிறகு சனங்களைக் கொண்டு வந்து குடியேற்றும் முயற்சிகள் நடக்கின்றன.

(சயந்தனின் ஆதிரைநாவலைப்படித்துக் கொண்டிருக்கும்போது, இதில் சில காட்சிகள் படமாக உங்களுக்கு விரியக்கூடும்.)

# பெண் போராளியாக வாழ்ந்தேன்...




(11 ஆம் பக்க தொடர்ச்சி...)

தனியே ஒரு சுந்தரி மாத்திரமல்ல, இப்படி நிறையப் பெண்கள் போரால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்று அறிந்திருந்தேன். எனவே அவர்கள் அனைவரதும் வலிகளை, உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த வேண்டுமென விரும்பினேன். அதனால் நான் சுந்தரியாகவே மாறிப்போனேன். படப்பிடிப்புத் தளத்தில் மட்டுமல்லாது அதன் பின்னரும் கூட சுந்தரி பாத்திரத்தை என்னையுமறியாமல் நான் சுமந்து கொண்டிருந்தேன்.

படப்பிடிப்பு முடிந்த பின்னர் என்னுடைய தனிப்பட்ட வேலைகளில் ஈடுபடும்போது கூட, ஏதோ இனம் புரியாத வலி ஒன்று மனதில் அடியில் இருந்து கொண்டே இருந்தது. இப்போது கூட சில சந்தர்ப்பங்களில் சுந்தரி என்ற பெண்ணாகவே யோசிக்கிறேன். அந்தளவுக்கு மிக வலிமையாக அந்தப்பாத்திரம் என்னோடு பிணைந்துவிட்டது. மெல்ல மெல்லத் தான் அதன் பாதிப்பில் இருந்து வெளிவர முடியும்.

**கேள்வி: முற்றுபுள்ளியா படத்தின் கதை இலங்கை, இந்திய அரசுகளின் அராஜங்களைக் கேள்விக்குட்படுத்துவதாக இருக்கிறது. டப்பிங் பணியின் போது 6 பேர் கைது செய்யப்பட்டும் இருந்தனர். இத்தகைய அசாதாரண சூழல் படப்பிடிப்பை பாதித்ததா?**

**பதில்:** ஒவ்வொருமுறை படப்பிடிப்பினை நடத்தும் போதும் பயத்துடனும் சவால்களுடனுமே செய்ய வேண்டியிருந்தது.இலங்கையிலும், இந்தியாவிலும் படப்பிடிப்புக்கான அனுமதிகளுக்கும் பல கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் இயக்குநரான ஷெரின் முகம் கொடுத்தார். எனவே எப்போதும் ஒரு பதற்றமான சூழ்நிலையே காணப்பட்டது. ஆனாலும் துணிவோடு தொடர்ந்து படப்பிடிப்பை நிறைவு செய்தோம். இலங்கையின் புவியியலை ஒத்த தன்மை கொண்ட பட்டுக்கோட்டையிலும் இலங்கையிலும் சிலஇடங்களில் படப்பிடிப்பு நடத்த மிகவும் பிரயத்தனப்பட்டு அனுமதி பெற்றே மொத்தப் படப்பிடிப்புக்குழுவும் இயங்கியது. ஒவ்வொரு தடவையும் மிகுந்த விழிப்புடனேயே படப்பிடிப்பு நடத்தப்பட்டது. ஏனைய படப்பிடிப்புகளைப் போன்று இலகுவாக அமையவில்லை. படத்தில் வரும் வைத்தியசாலைக் காட்சியும் பெற்றோரை இழந்த சிறார்கள் தொடர்பிலான காட்சியும் எடுக்கப்பட்டபோது எல்லோரும் உணர்ச்சிவசப்பட்டு அழுதே விட்டோம். அக்காட்சிகள் படம்பிடிக்கும் போது குறித்த இடத்தின் சூழ்நிலையே மாறிப் போயிருந்தது. ஒரு சிலமணி நேரங்கள் நடைபெறும் படப்பிடிப்புக்கே இப்படியிருந்தால், இப்படியான வேதனை மிகுந்த சூழ்நிலையிலேயே தொடர்ச்சியாக போருக்கு நடுவே வாழ்ந்தவர்களின் இப்போதைய நிலையை யோசித்துப் பார்க்கவே முடியாமலிருக்கிறது.

**கேள்வி: பட்ப்பிடிப்புக்கு பின்னால், இதில் நடித்த அனுபவம், உணர்வு எப்படி இருக்கிறது..?**

**பதில் :** உண்மையைச் சொல்லப் போனால் சுந்தரி ப்பாத்திரம் இன்னும் என்னைவிட்டுபோகவில்லை. அண்மையில் நண்பர் ஒருவர் கூறியிருந்தார் இலங்கையின் வடபகுதியில் பல்லாயிரக் கணக்கான விதவைகள் இருப்பதாக. அதைவிட கணவனைத் தேடியலையும் சுந்தரியைப் போன்று இன்னும் எத்தனையோ பெண்கள் இருக்கின்றார்கள் எனவும் கேள்விப்பட்டதும், சுந்தரிபாத்திரத்துக்கு இன்னும் உயிரூட்டி இருக்கலாம் எனத் தோன்றியது. அவர்களுக்கு ஒரு விடிவு வரும் வரைக்கும் என்னுள்ளே சுந்தரி வாழ்ந்துகொண்டே இருப்பாள். என்னால் இதை ஒரு நடிப்பாக பார்க்க முடியவில்லை. என்னுடைய உள்ளுணர்வின் இன்னொன்றாகவே இது உள்ளது. பல சுந்தரிகளின் விடிவுக்கு இந்தப் படம் காரணமாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

**கேள்வி: பின்னணிக் குரலையும் இலங்கைத் தமிழில் சொந்தமாக நீங்களே கொடுத்துள்ளீர்கள். இது கஷ்டமாயில்லையா?**

**பதில் :** மொத்த படப்பிடிப்பிலும் இலங்கைத் தமிழ்பேசுவதே மிகவும் பயமாக இருந்தது. ஆனால் அப்படி இலங்கைத் தமிழ் பேசும் போதுதான், சுந்தரியாக நடிப்பது மிகவும் யாதார்த்தமாக அமைந்தது. தமிழ் நாட்டில் பேசும் தமிழுக்கும் இலங்கைத் தமிழுக்கும் மிகவும் வித்தியாசமுள்ளது. ஆங்கிலம் போன்ற வேறுமொழியாக இருந்தால் கூட இலகுவாக இருந்திருக்கும். ஆனால் தமிழையே வேறொரு மொழி நடையில் பேசிப் பழகியதில் அதுவே மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தது. டப்பிங்கின் போது மிகவும் கஷ்டப்பட்டேன். என்னால் முடிந்த அளவுபேச முயற்சி செய்துள்ளேன். எதாவது தவறுகள் இருந்தால் மன்னிக்கவும். ஆனால் இதைவிடவும் சிறப்பாக பேசியிருக்க முடியும் என்று இப்போது தோன்றுகிறது.

**கேள்வி: முற்றுப்புள்ளியா படத்தின் மூலம் எமது இனம் எதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென எண்ணுகிறீர்கள்?**

**பதில் :** இரண்டு மணிநேரப் பொழுது போக்கிற்காக 'முற்றுப்புள்ளியா?' படத்தைப் பார்க்காமல் அடுத்த தலைமுறைக்கான ஒரு வாழ்க்கைப் பதிவாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு படம் பண்ணுவது இலகுவான விடயம் இல்லை. நிறையப் பேர் தங்களுடைய முயற்சிகளை முதலீடு செய்கின்றனர். பொழுது போக்கிற்காக இல்லாமல் உள்ளுணர்வுகளை தீண்டும் வகையில் படங்கள் அமைய வேண்டும். யுத்தத்தில் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் ஆரம்ப காலங்களில் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தாலும் காலப் போக்கில் அவர்களை யாரும் கண்டு கொள்ளாமையினால் தங்களுடைய உணர்ச்சிகளை தங்களுக்குள்ளேயே அழுத்திக் கொண்டுள்ளார்கள். இந்தப் படம் அவற்றை வெளிக்கொணரும் என நம்புகின்றேன். இந்தப் படம் மட்டுமில்லை வேறு படங்களும் மக்கள் மனதைதொட்டுச் செல்லும் கருவியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

# கண்ணை மயக்கும் காப்ரேட் நிறுவனங்கள்

## ஒரு விபரீதக் கண்டறிவு

வேலைக்குப் போகும் வழியில், கோவில் வாசல் படியின் தரிசனத்தை பெறுவது எனது வழமை. அன்றும் அப்படித்தான் சென்ற போது, கோயில் வாசலில் ஒரு கொம்பனிக்குச் சொந்தமான வாகனங்கள் சில நிறுத்தப்பட்டிருந்தன. அவர்களும் என்னைப்போல சுவாமி தரிசனத்திற்காக வந்ததாக எனது எண்ணம். ஆனால் அவர்கள் நோக்கம் அப்படியிருக்கவில்லை என்பதை அவர்கள் கலந்துரையாடலிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட விற்பனை றூட் ராா்கெட்டை ( Route Target) எப்படி எட்டுவது, சேர்ந்து பெறுவது அல்லது சமாளிப்பது என்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

"றூட்" மற்றும் "ராா்கெட்" என்ற பதங்கள் விற்பனைப் பிரதிநிதிகளுக்கும், அவர்கள் சார்ந்தவர்களுக்குமே அறிந்த விடயம். "றூட்" என்பது அவர்களது தயாரிப்புகளை விற்பனை செய்ய வரையறுக்கப்பட்ட பகுதி. யாழ் குடா நாட்டிலுள்ள ஒரு பெருந்தெருவும் அது சார்ந்த பகுதிகளையும் ஒரு றூட் என்பர்.

"ராா்கெட்" என்பது அவர்கள் ஒரு மாதகாலத்தில் செய்து முடிக்க வேண்டிய விற்பனையின் முழுத்தொகை. அன்று அங்குள்ளவர்கள் பேசியதிலிருந்து அந்த கம்பனி விற்பனை பிரதிநிதியின் அவரது றூட்டிற்கான ராா்கெட் 15 - 17 ல்ட்சம் என்பது தெரியவந்தது ஒரு றூட்டுக்கான ராா்கெட் மாத்திரமே இந்தத் தொகை. மற்றைய றூட்டுக்களுக்குரிய விற்பனை ராா்கெட் அந்ததந்தப் பகுதி மக்கள் தொகைக் கேற்றவாறு மாறுபடும், அந்த ராா்கெட்டை அந்தந்த மாதங்களுக்குள் அடைய முடியாது போனால் அவர்கள் சார்ந்த கொம்பனியில், மாத முடிவில் நடைபெறும் மாதாந்தக் கூட்டத்தில் அதற்குரிய சரியான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும். தவறினால் விற்பனை முகாமையாளரிடமோ அல்லது அது சார்ந்தவரிடமோ "செம டோஸ்" வாங்கிக் கட்டுவதோடு அவர்களுக்குரிய கொமிஷனும் கிடைக்காது போய்விடும். காலப்போக்கில் தொழி லையும் அவர்கள் இழக்க வேண்டிய சூழ்நிலையும் இருக்கின்றது.




இங்கே, எங்கள் பிரச்சனை அவர்கள் றூட்டும் அல்ல; அவர்கள் செய்யும் ராா்கெட்டும் அல்ல, மாறாக எமது கவலைகள் எல்லாம், அவர்களால் விற்கப்படும் உணவுப் பண்டங்கள் பற்றியதாக இருக்கின்றது. அவை தயாரிக்கப்படும் போது அவற்றில் இரசனையையும், அளவையையும் கூட்டவும் மற்றும் வடிவங்களை மாற்றவும் அவற்றின் தயாரிப்பில் கலக்கப்படுகின்ற செயற்கை ரசாயனமும்,வேதிப் பொருட்களுமே எமது கவலைக்கான காரணங்கள். இயற்கையல்லாத, சுகாதாரத்திற்கு உதவாத வேதிப் பொருட்களையும், செயற்கை இரசாயனத்தையும் தின்று தீர்ப்பவர்கள் எமது குழந்தைகளே.

ஏறத்தாழ 20-25 வரையிலான உள்ளூர் தயாரிப்புகளை முன்னெடுக்கும் பாரிய கொம்பனிகளும் மற்றும் காப்ரேட் கொம்பனிகளும் போட்டி போட்டுக் கொண்டு, பலமான வலையமைப்பினூடாகத் தமது உற்பத்திகளை விற்பனை செய்து வருகின்றன. யாழ். குடாநாட்டில், அண்ணளவாக 200 - 250 பொருட்கள் இந்தக் கொம்பனிகளால் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு கொம்பனி தனது பொருட்களை, ஒரு றூட்டில், ஒரு மாதத்தில் பல லட்சக் கணக்கில் விற்பனை செய்யுமானால், அவர்கள் சார்ந்த எல்லா றூட்டுகளிலும் அவர்களின் மொத்த விற்பனையானது பல கோடியைத் தாண்டும். இதே போல விற்பனையில் ஈடுபட்டுள்ள சகல கொம்பனிகளதும் மொத்த விற்பனை பல கோடிகளைத் தாண்டும் என்பது எமது கணக்கீடு. இந்த விற்பனையை எட்டுவதற்கு விளம்பரங்களுக்கும் மற்றும் நுகர்வோரைப் பொருட்களை வாங்க ஊக்குவிப்பதற்கும் அவர்கள் செலவிடும் தொகை பல லட்சங்களெனக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய விற்பனைப் பிரதிநிதிகளாக, நம்மிடையேயுள்ள இளவயதினரே அதிகம் குறிவைக்கப்படுகின்றனர். அவர்களைக் கவரும் விதத்தில் அவர்களுக்கு வேதனம் வழங்கப்படுகிறது. விசேட "பக்கேஜ்களுடன்" அவரது மூளைச் சலவைக்கான சந்திப்புகள், அந்தத் துறையிலுள்ள ஆளுமைகள் வரவழைக்கப்பட்டு விசேட 'செமினார்கள்' ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அவர்கள் விரும்பும் கவர்சிகரமான வியாபார இலச்சினை பொறிக்கப்பட்ட ரீ சேட்டுக்கள் வழங்கப்படுகின்றன. மாதாந்தக் கூட்டத் தொடருக்குப் பின்னால் 'பார்ட்டிகள்' நடைபெறுகின்றன. மாயை உலகில் சஞ்சரிக்க விரும்பும் ஒரு இளம் சமுதாயத்திற்கு என்ன விருப்பமோ அத்தனையையும் செய்து கொடுக்கின்றனர். ஆனால் "ராா்கெட்" முக்கியம்.

பார்க்கப்போனால், இந்த விற்பனைப் பொருட்களில் எமக்குத் தேவையான அரிசி, மா, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் அடங்குவதில்லை.மாறாக குழந்தைகள் விரும்பும் நொறுக்குத் தீனிகளும், ஐஸ் கிறீம் வகைகளும், பிஸ்கட் வகைகளும், இறக்குமதி செய்யப்பட்ட இனிப்புவகைகளும், பால் மா வகைகளும், மென் பானங்களும், பழரசங்களும் மற்றும் ஆடம்பர உணவுப் பொருட்களும் அடங்குகின்றன.



அந்நாளில் எமது உடல் ஆரோக்கியத்தைக் கணிசமான அளவிற்குப் பாதிக்கக் கூடிய இவ்வகையிலான உணவுப் பொருட்களை அடிக்கடி உண்பதற்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. ஏனெனில் அவை எமக்கு அருகிலோ அல்லது எளிதிலோ அவை கிடைக்கவில்லை. அப்படியான பொருட்களை வாங்க வேண்டுமாயின் பட்டணங்களை நோக்கி செல்லவேண்டியிருந்தது. அத்துடன் குடும்ப வருவாயோடு ஒப்பிடுகையில் அவை பாரிய செலவினங்களாகவே அப்போது கொள்ளப்பட்டன. அதனால் அப்போது அதனுடைய தாக்கம் அவ்வளவாக இருந்ததில்லை. ஆனால் தற்போது கிராம மட்டங்களில், அதுவும் வீட்டிற்கு அருகில் உள்ள குட்டிக் கடைகளிலும் எளிதாகக் கிடைக்கக் கூடியதாகவும், எம்மிடம் உள்ள பணத்திற்கு அவை வாங்கக் கூடியதாக பொதி செய்யப்பட்டும் கைக்கடக்கமான "பக்கெட்டுகளில்" கிடைக்கின்றன. எனவே எமது அன்றாட வாழ்க்கையில் எமது உணவுக்குச் சம அளவாகவும் அதற்குக் கூடுதலாகவும் இப்படியான உணவுப் பொருட்கள் எமது உணவுப் பட்டியலில் இடம் பிடிக்கின்றன. வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும், சிறுவர்களையும் மகிழ்விக்க இப்படியானவற்றையே அவர்களுக்குப் பரிமாறுகிறோம். சமைத்துப் பரிமாறுவதால் ஏற்படும் சிரமங்களை இது இலகுவாக்குகிறது.



பிஸ்கட் தயாரிப்பில் அவற்றை நீண்ட காலம் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், அவற்றின் மொறு மொறுப்புத்தன்மை போகாமலிருக்கவும், செயற்கை இரசாயனம் கணிசமான அளவு உபயோகிக்கப் படுத்தப்படுகிறது. குளிர்பானத் தயாரிப்பில் உபயோகிக்கப்படும் "கலரிங்"மற்றும் "சிற்றிக் அசிட்" செயற்கையானவை. பதனிடப்பட்ட பால்சார்ந்த பானங்களிலும் அதே கதைதான். மொத்தத்தில் கொம்பெனிகளால் விற்கப்படும் உணவும் அவை சார்ந்த பொருட்களும் செயற்கை இரசாயன ஆளுமைக்குட்பட்டவை. அண்மையில் நண்பரொருவரின் கூற்றுப்படி குறிப்பாக இரவு - பகல் திறந்திருக்கும் அப்பக் கடைகளில் விற்கப்படும் அப்பத் தயாரிப்பில் அப்பச் செட்டையை விறைப்பாக வைப்பதற்கு, பிளாஸ்ரிக் தயாரிப்பில் திண்மத்தைப் பேணுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு இரசாயண மூலப் பொருள் பயன் படுத்தப்படுவதாகவும், அத்தகைய உணவகங்களில் அப்பம் சாப்பிடுவதைத் தவிர்க்குமாறும் எனக்கு அறிவுரை சொன்னார். இத்தகைய போக்கு மிகவும் ஆபத்தானதும் ஆரோக்கியத்தைப் பாதிப்பதாகவும் இருப்பதால் உணவுக் கலாசாரத்தில் மாற்றங்கள் அவசியம்.

அத்துடன் இவ்வாறான உணவுப் பொருட்களிலுள்ள உள்ளடக்கங்கள் பற்றிய விழிப்புணர்வும் தேவையானவை. இவை கவனத்தில் கொள்ளப் படாது போனால் இத்தகைய உணவுப் பொருட்களிலுள்ள இரசாயனமானது எமது உடலுறுப்புகளைச் சிறுகச் சிறுகச் சேதப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் எமது சமுதாயச் சூழ்நிலையில் நிரந்தர இளம் நோயாளிகளை அதிகம் சந்திக்கின்றவர்களாக நாம் மாற்றப்படுவோம்.

# புதினப் பூங்கா

ராஜேஷ் மணாளன்

## செல்பிபுள்ள...


© AP

"செல்பிபுள்ள செல்பிபுள்ள" என்று ஒரு சினிமா பாடலின் முதல் வரிகள் உங்கள் ஞாபகத்திற்கு வருகின்றதா? அலைபேசியை கையில் வைத்துக் கொண்டு செல்பிகள் எடுக்கும் பைத்தியம் இன்று உலகெங்கும் வேகமாகப் பரவும் ஒரு நாகரீகம்.

மலை உச்சியில் நின்று, பொங்கி வரும் அலைகள் நடுவே நின்று சாகசம் செய்பவர் கள் போல் செல்பி எடுத்து தமது உயிரை அநியாயமாக இழப்பவர்கள் பலர் நம்மிடையே இருக்கின்றார்கள்.

இந்தோனேசியாவில் உள்ள "லொம்போக்" என்ற தீவில் இரட்டை முகடுகள் கொண்ட 3700 மீட்டர் உயரமான "ரின்ஜானி" என்ற எரிமலை சமீபத்தில் வெடித்து குழம்பைக் கக்கியுள்ளது. இந்த நேரத்தில் அங்கிருந்த ஆயிரம் பேர் வரையிலான உல்லாசப்பயணிகளில் பெரும் பகுதியினர் பாதுகாப்பாகத் தப்பி வந்து விட்டாலும் 200பேர் வரையிலான சாகச விரும்பிகள் சீறும் எரிமலையுடன் தங்களையும் சேர்த்து தீவிரமாக செல்பி எடுத்துக் கொண்டிருக்கின்றார்களாம். எப்படிப்பட்ட பைத்தியங்கள் பார்த்தீர்களா?

(எரிமலையைக் குறிக்கும் "வால்கனோ" (volcano) என்ற சொல் இத்தாலிய மொழியில் ரோமானியர்களின் நெருப்புக் கடவுளைக் குறிப்பதாகும்)

## ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன்




கிறிஸ்தவராக இருந்து பின்பு அமெரிக்க இராணுவத்தில் சேர மறுத்து, ஒரு முஸ்லிமாக மதம்மாறி தன் பெயரை "மொகமட் அலி" என்று மாற்றிக் கொண்ட குத்துச்சண்டை வீரரான "கஸ்ஸியஸ் கிளே" என்பவர் உலகறிந்தவர்.

கடந்த ஜூன் மாதம் 4ந் திகதி மரணமாகிய இவர் "பார்க்கின்ஸன்" வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தவர். உடலில் அசாதாரண நடுக்கத்தை ஏற்படுத்தும் இந்த நோய் அவர் உடலில் வாங்கிய சாரமாரியான குத்துக்களால்தான் வந்தது.

ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதுபோல இவர் இறந்தாலும் இவர் பாவனையில் இருந்த பொருட்கள் ஏலவிற்பனையில் பெருந்தொகைப் பணத்திற்கு வாங்கப்பட்டுள்ளன.

குத்துச் சண்டை உலகில் அதி உயர்ந்தவர் என்று புகழப்பட்டது போல,ஏல விற்பனையிலும் இவரின் பாவனைப்பொருட்கள் உச்சவிலையைத் தொட்டிருக்கின்றன.

செப்ரெம்பர் முற்பகுதியில் அமெரிக்க நகரொன்றில் இடம்பெற்ற ஏலவிற்பனையில் இவர் அணிந்திருந்த அரைக் காற்சட்டை 143,400 டொலருக்கு விற்பனையாகி உள்ளது. 1974 இல் சோனி லிஸ்டன் என்ற குத்துச்சண்டை வீரரை மின்னல் வேகத்தில் வீழ்த்தி,உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரர் என்ற பட்டத்தைப் பெற்ற சமயம் அணிந்திருந்த உடைதான் இது..


இந்த ஏலவிற்பனைக்கு முன்பு, 1971இல் "ஜோ பிரேஸ்ஸியர்" தோற்கடிக்கப்பட்ட சமயம் இவர் அணிந்திருந்த கையுறைகள் 606,000 டொலர் தொகைக்கு ஏல விற்பனையில் விற்கப்பட்டிருந்தன.

"பைத்தியக்காரர்கள். இந்தப் பொருட்களை வைத்து என்ன செய்யப் போகிறார்கள்" என்று கேட்க வருகிறீர்களா?

அடுத்த வேளை உணவுக்கு அல்லல்படும் இந்த உலகில், இப்படியும் பணத்தை வீசும் புண்ணியவான்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

## இதயம் வலிக்கிறதே

## World Heart Day



பத்திரிகை செய்திகளைப் பார்த்தால் வருடத்தின் 365 நாட்களையும் ஏதோ வொன்றிற்காக ஒதுக்கி விடுவார்கள் போலிருக்கின்றது. கடந்த மாதம் 29 ஆம் திகதி இதயத்திற்காக ஒதுக்கப்பட்ட தினம்.


2000மாவது ஆண்டில் முதற் தடவையாக இத் தின அனுஷ்டிப்பு ஆரம்பமாகி இருக்கின்றது.

இன்றைய மரணங்களில் உயிரைப் பறிக்கும் இருதய வியாதிகள்தான் அதிகம் பேரைக் கொல்வதால், இப்படி ஒரு நாளை ஒதுக்கி அந்த நாளில் இதய வியாதிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது சாலப்பொருத்தமானதாக இருக்கின்றது.

"சாகவேண்டிய வயதில் சாகாமல் அநியாயமாக இறந்து போனாரே" என்று கவலைப்படவைக்கும் இந்த ஆட்கொல்லி இதய வியாதிகள் ஒவ்வொரு வருடமும் 17.5 மில்லியன் உயிர்களை உலகெங்கும் பறித்து வருகின்றன. இதில் அமெரிக்கா முதலிடத்தை பிடிக்கின்றது. 2030 இல் இத் தொகை 23மில்லியனை எட்டிப் பிடிக்குமாம்.

இளையவர், மூத்தவர் என்று வயது வேறுபாடின்றி கொல்லும் இதய நோய்களில் இருந்து நாம் தப்புவதாயின் மதுபானம், சிகரெட் என்பவற்றை விலக்கி, சீரான உணவுண்டு உடல் பயிற்சிகளை செய்வதுதான் ஒரே வழி.

## பனையால் விழுந்த 'சாம்சுங்'



அப்பிள் நிறுவனத்துடன் போட்டி போட்டுக்கொண்டு தனது கைபேசிகளால் பெருமளவு வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுத்து வரும் சம்சுங் நிறுவனத்திற்கு பொல்லாத காலம் பிறந்திருக்கின்றது போலும்.

பெரிய விளம்பரங்களுடன் அப்பிளின் ஐபோன்7 வருவதற்கு முன்பாக தனது புதிய சாம்சுங் நோட்7ஐ சந்தையில் அறிமுகப்படுத்தியது இந்த நிறுவனம். ஆனால் எதிர்பாராத விதமாக மின்னூட்டலின் போது கைபேசிகள் வெடித்துச் சிதற சந்தையிலிருந்து இந்த ஸ்மார்ட் போன்களை முற்றாக அகற்றும் அவல நிலை இந்தக் கொரிய நிறுவனத்திற்கு வந்து சேர்ந்தது.

இது பழைய கதை. இப்பொழுது சம்சுங் உற்பத்தியில் வெளிவரும் ஆடை கழுவும் இயந்திரமொன்று வெடித்து புதிய பிரச்சினையைக் கிளப்பியிருக்கின்றது.

மார்ச் 2011 க்கும் ஏப்ரல் 2016க்கும் இடையில் உற்பத்தி செய்யப்பட்ட சில இயந்திரங்களில்தான் இந்தக் கோளாறாம்.

"பெரிய குண்டு வெடித்தாற் போல வெடிப்பு ஏற்பட்டது. என்னுடைய 4 வயது மகன் இயந்திரம் இருந்த இடத்திற்கு அருகாமையில்தான் இருந்திருக்கிறான். நான் அலறிக் கொண்டு ஓடிச் சென்று அவனை இழுத்து வந்தேன்" என்று அதிர்ச்சியோடு சம்பவத்தை விபரிக்கின்றார் அமெரிக்காவின் ஜோர்ஜியா மாவட்டத்தைச் சேர்ந்த மெலிஸா என்ற பெண்மணி. இவர் நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளார். ரெக்ஸாஸ் இந்தியானா மாவட்டங்களிலும் இயந்திரங்கள் வெடித்துள்ளன. இங்கேயும் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

2.5 மில்லியன் "கலக்ஸி நோட்7" ரக கைபேசிகளைச் சந்தையிலிருந்து அகற்றிய சூடு ஆறமுன்னர் இன்னொரு குண்டு இவர்கள் தலையில் விழுந்திருக்கின்றது. பனையால் விழுந்தவன் தலையை மாடேறி மிதித்த கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

## முகநூலுக்கு ஒரு தடா





சமூக வலைத்தளங்கள் என்ற பெயரில் முகநூல், WhatsApp என்பன கோடிக் கணக்கானவர்களைக் கவர்ந்திழுத்து வருவது நமக்கு புதினமல்ல. உலகின் முதல் இடத்தில் நிற்கும் முகநூல் சமூகத் தளம் Whats App நிறுவனத்தை பத்து பில்லியன் பவுண்ட்ஸ் தொகைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் வாங்கியதும் பழைய கதை. இப்பொழுது புதிய புதினம் என்னவென்றால் ஜெர்மனியில் உள்ள 35 மில்லியன் Whats App பாவனையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை திரட்டுவதை முகநூல் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களின் தனியுரிமையை கட்டுப்படுத்தும் ஜெர்மன் நிறுவனமே இப்படிக் கூறியுள்ளது. முகநூலின் ஜெர்மன் தலைமையகம் ஹம்பர்க் நகரில் இருப்பதால் அங்குள்ள கட்டுப்படுத்தும் அமைப்பே இப்படி ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# உதய தாரகை

உலகின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை என்னும் பெருமையைக் கொண்டுள்ளது. உதயதாரகை அத்தோடு இலங்கையால் வெளியிடப்பட்ட முதலாவது பத்திரிகை என்னும் பெருமையையும் இது கொண்டுள்ளது. 1841 ஆம் திகதி தை மாதம் ஏழாம் திகதி தொடக்கம் இப் பத்திரிகை அமெரிக்க மிஷன் மூலம் மாதம் இரு முறையாக ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டது.


THE

உதயதாரகை.—MORNING STAR.

VOLUME I.—1841.

*Published Semi-Monthly, at one shilling a Quarter.*

DEVOTED TO

EDUCATION, SCIENCE, AND LITERATURE,

AND TO THE DISSEMINATION OF ARTICLES ON

AGRICULTURE, GOVERNMENT AND RELIGION,

WITH A BRIEF

SUMMARY OF IMPORTANT NEWS.

PUBLIC LIBRARY

JAFFNA:

PUBLISHED AT THE AMERICAN MISSION PRESS.

பின்னர் இப்பத்திரிகை மாதம் நான்கு முறை வெளியிடப்பட்டது. இதன் ஆரம்ப ஆசிரியர்களாக ஹென்றிமார்ட்டின் மற்றும் சேத் பேசன் ஆகிய இரு யாழ்ப்பாணத் தமிழர்களும், உதவி ஆசிரியர்களாக விசுவநாத பிள்ளையும், ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையும் பணி புரிந்தனர்.



# மாதோட்டம்

மாதோட்டம் என்பது, இலங்கைத் தீவில், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிறப்புடன் விளங்கிய துறைமுகப்பட்டினம் ஆகும். பாளி மொழியில் எழுதப் பட்ட இலங்கையின் பழைய வரலாற்று நூல்கள் இதனை மாதொட்ட அல்லது மகாதித்த என்று குறிப்பிடுகின்றன. தமிழ் மொழி மூலங்களிலிருந்து, இது தமிழில் மாந்தை என்றும் மாதோட்டம் என்றும் அழைக்கப்பட்டதாக அறியவருகின்றது. கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்கு முன், இலங்கைத் தீவின் முக்கிய துறைமுகமாக இது விளங்கியதுடன் உலகளாவிய வணிகத்திலும் சிறப்பிடம் பெற்றிருந்தது.




# கிளித் தட்டு

கிளித்தட்டு அல்லது தாச்சி இலங்கையிலும் ஈழத்தமிழர்கள் வாழும் பல்வேறு உலக நாடுகளிலும், இந்தியாவில் கேரளாவிலும் பரவலாக விளையாடப்படும் விளையாட்டாகும். இது உடலுக்கு நல்ல பயன் தரும் விளையாட்டாகும்.

வயல் நிலங்களில் விளையும் பயிரைக் கொத்திச் செல்ல வரும் கிளிகளை கூட்ட மாய் நின்று உழவர் துரத்தும் வழமையினின்று கிளித் தட்டு தோன்றியது என்கிறார் தேவநேயப் பாவாணர்.

## போட்டி விதிமுறைகள்


மைதானத்தை முதலில் ஒரு போக்கு பெட்டிகளாக பிரித்து, பின்னர் நடுவே ஒரு கோடு போட்டு கொள்ளப்படும். எத்தனை ஒரு போக்கு பெட்டிகள் என்பது விளையாட்டு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்தது. குறைந்தது ஒரு குழுவுக்கு 3 உறுப்பினர்களாவது வேண்டும்.

யார் நாணய சுண்டலில் தோற்கின்றார்களோ அவர்கள் மறிப்பார்கள், மற்ற குழு புகுவார்கள். மறிக்கும் அணியினர் முதலாம் கோட்டையும், கடைசி கோட்டையும் தவிர மற்றக் கோடுகளில் நிற்பார்கள். மிகுதியான மறிக்கும் அணியை சேர்ந்தவர் கிளி என்று அழைக்கப்பட்டு, எந்த கோடுகளாலும் செல்ல வல்லவர். கிளியால் தொடப்பட்டால் புகும் குழு உறுப்பினர் ஆட்டமிழப்பார்.

முதலில் கிளி ஒரு தொங்கலிலும், புகுபவர்கள் மற்றத் தொங்கலிலும் நிற்பார்கள். கிளி கூவிக்கொண்டு முன்னோக்கி வருவார். கிளி கூவியவுடன் புகுபவர்கள் உச்சிதெண்டி அடுத்த எல்லைக்கு செல்ல முயல வேண்டும். தாண்டும் பொழுது மறிப்பவரால் தொடப்பட்டால் தாண்டுபவர் ஆட்டமிழப்பார். தாண்டும்போது மட்டுமே மறிப்பவர் தட்ட முடியும், சும்மா அருகில் நிற்கும் பொழுதோ, உச்சும் பொழுதோ தட்ட முடியாது. ஆனால், கிளி எங்கும் சென்று யாரையும் எப்பொழுதும் தட்டலாம். அதாவது, எட்டியும் தட்டலாம்.

உச்சித்தப்பி எல்லைக்குச் சென்றவர்கள் பழம் என்று கருதப்படுவர். வந்து கொண்டிப்பவர்கள் காய்கள். பழமானவர், மீண்டும் புகுந்த எல்லைக்கே சென்றால் தான் அந்த அணியினருக்கு ஒரு புள்ளி கிடைக்கும். ஆனால், மீண்டும் வரும் பொழுது, பழம் காய் உள்ள ஒரு பெட்டிக்கு போவது அவ்வளவு நல்ல தல்ல, காரணம், இருவருக்கும் உச்சுவதற்கு குறுகிய இடமே கிடைக்கும். மேலும், கிளி பூட்டு போட்டு தட்ட முயல்வார்.

எந்த அணி கூடிய புள்ளிகளைப் பெறுகின்றதோ அவர்களுக்கே வெற்றி. பலருடன் சேர்ந்து விளையாடும் பொழுது, இந்த விளையாட்டு மிகவும் வேகமாகவும், விறு விறுப்பாகவும் அமையும்.






# ஒடியல் பிட்டு

ஒடியல் பிட்டு அல்லது ஒடியல் புட்டு என்பது ஒடியல் மாவில் இருந்து தயாரிக்கப்படும் ஒருவகை உணவுப் பண்டம். இது இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய உணவுகளில் ஒன்று. இது மிகவும் சத்தான உணவு என தமிழ் மக்களால் கருதப்படுகிறது. ஒடியல் பிட்டு கூடுதலாக மதிய உணவாகவே உண்ணப்பட்டது. சாதாரண ஒடியல்பிட்டு தேங்காய்ப்பூ, போட்டு அவிக்கப்பட்டு மதியஉணவாக சோறுடன் சேர்த்து உண்ணப்படும். வயல் வேலைக்குச் செல்பவர்கள் ஒடியல் பிட்டை அவித்து உதிர்த்தாமல் வைத்து விடுவார்கள். இது கட்டியாக இறுகி விடும். அடுத்த நாள் காலையில் கடினமாக இருக்கும் அப்பிட்டை மெது மெதுவாக உதிர்த்தி தேநீருடன் சேர்த்துச் சாப்பிட்டுச் செல்வார்கள். ஒடியல் பிட்டுக்கு மரக்கறிகள் போட்டும் அவிப்பார்கள். இது காய்ப்பிட்டு எனப்படும். இப்பிட்டை அவித்து இறக்கியவுடன் சூடாக இருக்கும் போதே நல்லெண்ணெய் விட்டுக் கிளறிச் சாப்பிடுவார்கள். நெத்தலி போட்டு அவிக்கப்படும் நெத்தலிப் பிட்டும் பலராலும் விரும்பி உண்ணப் படும் ஒன்று.

## வெவ்வேறு பெயர்கள்

### கிளித்தட்டு

குறிஞ்சி நிலத்தில் தட்டு என்பது பாத்தி. பாத்தியில் விளைந்த கதிர்களைத் தின்ன வரும் கிளிகளைத் தட்டி ஓட்டுவது போன்று விளையாடுவதால் இதனைக் கிளித்தட்டு என்றர்.

### தண்ணீர் புரி

வயல்களில் தண்ணீர் பாய்ச்சுவது போல இருப்பதால் இதனை மருதநில மக்கள் தண்ணீர் புரி என்பர்

### உப்பு விளையாட்டு

கடல்நீர் உப்புப் பாத்தியில் பாய்வது போல இருப்பதால் நெய்தல்-நில மக்கள் இதனை உப்பு-விளையாட்டு என்பர்

### தாச்சி

ஈழத்தில் பல பிராந்தியங்களில் தாச்சி என்று அழைப்பர்.

(15 ஆம் பக்க தொடர்ச்சி...)

# தெறிக்க விடலாமா...




இது மிகவும் சவாலான பணி. இதனை அரசாங்கம் மட்டுமே மேற்கொள்ள இயலாது. நம் அனைவரினதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் அவசியம்.

கழிவுகளை நீக்கும் முறைகள், மறுசு ழற்சி 'முறைகள், குறைக்கும் வழிகள், கையாளும் முறைகள், பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பங்கள் என்று விரிந்த ஒரு பரப்பே கழிவுப்பொருள் மேலாண்மை. இதனை பாடசாலைக் கல்வியில் இணைப்பதன் மூலமே இது பற்றிய பூரண அறிவை மக்க ளிடையே கொண்டுசெல்ல முடியும். பாடசாலையில் படிப்பிக்கப்படும் கேத்திர கணிதமும் திரிகோண கணிதமும் நிஜவாழ்வில் எந்தவொரு இடத்திலும் பயன்படப்போவதில்லை. அதைவிடுத்து நிஜவாழ்விற்கு, அதுவும் சுகாதாரமான வாழ்விற்கு தேவையான இப்படிப்பட்ட பாடநெறிகளை பாடசாலையிலேயே அறிமுகப்படுத்துவதே சிறந்த தீர்வாக இருக்கும்.

## சீரற்ற அரச நிர்வாகம்



கழிவுகளையகற்ற ஒரு ஊரின் மக்கள் மட்டும் உணர்ந்து சரிவர செயல்பட்டால் மட்டும் போதாது. அதற்கு தகுந்தாற் போல் அரசாங்கமும் விரைந்து உரிய முறையில் செயல்பட வேண்டும். கிராம சபை, நகர சபை, மாநகர சபை என்று பொறுப்புக்கள் பிரித்து கொடுக்கப்பட்டி ருப்பது கடமைகளை இலகுவாக்கவே. ஆனால் இங்கோ இத்தனை சபை நிர்வா கங்கள் இருந்தும் அங்கு பலநூறு அரச ஊழியர்கள் இருந்தும் கடமைகள் மட்டும் நடந்தபாடாகத் தெரியவில்லை. எல்லோ ரும் 'கடமைக்கு' வேலை பார்ப்பவர்களே தவிர வேலையை கடமையாக பார்ப்பவர் களல்ல.




"இங்கே குப்பைகள் கொட்ட வேண் டாம்" என்று கொட்டை எழுத்துக்களில் அறிவித்தல் பலகைகளை மட்டும் தொங்கத்தெரிந்த மாநகரசபை, எங்கே குப்பைகளை போட வேண்டும், எவ்வாறு கழிவுகளை அகற்ற வேண்டும், எந்தெந்த நாட்களில் சுத்திகரிப்பு ஊழியர்கள் வரு வார்கள் என்ற முறையான விளக்கத்தை மக்களுக்கு வழங்க தவறுகின்றது. சரியான அறிவுறுத்தல்கள் மக்களுக்கு வழங்கப் படுமானாலே வீதியோரத்தில் குவியும் பாதி குப்பைகள் குறையும். ஆனால் அரச நிர்வாகத்திலிருப்பதும் இதே அசண்டை யீனம் கொண்ட எம்மவர்கள் தானே. இப் படியான உருப்படியான செயல்கள் செய்வ தென்பது அவர்களுக்கு பழக்கமற்றது.

வீதிக்கு வீதி கழிவுத்தொட்டி அமைக் கலாம், சேதன அசேதன உக்கலடையும் உக்கலடையாத கழிவுகளை பிரித்து சேக ரிக்க வெவ்வேறு தொட்டிகளை அமைக் கலாம், கழிவுகளை சேகரிக்க சீரான ஒரு நேர அட்டவணையைக் கடைப்பிடிக்க லாம், கழிவகற்றல் பிரிவிற்கு வாகன மற்றும் ஊழியர் வளங்களை தேவையான ளவில் பேணலாம். இத்தனை மாற்றங் களை கொண்டு வந்தாலே வீதிகளில் சிதறிக்கிடக்கும் குப்பைகள் முற்றாக இல் லாது போகும். இதற்கு மேலும் வீதியில் வீசினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை, தண்டப்பணம் அறவிடல் போன்ற விதிமுறைகளை கொண்டு வந்தால் நிச்ச யம் எமது சூழலைத் தூய்மையாக்கலாம்.




## கற்றுக்கொள்ளுங்கள்

இதுவரை நீங்களும் உங்கள் குப்பை களை வீதிகளிலும் மற்றவர் நிலங்களிலும் வீசியெறிபவர்களா? அப்படியானால் இனியாவது உங்கள் செயலை மாற்றிக் கொள்ளுங்கள். உங்களது சூழலை, நகரை நீங்கள் தான் சுத்தமாக வைத்திருக்க வேண் டும். சுயநலவாதியாக இருக்காதீர்கள். ஊரில் உள்ள எல்லாரும் கெட்டவர்க ளாயும் இருக்கமுடியாது. ஒரு சில நல்லவர்களும் முன்மாதிரிகளும் உங்க ளைச் சுற்றி இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை பார்த்தாவது கற்றுக் கொள் ளுங்கள். திருந்துங்கள்.

குப்பைகளையும் கழிவுகளையும் வீதிகளில் வீசாதீர்கள். அவற்றை உகந்த முறையில் வெளியேற்றுங்கள். சேதனக் கழிவுகளை உரமாக்குங்கள். அசேதனக் கழிவுகளை முடிந்தவரை அவற்றை ஒரு பெரிய பையினுள் சேகரித்து தினமும் அல்லது வரா, வாரமோ அப்புறப்படுத்துங் கள். தகுந்த முறையில் நீங்கள் அப்புறப் படுத்தினால் மட்டுமே அவற்றை மீள்சு ழற்சிக்கு உட்படுத்தி சூழலுடன் சேர்வதை குறைக்க முடியும். உணர்ந்து யோசித்து செயற்படுங்கள். இதற்குமேலும் குப்பை களையும் கழிவுகளையும் வீதிகளில் தெறிக்கவிடலாமா?

---

வல்லை மு . ஆ . சுமன்



(கடந்தவார புதுவிதியின் முகப் பக்க மாக 'கருச்சிதைவு' நாடக ஆற்றுகையின் படமும் அதுகுறித்த புதுவிதியின் 'ஒருவரி விமர்சனமும்' வெளிவந்திருந்தது. வாச கர்கள் அது தொடர்பான விரிவான கட் டுரை உள்ளே இருக்கலாமென தேடி ஏமாந்த பின்னர், அந்த ஆற்றுகை குறித்த விரிவான விமர்சனத்தை வேண்டினர். அவர்களுக்காக 'கருச்சிதைவு' நாடக ஆற்றுகையின் விரிவான விமர்சனம் இது)

அண்மைக்காலமாக நாடகத்து றையை பொறுத்த மட்டில் ஈழத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே அதன் செயற்பாடு கள் இருப்பது வேதனைக் குரியது. நாடகத்துறையும் தனக்கான தனித்து வத்தை பேணுகிறதா என்பதும் கேள்விக் குறி. ஆனால் இவை எல்லாவற்றையும் உடைக்கும் விதமாக, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள்களரி நாடக விழாவில், யாழ்ப்பாணம் அரங்க கலைக் கழகத்தினர் அரங்கேற்றிய 'கருச்சிதைவு' எனும்

# கருச்சிதைவு

## தமிழில் புதிய உடைப்பு

நாடகம் இலங்கை யின் நாடக வரலாற்றில் புதியதோர் நாடக முறையாக அறிமுகப்படுத்தபட்டு பலரது பாராட்டுகளையும் பெற்றது.


இந்த 'கருச்சிதைவு' யப்பானிய நாடக முறைகளில் ஒன்றான 'பூட்த்தோ' எனும் நாடக முறைமையை அடிப்படையாக கொண்டு 'இலங்கை பூட்த்தோ' நாட கமாக அறிமுகமாகியுள்ளது. இந்நாடக முறைமை நாம் வழமையாக பார்க்கும் நாடகங்களை விட, மாறுபட்ட முறையில் ஆற்றுகை செய்யப்பட்டது. எந்த வித வசனங்களோ, உரையாடல்களோ இல்லா மல் தனி உடல் மொழி மூலமாக நடிகர் அழகிய கோடுகளை அர்த்தப்பாடுகளு டன் வெளிப்படுத்தும் வடிவமே 'பூட்த்தோ' நாடக முறையாகும். இதில் பங்குபற்றுபவர் சொல்கின்ற விடயத்துக் கும், பார்வையாளனுக்கும் இடையேயான நோக்கு மாறுபட்டாலும் எல்லாம் ஒரு கருப்பொருளின் புள்ளியில் வருவது சிறப்பம்சமாகும். மெதுவான இசையோடு ஆரம்பமான இந்த நாடகத்தில் நான்கு நடிகர்கள் உடல் முழுதும் வெள்ளை நிறத்தோடு, மொட்டைத் தலையோடு, இடுப்பில் சிறு துணியோடு அரங்கில் தோன்றி பல்வேறு பட்டஅசைவுகளுடன் ஆற்றுகையை நிகழ்த்தினர். பெரிய கருமுட்டைக்குள் இருந்து வெடித்து வரும் உயிர்கள் (மனிதர்கள் ) ஒன்றோடு ஒன்று கட்டி அணைத்து கொள்வதும், ஒன்றாய் மகிழ்வதும் இந்த உலகத்தை பார்த்துப் பூரிப்பு, ஆச்சர்யம் அடைதலும் என நகரும் இந் நாடகத்தில், தாங்கள் மனிதன் என்பதை அந்த உயிர்கள் உணர்ந்து பின்னர் தனித்தனியாக தாம் சார்ந்த திறனை வளர்த்தல், சொத்துகளை சேகரித்தல் என சென்று கொண்டிருக்கின் றன. திடீரென அரங்கின் நடுவே ஓர் சிம்மாசனம் வருகிறது. அந்தச் சிம்மாச னம் அதிகாரத்தின் குறியீடாக காட்டப் படுகிறது.

இதுவரை நேரமும் மெதுவாக நகர்ந்த கதைக்களம், இதன் பின்னர் 'விறு விறு' என சூடுபிடித்தது. அந்த சிம்மாசனத்துக் காக நால்வருக்குள்ளும் போட்டிகள், பொறாமைகள் என ஒருவரை ஒருவர் அடித்து கொள்கின்றனர். திட்டங்கள் பல தீட்டுகின்றனர். மனிதனுக்குள் இருக்கும் மிருகக்குணம் வெளிவந்து ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டு எல்லோரும் இறந்து போகிறார்கள். அந்த தருணத்தில் சிம்மாசனம் மட்டும் அரங்கின் நடுவே இருக்க, மேலதிகமாக இன்னும் சில சிம்மாசனங்கள் வர, மெல்லியதாக இருள் சூழ நாடகம் முற்றுப் பெறுகிறது. ஒரு மணி நேரம் நடைபெற்ற இந் நாடகத் தில் அதனூடே ஒன்றித்து பயணித்தார் கள் பார்வையாளர்கள். இந்நாடகம் மனிதன் கருவில் இருந்து பிறந்து வளர்ந்து அவன் படும் இன்னல்கள், போட்டிகள், பொறாமைகள், பதவி ஆசைகள், ஒற்று மையின்மை எனப் பல்வேறுபட்ட விட யங்களை கொண்டமைந்திருந்தது. இதில் நடிகர்களாக இ.வினோதன், தி.கில்மன், ம.சுலக்ஷன், த.கஜன் போன்றோர் பங்கு பற்றினர். இந்த நாடகத்திக்கு பின்னால் இவர்களின் உழைப்பு அபாரமானது. சாதாரணமாக யாராலும் இவ்வாறான ஆற்றுகையை செய்ய முடியாது. ஆனால் கலை மீதான அர்ப்பணிப்பு, பயிற்சி மட்டுமே இவர்களைத் தேர்ந்த நடிகர்க ளாகக் காட்டியது.

மேலும் இந் நாடகத்தில் ஒளியமைப்பு மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனைய நாடகங்களின் ஒளியமைப்புக்கும் இதற்கும் பல வித் தியாசங்கள் உண்டு. அதனை புரிந்து கொண்டு, கதை நர்வுகளுக்கு ஏற்பச் சிறந்த முறையில் ஒளிவிதானிப்பு செய்த மகிந்தன் அவர்களின் திறன் குறிப்பிடவேண்டியது. மற்றும் காட்சிய மைப்பில் ம.சுலக்ஷன், மகிந்தன், கயன், வினோதன், குணரூபன், கில்மன் ஆகியோர் இணைந்து தம் கை வண் ணத்தை வெளிக்காட்டியுள்ளனர். இந்த நாடகத்தின் நெறியாள்கையை மேற் கொண்ட திரு.தர்மலிங்கம் இந்த 'கருச்சிதைவு' நாடகம் ஊடாக புதிய தோர் பரிணாமத்தை ஏற்படுத்தி உள்ளார். குறியீட்டு முறையில் காட்டப்படும் வர்ணங்கள், அந்த சிம்மாசனம், இறுதிக் காட்சி போன்றவற்றில் தன்னை ஓர் ஆளுமை மிக்க சிறந்த படைப்பாளி என்பதை தர்மலிங்கம் நிரூபிக்கிறார். நவீன தமிழ் நாடகத்தின் தந்தை என அழைக்கப்படும் குழந்தை ம.சண்முக லிங்கம் அவர்கள் இந்த 'கருச்சி தைவு' ஆற்றுகையைப் பார்த்து வியந்து பாராட்டியதோடு தனக்கே புதிய அனுப வத்தை தந்ததாக கூறினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். மொத்தத் தில் நாடகத் துறை அருகி வருகின்ற இக்காலத்தில் 'இலங்கை பூட்த்தோ' எனும் புதிய நாடக முறைமையை அறிமுகப் படுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள் யாழ்ப்பாண அரங்க கலை கழகத்தினர்.



முனைவர் ஜெ.அரங்கராஜ்



# பௌத்தமும் ஈழமும்

தமிழகத்தில் வழங்கும் சமயங்களினைப் புறத்தே இருந்து வந்த சமயங்கள், அகத்தே நிலவிய சமயங்கள் எனும் இரு பிரிவுகளில் அடக்கலாம். சமணம், பௌத்தம் முதலானவை சங்க கால தமிழ்ச் சமூகவியலில் புறத்தேயிருந்து வந்த பெருஞ் சமயங்களாகும். ஆசிவகம் தமிழகத்திலிருந்தே நாவலத்தீவு முழுதிற்கும் பரவிற்று என்று ஒருசாரரும், வடகோடியிலிருந்தே தமிழகம் போந்ததென்று ஒருசாரரும் குறிப்பிடுவர். புறச் சமயங்கள் தமிழ்த் தாயகங்களுக்கு எவ் வகையில் எவ்விடத்தின் வழி நுழைந்தன என்பனவற்றினைக் குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளுதல் என்பது அச்சமயங்களின் தோற்றுவாய் நிலையினையும், அவை தமிழ்ச் சமுதாயத்தில் பெற்ற பரவலாக்கத்தினையும், அதன் செவ்விய ஆளுமைக்கால வரலாற்றினையும், தோய்வையும் அறிந்து கொள்ளுதற்கு இன்றியமையாததாகும். இதன் வழி கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழகத்தின் கொங்குப் பகுதியின் வடபால் உள்ளதும் பண்டைய எருமை நாடு என்று அழைக்கப்பட்டதுமான மைசூர் பீட பூமியின் "சரவண பெலகோலா" எனும் இடத்தில் மையம் கொண்டிருந்த சமணம் மேயாற்றுக் கணவாயைக் கடந்து, கொங்கு நாட்டில் முதலில் நுழைந்தது. விசய மங்கலம், பூந்துறை, திங்களூர் முதலான இடங்களில் தலமமைத்து கோலோச்சியது. இதன்விளைவால் கொங்கு நாட்டு வேளிர் தலைவன் சமணத்தைச் சார்ந்து பெருங்கதை எனும் சமண இலக்கியம் செய்தமையும், கொங்கிலிருந்த சமணம் பாண்டியநாடு முழுதும் பெரிதும் பரவியமையும், பின் தமிழகம் முழுதும் பரந்தமையும் அறிந்தமையே. சமண முனிவர்கள் கடல் கடக்கக்கூடாது எனும் விதி சமணத்தைக் கடல் கடந்து ஈழத்தில் பரவுவதைத் தடைசெய்தது. ஆயினும் சமணவாணிகர்கள் இலங்கையில் பெரிதும் இருந்தது, சமணவாணிகர் ஈழத்தில் மேலாண்மை பெற்றமையை ஈழத்தின் கிழக்குக் கரையோரம் திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடைப்பட்ட பழைய வாணிகப் பாதையில் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு அறியலாம்.

"கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் அசோகன் காலம் தொட்டே தமிழகத்தில் பௌத்தம் மக்கள் செல்வாக்கும், மன்னர்களின் செல்வாக்கும் பெற்ற பெருஞ்சமயமாக விளங்கிற்று. அதே கால கட்டத்தில் தமிழகத்திலிருந்து ஈழத்தில் உள்ள தமிழர்களிடம் பரவிப் பிறகு சிங்களரிடமும் பரவியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு."

தமிழகத்தின் மேற்குப் பகுதிகளில் சமணச் சின்னங்கள் மிகுந்து கிடைப்பதைப் போன்றே தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் பௌத்த சின்னங்கள் மிகுந்து கிடைப்பதினைக் காணலாம். பௌத்தம் தமிழகத்தின் கிழக்குப் பகுதியினை ஒட்டியே பரவத் தலைப்பட்டமையைப் பல்வேறு சான்றுகளின்வழி உணரலாம். காஞ்சிபுரம், மாங்காடு, இரண்டாங்காடு, ஆலூர், கூவம், ஞாயர், நாவல்ரர், பல்லாவரம், திருப்பாதிரிப்புலியூர், சங்கமங்கை எனத் தொடர்ச்சியான தொண்டை மண்டல ஊர்களிலும், காவிரிப்பூம் பட்டினம், பூதமங்கலம் (கோயில்வெண்ணி), புத்தமங்கலம், சங்கமங்கலம், போதிமங்கலம், திருவிளத்துறைக் கோயில், கும்பகோணம், திருவலஞ்சுழி, பட்டீச்சுரம், எலயனூர், பொன்பற்றி, புத்தகுடி உறையூர், பெருஞ்சேறு, கோட்டப்பாடி, மயூரபட்டணம், நாகைப்பட்டினம் முதலாய ஊர்களைத் தலைமை யாகக் கொண்டு சோழமண்டலத்திலும் பௌத்தம் பாவலாக்கம் பெற்றது.

பாண்டிய மண்டலத்தில் மதுரை, அரிட்டாபட்டி, பொதிகை, தஞ்சை (தஞ்சாகூர்), திருமாலிருஞ்சோலை, தென்கரை முதலான ஊர்களையும் பௌத்தம் தலமாகக் கொண்டு செழித்திருந்தது. ஆனால் மேலைக்கரையில் வஞ்சிமாநகர் தவிர மற்றைய இடங்களில் பௌத்தம் பெரிதும் பரவியதாக அறியக் கூடுதலில்லை. ஆனால், சமணம் செழித்திருந்தது. ஈழமண்டலத்தில், நயினாதீவு (மணிபல்லவம்), காரைத்தீவு, திருகோணமலை நெடுந்தீவு, சாவச்சேரி கந்தரோடை/தெல்லிபளை முதலான தலங்களில் தமிழ் பௌத்தம் செழித்திருந்தது. இவ்வகைத் தலங்களையே காஞ்சியிலிருந்து நெல்லைவரை கிழக்குக் கடற்கரை வாயிலாகப் பௌத்தத் துறவிகள் பயணம் செய்து வணங்கினர். இதனை "யுவான் சுவாங்" போன்ற வெளிநாட்டுத் துறவிகளின் பயணப் பாதைகளினை ஆய்வதன் வழியறியலாம்.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் அசோகன் காலம் தொட்டே தமிழகத்தில் பௌத்தம் மக்கள் செல்வாக்கும், மன்னர்களின் செல்வாக்கும் பெற்ற பெருஞ்சமயமாக விளங்கிற்று. அதே கால கட்டத்தில் தமிழகத்திலிருந்து ஈழத்தில் உள்ள தமிழர்களிடம் பரவிப் பிறகு சிங்களரிடமும் பரவியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. ஆனால், சிங்கள நூலான மகாவம்சம், மூன்றாம் பௌத்த மாநாடு மௌரியப் பேரரசின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் அசோகரின் ஆதரவில் மெக்கல புத்த திஸ்ஸ எனும் தேரரின் தலைமையில் கூடிப் பௌத்த மதத்தினைப் பரப்புதற் பொருட்டுப் பல்வேறு நாடுகளுக்கும் பிக்குகளை அனுப்புவதாக முடிவாக்கியது. மாநாட்டு முடிவின்பின் காஸ்மீரம், காந்தாரம் எனும் நாடுகளுக்கு மஜ்ஜந்திகர் எனும் பிக்குவும், மகிஷ மண்டலத்துக்கு மாகதேவர் எனும் பிக்கும், அபரந்தக நாட்டிற்குத் தம்மரக்கிதர் எனும் பிக்கும், வனவாசி நாட்டிற்கு ரச்சிதர் எனும், தேரரும், மகாராட்டிர தேசத்திற்கு மகாதம்மரக்கிதர் எனும் தேரரும், யோனதேசத்திற்கு மாகரக்கிதர் எனும் தேரரும் அனுப்பப்பட்டனர். இமாலயத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு மஜ்ஜிம எனும் தேரரும், சுவர்ணபூமி எனும் நாட்டிற்குச் சோனர், உத்திரர் என்னும் தேரர்களும் அனுப்பப்பட்டனர். பெரிய தேரராகிய மகிந்தரும் அவரின் சீடர்களாகிய இட்டியர், உத்தியர், சம்பலர், பத்தசாலர் என்பவர்களும் இலங்கைத் தீவிற்குப் பௌத்த மதத்தைப் பரவச் செய்ய அனுப்பப்பட்டனர். மகிந்தர் முதலியவர்கள் தாம் அடைந்திருந்த இருத்தினாலே ஆகாய வழியாகப் பறந்து இலங்கையை அடைந்தனர் என்று மகாவம்சம் கூறுகிறது. (12-ஆம் அதிகாரம்) பௌத்த மத விரிவாக்கத்திற்காகப் பிக்குகள் அனுப்பப்பட்டதாக மகாவம்சம் கூறும் நாடுகளின் பட்டியலில் தமிழ்நாடுகள் எதுவுமில்லை. மேலே குறிப்பிட்ட நாடுகளோடும் (யோனதேசம்) யவன நாடு முதலிய தூரநாடுகளோடும் தமிழ் நாடுகளுக்கும் பிக்குகளை அனுப்பிய மையைப் பின்வரும் அசோக சாசனங்களின் வழியறியலாம்.

முதலாவதாக குஜராத்தின் சௌராஷ்டிரப் பகுதியில் உள்ள கிர்னார் நகருக்கருகிலுள்ள பாறையில் எழுதப்பட்டுள்ள அசோகக் கல்வெட்டில் பின்வரும் பகுதி காணப்படுகிறது.

"காருண்யமுள்ள தேவனாம் பிரியராகிய அரசர் பெருமானுடைய (அசோகரின்) ஆட்சிக்குட்பட்ட எல்லா விடங்களிலும் இவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரள புத்திர தேசங்களிலும், தாமிரபரணியிலும் (இலங்கை), யவன அரசனாகிய அண்டியொகஸ் ஆட்சிசெய்யும் தேசத்திலும் அதற்கப்பாற்பட்ட தேசங்களிலும் காருண்யமும் மேன்மையும் பொருந்திய அரசரால் இரண்டுவித மருத்துவ சிகிச்சைகள் ஏற்படுத்தப்பட்டன. அவை, மக்களுக்கு மருத்துவம், கால்நடைகளுக்கு மருத்துவம் என்னும் இருவகை மருத்துவ நிலைகளாம்"

இதற்கடுத்து மூன்றாம் பாறைக் கல்வெட்டில், தமிழகத்திலும் இலங்கையிலும் பௌத்தத்தைப் பரப்பிய செய்தி குறிப்பிடப்படுகின்றது. ஆனால், பின்வரும் மூன்றாம் பாறைக் கல்வெட்டில் சேர தேசம் (கேரளபுத்திர) விடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சாசனம் கி.மு. 258-இல் எழுதப்பட்டது.

"தரும விஜயம் என்னும் வெற்றியே மாட்சிமைமிக்க அரசரால் (அசோக மன்னரால்) முதல்தரமான வெற்றியென்று கருதப்படுகின்றது. இந்த வெற்றி இந்த இராச்சியத்திலும், இதற்கப்பாற்பட்ட அறுநூறு யோசனை தூரத்திலுள்ள அண்டியொகஸ் என்னும் யவன அரசனுடைய தேசத்திலும், அதற்கு அப்பால் டாலமி, அண்டிகொனஸ் மகஸ், அலெக்ஸாந்தர் என்னும் பெயருள்ள நான்கு அரசர்களின் தேசங்களிலும், இப்பால் தெற்கேயுள்ள சோழ, பாண்டிய, தாமிர பரணி (இலங்கை) வரையிலும் அடிக்கடி கைப்பற்றப்பட்டது"

என மேற்கண்ட இரண்டு கல்வெட்டுக்களில் சோழ, பாண்டிய நாடுகள் எனும் தமிழ் நாடுகளை அடுத்தே இலங்கை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழ் நாடுகளுக்கு அடுத்தே இலங்கைக்குச் சமயக் குழுக்களை அசோக மன்னர் அனுப்பினார் என்பதனை அறியமுடிகின்றது.

பர்மா தேசத்துப் பௌத்தப் பிக்குப் பரம்பரையைக் கூறுகின்ற வரலாறு (Talang Records) காஞ்சிபுரத்துக்கு அருகிலே பதரதிட்டை என்னும் இடத்தில் அசோக சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட விகாரையில் தம்மபாலர் என்னும் பௌத்தப் பிக்கு வசித்திருந்தார் என்று கூறுகிறது. இந்தத் தர்மபாலர் என்பவர், பேர்போன ஆசாரிய தர்மபாலர் ஆவார். இவர், பௌத்த வேதமாகிய திரிபிடகத்தின் சில பகுதிகளுக்குப் பாளி மொழியில் உரை எழுதியிருக்கிறார். இவர் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர். தாம் எழுதிய நூலில் அசோக சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட விகாரையில் தாம் தங்கியிருந்து இந்நூலை எழுதியதாகக் கூறியிருக்கிறார்.

1. இப்படியான சான்றுகள் உள்ளபோது,

மகிந்தர் ஆகாய வழியாகச் சிங்களர் நாட்டை வந்தடைந்தார் என்பதனை எவ்வகையில் ஏற்பதென்பதோ? ஆனால் மகிந்தர் தமிழகம் போந்து பின்னர் இலங்கை அடைந்தமையை ஆய்வின் வழி உணரவியலும், அதற்கான மேலும் பல சான்றுகள் உண்டு.

பணையைந் தோங்கிய பாசிலைப்
போதி அணிதிகழ் நீழ லறவோன்
திருமொழி

அந்தர சாரிக ளறைந்தனர் சான்றும்
இந்திர விகார மேழுடன் போகிப்
(சிலப்பதிகாரம்- 10: 11-14)

( அடுத்த வாரமும்...)




தொகுப்பு: சி. விமலன்



# நீதிக்கு தலைவணங்கு

பதினெட்டு வயதுக்குட்பட்ட வீரர்களை, கழகங்களுக்கிடையே பரிமாறிக் கொள்வதில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளை மீறி உள்ளதாக, இங்கிலாந்து பிறீமியர் லீக் போட்டிகளில் முதன்மை வகிக்கும் மான்செஸ்ரர் சிற்றி கழகம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆர்ஜென்ரீனாவின் வெலஸ் சர்ஸ்பீல்ட் கழக ஜூனியர் அணிக்காக 11 வயது முதல் ஆடிவரும் பெஞ்சமின் காரே என்ற சிறுவனை, மான்செஸ்ரர் சிற்றி கழகம் அண்மையில் ஒப்பந்தம் செய்திருந்தது. 1986 ஆம் ஆண்டு மரடோனா தலைமையில் ஆர்ஜென்ரீனா வென்ற உலகக் கிண்ண அணியில் இடம்பெற்ற ஒஸ்கார் காரேயின் பேரன்தான் இந்த பெஞ்சமின் காரே. வெலஸ் கழகம் காரேயை, 16 வயது நிரம்பியவுடன் பார்ஸிலோனா அல்லது மான்செஸ்ரர் யுனைற்றட் கழகத்துக்கு ஒப்பந்தம் செய்வதற்குத் தீர்மானித்திருந்தது. ஆனாலும் மான்செஸ்ரர் சிற்றி அதற்கு முன்னதாகவே காரேயுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட உலகில் 18 வயதுக்குட்பட்ட வீரர்களைக் கழகங்களுக்கிடையே பரிமாறிக் கொள்ள வேண்டும் என்றால்.

1.வீரர்களது சொந்த நகரில் இருந்து 31 மைல் எல்லைக் குட்பட்ட கழகத்திலேயே அவரால் விளையாட முடியும்.

2.எதிர்பாராத சூழ்நிலைகளால் வீரர்களுடைய பெற்றோர் வேலை நிமித்தம் வேறு இடத்திற்குச் சென்றால் வீரர்கள் வேறு கழகத்துக்கு மாறலாம்.

3.ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளுக்கிடையே வீரர்கள் பரிமாற்றம் நடைபெறும் பொழுது, அவர்கள் 16 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

காரேயின் பெற்றோர் ஆர்ஜென்ரீனாவிலேயே வசித்து வருகின்றனர். அத்தோடு ஆர்ஜென்ரீனா ஐரோப்பிய ஒன்றிய எல்லைக்குள் அடங்காத நாடு என்பதனாலும், காரே 16 வயதை அடைவதற்கு முன்னதாகவே மான்செஸ்ரர் சிற்றி அவரை ஒப்பந்தம் செய்ததனாலும், அது சட்டப்படி தவறென்கிறது வெலஸ் கழகம்.

ஆனால் மான்செஸ்ரர் சிற்றி நிர்வாகமோ காரேயின் கடவுச்சீட்டை ஆதாரமாகக் காட்டி அவர் 16 வயதை அடைந்த பின்னரே அவரை ஒப்பந்தம் செய்ததாகக் கூறுகின்றதே தவிர ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் எல்லைக்குள் காரே அடங்க மாட்டார் என்ற முக்கிய விதியைக் கருத்தில் எடுக்கவில்லை. தற்போது இந்தச் சர்ச்சைக்குத் தீர்வு காணும் முகமாக வெலஸ் கழகம் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தை நாடியுள்ளது.

# புதிய கூட்டணி

தலைப்பைப் பார்த்து விட்டு, ஏதோ அரசியல் பத்தி என்று எண்ணி விடாதீர்கள். இதுவும் விளையாட்டுச் செய்தியே. சுமார் 10 வருடங்களுக்கு முன்னர், கிரிக்கெட்டில், அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற சுனாமி கண்காட்சிப் போட்டியில், உலக லெவன் அணி எதிர் ஆசிய லெவன் அணி எனப் பிரித்தும் பிற்பட ஆசிய லெவன் அணி எதிர் ஆபிரிக்க லெவன் அணிகள் எனப் பிரித்தும் போட்டிகள் நடைபெற்றிருந்தன. அதைப்போல தற்போது ரென்னிஸ் போட்டிகளிலும் முதன்முறையாக பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் 'லேவர் கிண்ணம்' என்ற தொடரை அறிமுகம் செய்யவுள்ளது. இதில் ஐரோப்பிய வீரர்களை எதிர்த்து உலக வீரர்கள் மோத உள்ளனர்.

பொதுவாக ஒற்றையர் ரென்னிஸ் போட்டியில் முன்னணி வகிக்கும் வீர, வீராங்கனைகள் இரட்டையர் ரென்னிஸ் போட்டிகளில் கலந்துகொள்வது அபூர்வமான ஒன்றாகவே இருக்கும். விதிவிலக்காக வில்லியம்ஸ் சகோதரிகள் போன்ற சிலர் தற்போதும் இணைந்து ஆடுவதுமுண்டு.

லேவர் கிண்ணத்தின் முதலாவது தொடர் அடுத்த வருடம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது வெளிவந்துள்ள தகவல்படி ஐரோப்பிய அணியில் பெடரரும், நடாலும் இணைந்து இரட்டையர் போட்டியில் களமிங்க முடிவு செய்துள்ளதை அவர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர். எனினும்



இதில் கலந்து கொள்ளும் ஏனைய வீரர்களின் விபரம் குறித்து எந்தத் தகவலும் தெரியவரவில்லை.

பெடரரும், நடாலும் இணைந்து விளையாடுவது உறுதியானாலும், காயம் காரணமாக இம்முறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலும் அமெரிக்க ஓபன் தொடரிலும் பங்குபற்றாத பெடரர், அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கும் இத்தொடரில் முழு உடற்தகுதியுடன் களமிறங்குவாரா? என்பது தான் தற்போது எழுந்துள்ள சந்தேகம். எது எப்படி இருந்தாலும் எதிரும் புதிருமான சில முன்னணி வீரர்களை ஒன்றாகக் களத்தில் பார்ப்பது ரசிகர்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சியை கொடுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.



# கௌரவம்

கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் உள்ள இரண்டு அரங்குகளுக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மறைந்த முன்னாள் தலைவர் ஜக்மோகன் டால்மியா ஆகியோரின் பெயர்கள் வைக்கப்படவுள்ளன. கொல்கத்தாவைச் சேர்ந்த இவ்விருவரும் கிரிக்கெட்டுக்கு ஆற்றிய சேவையினைக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் நடைபெற்ற கொல்கத்தா கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

49 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை வகித்த கங்குலி அதில் 21 வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்து, அதிக வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த இந்திய அணித்தலைவர்களில் டோனிக்கு அடுத்து இரண்டாம் இடத்தில் உள்ளார். கங்குலியின் காலத்தில் இந்தியா வெளிநாடுகளில் அதிகபட்சமாக 11 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தது. கங்குலி தலைமையை ஏற்கும் போது டெஸ்ட் போட்டிகளில் எட்டாமிடத்தில் இருந்த இந்திய அணியை இரண்டாமிடத்திற்கு கொண்டு வந்திருந்தார். இந்திய அணியில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுத்த தலைவராகவும் சச்சின், இன்சமாம் உல் ஹக்கிற்குப் பிறகு ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது வீரராகவும் தன்னைப் பதிவு செய்துள்ளார். இந்திய அணியை 2003 உலகக் கிண்ணப் போட்டியில் இறுதிப்போட்டி வரை அழைத்துச் சென்றவர். இந்திய ரசிகர்களால் செல்லமாக கொல்கத்தாவின் இளவரசர் என்று அழைக்கப் படும் கங்குலிக்கு இது பெருமையான தருணமே.

அதுபோல இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவரான டால்மியா 1987 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை இங்கிலாந்துக்கு வெளியே முதன் முதலாக இந்தியாவில் நடத்துவதற்குக் காரணமானவர். அப் போட்டியை இந்தியாவும் பாகிஸ்தானும் சேர்ந்து நடத்தி இருந்தாலும் இறுதிப்போட்டியை கொல்கத்தாவிலேயே நடத்தியவர். தென்னாபிரிக்க அணிக்கு நிறவெறி காரணமாக கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட்ட போது அவர்கள் மீளவும் சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்கு முன்னின்று பாடுபட்டவர். அதனால் தான் தடை நீக்கப்பட்டதும் முதன் முதலில் தென்னாபிரிக்கா இந்தியாவில் வந்து விளையாடுவதற்கு வழிவகுத்தவரும் டால்மியாவே.

ஆசியாவைச் சேர்ந்த முதலாவது நபராகவும், கிரிக்கெட் வீரர் அல்லாத ஒருவராகவும் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமைப் பதவியை அலங்கரித்த பெருமையும் டால்மியாவுக்கு உண்டு. பங்களாதேஷ் டெஸ்ட் அந்தஸ்து பெற்றதிலும் 1996 உலகக் கிண்ணப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை தூர்தர்ஷனுக்கு வழங்கி இருந்ததிலும் டால்மியாவின் கணிசமான பங்குண்டு.

இதுபோன்று இன்னும் பல சேவைகளை கிரிக்கெட்டுக்கு ஆற்றிய டால்மியாவுக்கு வழங்கப் படும் கௌரவம் சிறப்பு வாய்ந்தது என்றாலும் அவர் உயிருடன் இருக்கும் போதே இதனைச் செய்யாதது சற்று உறுத்தலாகவே உள்ளது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 08.10.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.